# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 20 செவ்வாய்க்கிழமை (03-02-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:69


### தென்மராட்சி தெற்கில்.....

தென்மராட்சியின் தனங்களப்பு, மறவன்புலோ, கைதடி நாவற்குழி ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிக்கக்கோரி தென்மராட்சி பிரதேசசெயலகம் முன் நாளை காலை 8மணி முதல் சாகும்வரையிலான உண்ணாவிரதப்போராட்டம் ஆரம்பமாக உள்ளதாக மறவன்புலோ விவசாய சம்மேளனம், தனங்களப்பு கிராம அபிவிருத்திச்சங்கம், பாரதி சனசமூக நிலையம் ஆகியவை அறிவித்துள்ளன.

இது தொடர்பாக மேற்படி அமைப்புக்கள் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தென்மராட்சி தெற்கில் தனங்க

(16ஆம் பக்கம் பார்க்க)

### ஏ-9 வீதியில் மறியல்

தமிழ்மக்களுக்கு சுதந்திரம் கிட்டாத நிலையில் கொண்டாடப்படும் சுதந்திரதினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நாளை வவுனியாவில் ஏ.9 பாதையை வழிமறிக்கும் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

வவுனியாமாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இந்த மறியற போராட்டத்தை நடத்த உள்ளது.

# தமிழர் தாயகத்தில் நாளை துக்க தினம்

## தெற்கில் சுதந்திரதினக் கொண்டாட்டங்கள்

கொழும்பு,பெப்ரவரி3

**ஸ்ரீலங்காவின் 56 ஆவது சுதந்திரதினம் தென்னிலங்கையில் நாளை பெரும் தடல்புடல் ஏற்பாடுகளுடன் கொண்டாடப்படவுள்ளது. ஆனால், இந்தத் தினத்தை 'துக்கதினமாக - கரிநாளாக அனுஷ்டிக்க தமிழர் தாயகம் தயாராகி வருகிறது. நாட்டின் வடக்கு - கிழக்கில் உள்ள பல்வேறு பொது அமைப்புகள் தனித்தனியாகவும், கூட்டாகவும் இதற்கு அழைப்பு விடுத்துள்ளன. அரசியல் சார்பு அணி சேராமல் சுயாதீனமாக இந்த அமைப்புகள் இந்த நடவடிக்கையில் குதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.**

கொழும்பு,பெப்.3

இலங்கையின் 56ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நாளை காலை கொண்டாடப்படும். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் கொண்டாட்டங்களுக்குத் தலைமை வகிப்பர்.

நாளை காலை 6 மணிக்கு நடைபெறும் பௌத்த, இந்து, முஸ்லிம், கிறிஸ்தவ சமய நிகழ்ச்சிகளையடுத்து கொண்டாட்டங்கள் ஆரம்பமாகும். கொண்டாட்டங்களில் இராணுவ அணிவகுப்பு, 2,500 பாடசாலை மாணவ, மாணவியர் பங்குபற்றும் அணிநடை, 250 கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இடம்பெறும்.

சுதந்திர சதுக்கத்திலுள்ள இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவின் உருவச்சிலைக்கு மலரஞ்சலியும் செலுத்தப்படும்.

இதேவேளை, ஸ்ரீலங்காவின் சுதந்திர தினத்தை துக்கதினமாக அனுஷ்

(16ஆம் பக்கம் பார்க்க)

### வலிகாமம் வடக்கில்.....

வலி.வடக்குப் பிரதேசத்தில் மீளக் குடியமர அனுமதிக்கும்படி கோரி நாளை காலை 8 மணிமுதல் கோரிக்கை நிறைவேறும் வரை வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்பாகத் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தினால் இந்தப்போராட்டம் நடத்தப்படுகின்றது.

எத்தனைகாலம் இப்படி அலைவது? அலைந்தது போதும் அணிதிரளுங்கள். ஒன்றாக நின்று ஊர்போய்ச் சேருவோம்! என்று வலி.வடக்கு மக்களுக்கு மேற்படி அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. (ஓ-86)

### மினிபஸ் சேவை நாளை இடம்பெறாது

இலங்கையின் சுதந்திர தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்கக் கோரி விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று நாளை யாழ். மாவட்டத்தில் சிற்றூர்திகளின் சேவைகள் இடம்பெறமாட்டாது.

- இவ்வாறு யாழ். மாவட்டத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் தலைமைச் செயலகம் இவ்

(16ஆம் பக்கம் பார்க்க)



போராட்டத்தில் ஈடுபடும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள

# யாழ்.பல்கலை. ஊழியர்கள் நேற்று முதல் வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் 15 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முதல் மீண்டும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

ஊழியர்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண பல்கலைக்கழக நிர்வாகத்திற்கு ஊழியர் சங்கத்தால் விதிக்கபட்ட காலக்கெடு கடந்த 21 ஆம் திகதியுடன் முடிவடைந்ததாகவும் -

ஆனால், ஊழியர் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் நிறைவேற்றப்படவில்லை என்றும் - இதனையடுத்தே தொடர் வேலைநிறுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் - ஊழியர்சங்கத்தின் தலைவர் சி.தங்கராஜா தெரிவித்தார்.

நேற்று விடுமுறைதினமாக இருந்தபோதும் ஊழியர்கள் சங்கத்தினர் காலை 8 மணிமுதல் பல்கலைக்கழக வளாகத்தில் கூடிநின்றனர்.

இந்த வேலைநிறுத்தத்தில் பல்கலைக்கழகப் பாதுகாப்புப் பிரிவினர், நீர்வழங்கல் சேவைப் பிரிவினர் தவிர்ந்த அனைத்து கல்விசாரா ஊழியர்களும் ஈடுபடுகின்றனர் என்று அவர் கூறினார்.

யாழ்.பல்கலைக்கழகத்துக்கு வாகன சாரதிகளை நியமிப்பதற்கான எழுத்துப் பரீட்சை நேற்று பல்கலைக் கழகத்தில் இடம்பெற இருந்தது. இந்த நிலையில், பல்கலைக்கழக ஊழியர்களின் போராட்டம் நேற்று ஆரம்பமானதையடுத்து சாரதிகள் நியமனத்துக்கான எழுத்துப் பரீட்சை நேற்று இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-5-6)

# இணக்கத் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதியே முட்டுக்கட்டை!

## பிரதமரின் பிரதிநிதி குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.3

ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே நீடித்துவரும் அரசியல் நெருக்கடிக்கு இணக்கத்தீர்வு காண்பதற்கான அதிகாரிகள் மட்டப் பேச்சுக்கு ஜனாதிபதியே முட்டுக்கட்டை போட்டு வருகிறார் என்று பிரதமரின் தரப்பில் நேற்றுக் குற்றஞ்சாட்டப்பட்டது. பேச்சுக்கு நாள் குறிக்காது ஜனாதிபதி காலத்தை இழுத்தடித்துக் குழப்புகிறார் என்றும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அரசியல் நெருக்கடிக்கு இணக்கத் தீர்வு காண்பதற்கான மனோ - மலிக தலைமையிலான அதிகாரிகள் குழுவின் பேச்சுக்கள் இன்னமும் மீண்டும் நடைபெறாதிருப்பது குறித்து வினவியபோதே பிரதமரின் தரப்புக் குழுவுக்குத் தலைமை தாங்கும் மலிக் சமரவிக்கிரம இவ்வாறு குற்றஞ்சாட்டினார்.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் அரசியல் நெருக்கடி நிலையைத் தீர்த்து அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நல்லுறவை ஏற்படுத்துவதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம் எனவும கூறிய மலிக் சமரவிக்கிரம மேலும் கூறியதாவது:-

"நாம் அக்கறையின்றிச் செயல்படுகிறோம் என்று ஜனாதிபதி தரப்பில் கூறப்படுவதில் உண்மையில்லை.

"நாட்டின் தேசிய நலன் கருதி அரசியல் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதில் பிரதமர் பெரிதும் அக்கறையுடனேயே இருக்கின்றார். பிரதமரின் வழிகாட்டலில் பல்வேறு விட்டுக்கொடுப்புகளுடன் நாங்களும் பேச்சுக்களில் கலந்துகொண்டோம்.

அண்மையில் இருதரப்பினருக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது சிக்கலான விடயங்கள் தொடர்பாக கடந்த 30ஆம் திகதி மீண்டும் கூடிப் பேசுவது எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இறுதிநேரம் வரை ஜனாதிபதி தரப்பிலிருந்து எந்த விதமான தகவலும் வரவில்லை.

இது தொடர்பாக ஜனாதிபதியின் விசேட ஆலோசகர் மனோ தித்தவெலவுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டபோதும் எவ்விதமான தகவலும் இல்லை. இறுதியாக, தொலைபேசி மூலம் திகதியை அறிவிப்பதாகக் கூறினார். ஆனால், இன்று வரை எந்தவித அறிவிப்பும் கிடைக்கவில்லை.

பிரதமரின் தரப்பில் ஆர்வம் காட்டப்படவில்லை என்று கூறுவது உண்மைக்கு மாறானதாகும். இன்றும் கூட நேரடிப் பேச்சுக்களுக்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். எனவே, தேசிய நலன்கருதி இந்த நெருக்கடி நிலைக்கு பரஸ்பர தீர்வுகாண ஜனாதிபதி முன்வரவேண்டும்."

- இவ்வாறு மலிக் சமரவிக்கிரம கூறினார்.

### வித்துடல் விதைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

சுகவீனம் காரணமாகச் சாவடைந்த 2ஆம் லெப்டினன்ட் யாழின்பனின் (முத்தையா புஷ்பராசா - அராலி தெற்கு) நினைவஞ்சலிக் கூட்டமும் வித்துடல் விதைப்பும் இன்று இடம் பெறவுள்ளது.

அவரது வித்துடல் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துவரப்பட்டு, அராலி சரஸ்வதி வித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். அங்கு நினைவஞ்சலிக் கூட்டம் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து ஊர்வலமாக வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துவரப்பட்டு மரியாதை அணிவகுப்பின் பின்னர் விதைக்கப்படும். (ஓ-3)

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் நான்கு கட்சிகள் நேற்று இணைந்தன!

கொழும்பு,பெப்.3

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் நேற்று நான்கு கட்சிகள் இணைந்துகொண்டன. இதற்கான கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

தேசிய ஐக்கிய முன்னணி (நு.ஆ), மக்கள் ஐக்கிய முன்னணி, மக்கள் கட்சி, தேச விடுதலை மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கொண்ட கட்சிகளாகும்.

ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவம் நேற்று பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. பிற்பகல் 2.39 மணிக்கு சுபநேரத்தில் இக்கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. தேசிய ஐக்கிய முன்னணி சார்பில் அதன் தலைவி பேரியல் அஷ்ரப், மக்கள் ஐக்கிய முன்னணி சார்பில் அதன் தலைவர் தினேஷ் குணவர்த்தன, மக்கள் கட்சி சார்பில் செயலாளர் நவரட்ன, தேச விடுதலை மக்கள் முன்னணி சார்பில் அதன் தலைவர் பொடி அப்புஹாமி ஆகியோர் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டனர்.

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் அதிகாரிகள் குழு யாழ்.விஜயம்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.மாவட்டத்தில் 'நிக்கொட்' மேற்கொண்டுவரும்திட்டங்களைப் பார்வையிடுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஜோன் கூனி எதிர்வரும் 7 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகின்றார்.

அவருடன் அந்த வங்கியின் அதிகாரி எஸ்.திருச்செல்வம், நிக்கொட்' திட்டப் பணிப்பாளர் எஸ்.லங்காநேசன் ஆகியோர் வருகின்றனர்.

'நிக்கொட்' அமைப்பு மருதங்கேணியில் மேற்கொள்ளும் திட்டங்களை அன்றைய தினமும் -

ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப்படும் திட்டங்களை மறுதினமும் - அவர்கள் பார்வையிடுவார்.

சகல 'நிக்கொட்' ஒப்பந்தகாரர்களையும் தொழில்நுட்ப அதிகாரிகளையும் குறிப்பிட்ட தினங்களில் வேலைத்தளங்களில் பிரசன்னமாக இருக்கும்படி அந்த அமைப்பின் யாழ். மாவட்டப் பிரதித்திட்டப் பணிப்பாளர் க.நவரத்தினராஜா கேட்டுள்ளார்.

(ஓ-3)

## பசளை விலைகளைக் குறைக்கக் கோரி

# ஆறாம் திகதி விவசாயிகள் உண்ணாவிரதப் போர்

கொழும்பு,பெப்.3

விவசாயிகளும் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்துக்குத் தயாராகிறார்கள் யூரியா உட்பட பசளை விலைகளை எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னர் குறைக்காவிடின் 6ஆம் திகதி காலை முதல கொழும்பில் இப்போராட்டம் ஆரம்பிக்கப்படுமென அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் கூறுகிறது.

யூரியா பசளை விலையை 500 ரூபா வரை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென விவசாய அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க இச்சம்மேளனத்துடன் நடத்திய பேச்சில் உறுதியளித்திருந்தாராம்.

எனவே, அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படும் வரை உண்ணாவிரதம் தொடருமெனவும் சம்மேளனம் கூறுகிறது.

பசளை விலையைக் குறைக்குமாறு கோரி அநுராதபுரம், பொலன்னறுவை, அம்பாந்தோட்டை, மஹியங்கனை ஆகிய இடங்களில் விவசாயிகள் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# இங்குள்ள பாடசாலைகளைப் புனரமைக்க மலேஷியாவில் நிதி திரட்ட நடவடிக்கை

## சர்வதேசக் கல்வியக ஆலோசகர் வாக்குறுதி

யாழ்ப்பாணம்,பெப்.3

மலேஷியாவில் உள்ள இலங்கையர்களிடமும் அங்குள்ள பொது அமைப்புகளிடமும் நிதி திரட்டி யாழ்.குடாநாட்டு பாடசாலைகளின் புனரமைப்புக்கு உதவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சர்வதேச கல்வியகத்தின் நிபுணத்துவ ஆலோசகரும மலேஷிய ஆசிரியர் சங்கத்தின் முன்னாள் செயலாளருமான கே.ராஜகுரு இவ்வாறு தெரிவித்தார்.

மலேஷியாவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அவரை வரவேற்கும் நிகழ்வும், அவருடனான கலந்துரையாடலும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது.

மேற்படி சங்கத்தின் யாழ்.மாவட்டத் தலைவர் கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கே.ராஜகுரு மேலும் தெரிவித்ததாவது:-

ஆசிரியர்கள் மனநிம்மதியுடன் இருந்தாலேயே அவர்கள் மாணவர்களுக்கு சிறந்த முறையில் கல்வியை வழங்கமுடியும். ஆனால், இங்கு அத்தகைய நிலை இருப்பதாகத் தெரியவில்லை.

ஆசிரியர்களுக்கு போதிய சம்பளம் வழங்கப்படுவதாகத் தெரியவில்லை. ஆசிரியர்கள் பல பயிற்சிகளைப் பெற்றிருந்தும் அதற்குரிய சம்பள உயர்வுகள் உரிய முறையில் வழங்கப்பட்டதாகத் தெரியவில்லை. இது ஓர் அரசியல் பிரச்சினை, இதனை அரசாங்கம்தான் தீர்த்து வைக்கவேண்டும்.

உலக வங்கி நிதி வழங்குகின்ற நாடுகளில் முப்பது மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தில் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது. ஆனால், வட பகுதியில் 60 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதத்தில் உள்ளனர் என்று கூறப்படுகின்றது. இது மிகவும் மோசமான நிலையாகும். மலேஷியாவில் சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் இப்படியான நிலை இருந்தது.

ஆனால், இப்பொழுது அங்கு ஆசிரியர்களுக்கு உரிய சலுகைகள் வழங்கப்பட்டு கல்வி நிலை உரிய தரத்தில் பேணப்படுகின்றது.

இங்கு பாதுகாப்புக் கெடுபிடிகள் அவதானிக்க கூடியதாக உள்ளது. படையினரின் பிரசன்னமும் அதிகமாக இருக்கிறது. இதனால் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கின்றது.

கடந்த காலப் போரினால் குடாநாட்டில் பல பாடசாலைகள் சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றன. இந்த நிலைமையினை எடுத்துக்கூறி மலேஷியாவில் வாழுகின்ற இலங்கையர்களிடமும் பொது அமைப்புக்களிடமும் நிதிதிரட்டி இங்குள்ள பாடசாலைகளைப் புனரமைப்பதற்கும கல்விச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் என்னால் இயன்ற பங்களிப்பை வழங்குவேன் என்று தெரிவித்தார். (ஓ-4-5)



இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ். அலுவலகத்தில் நேற்று நடந்த வரவேற்பு நிகழ்வில், சர்வதேசக் கல்வியகத்தின் நிபுணத்துவ ஆலோசகர் எ.ராஜகுரு மங்கள விளக்கேற்றுகிறார். இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் சிரேஷ்ட துணைப்பொதுச் செயலாளர் த.பஞ்சலிங்கம், தமிழர் ஆசிரியர் சங்க யாழ். மாவட்டத் தலைவர் பொ.கணேசமூர்த்தி மற்றும் செயலாளர் க.குமாரசாமி ஆகியோரும் படத்தில் உள்ளனர்.

# குப்பிவிளக்குகளால் விபத்துகள்!

யாழ்ப்பாணம்,பெப்.3

குப்பி விளக்குகள் தட்டுப்பட்டு விழுந்து பற்றியெரிந்த வெவ்வேறு சம்பவங்களில் எரிகாயமடைந்தவர்கள் என்று கூறப்படும் இரு பெண்கள் நேற்று முன்தினம் இரவு யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அல்லைப்பிட்டியில் நடந்த சம்பவத்தில் உதயகுமார் ரஞ்சினிதேவி (வயது 39) என்பவர் தலைப்பக்கத்தில் குப்பிவிளக்கை வைத்து விட்டு உறங்கினார் என்றும் -

அப்போது குப்பிவிளக்குத் தட்டுப்பட்டுச் சரிந்து வீழ்ந்து பற்றியெரிந்ததில் அவர் தீக்காயங்களுக்கு உள்ளானார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

கொக்குவில் மேற்குக் கேணியடிப் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில்,

சுதாகரன் கவிதா (வயது 20) என்ற குடும்பப்பெண், குப்பிவிளக்கு எரிந்து கொண்டிருந்த நிலையில் மண்ணெண்ணெய் நிரப்பினார் என்றும -

அப்போது குப்பிவிளக்கு சரிந்து தீப்பற்றியதில் அவர் எரிகாயங்களுக்கு உள்ளானார் என்றும் - தெரிவிக்கப்பட்டது. (ஓ-15)

# சமய சந்நிதிகளில்

வடமராட்சி,பெப்.3

ஊடுப்பிட்டி தெற்கு அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 9.45 மணிக்கும் 10.16 மணிக்கும் இடையிலான சுபவேளையில் நடைபெறவுள்ளது. (எ-10-173)

★ ★ ★

வடமராட்சி,பெப்.3

பொலிகண்டி, உப்புக் கிணற்றடி இருப்புமுனைப் பிள்ளையார் கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளது.(எ-10-173)

★ ★ ★

சண்டிலிப்பாய்,பெப்.3

மாதகல், அரசடி சித்திவிநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 7 மணி தொடக்கம் 8.57 மணி வரையான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. (எ-10-135)

★ ★ ★

வடமராட்சி,பெப்.3

வல்வெட்டித்துறை ஸ்ரீ வாலாம்பிகா தேவி சமேத ஸ்ரீ வைத்திலிங்க சுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 7.18 மணி தொடக்கம் 8.51 மணி வரையான சுபநேரத்தில் நடைபெறவுள்ளது. (எ-10-173)

★ ★ ★

இணுவில்,பெப்.3

கோண்டாவில் வடக்கு அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலய மணவாளக்கோல சங்காபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. (எ-10-49)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.3

தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலய மணவாளக்கோல விழாவும், தைப்பூச உற்சவமும் முறையே நாளை புதன்கிழமையும் நாளை மறுநாள் வியாழக்கிழமையும் நடைபெறவுள்ளன.

மணவாளக்கோல விழா நாளை காலை 9.30 மணிக்கும், தைப்பூச அபிஷேகம் நாளைமறுதினம் வியாழக் கிழமை காலை 9 மணிக்கும் நடைபெறும். (எ-10)

★ ★ ★

வலி.வடக்கு,பெப்.3

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தில் நாளைமறுதினம் தைப்பூசத் தினத்தன்று பாலகர்களுக்கு ஏடு தொடக்கும் நிகழ்வு இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அன்றைய தினம் 8.30 மணிக்கு துர்க்கா தோட்டம் யாத்திரிகா மண்டபத்தை கலாநிதி துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைக்கவுள்ளார்.

தைப்பூசத்தையொட்டி திருவீதி உலாவும் இடம்பெற உள்ளது.(ஓ-86)

★ ★ ★

வலி.வடக்கு,பெப்.3

மல்லாகம் தெல்லியம்பற்றை ஸ்ரீ ஞான வைரவர் சுவாமி ஆலய மகா கும்பாபிஷேகத்தையொட்டி இன்று காலை 9.00 மணிக்கு இடம்பெறும் யாக பூசையைத் தொடர்ந்து எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள் மண்டலாபிஷேகம் இடம்பெறவுள்ளது. (ஓ-8)

★ ★ ★

தென்மராட்சி,பெப்.3

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் தைப்பூசத் தினத்தன்று பிற்பகல் 4.00 மணிக்கு விசேட பூசையும் சண்முகார்ச்சனையும் இடம்பெற்று திருவீதியுலா இடம்பெறுமென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஓ-117)

★ ★ ★

யாழ்ப்பாணம்,பெப்.3

சாவகச்சேரி, மட்டுவில் வடக்கு புனித லூர்து அன்னை ஆலய வருடாந்த திருவிழா நாளை புதன்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறும். திருப்பலியைத் தொடர்ந்து திருச் சொரூபப பவனியும் இடம்பெறும். (ஓ-8)

## லொறிச் சாரதிக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.கல்வியங்காடு ஆடியபாதம் வீதியில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த லொறி-சைக்கிள் விபத்தில் சம்பந்தப்பட்ட லொறிச் சாரதியை எதிர்வரும் 12ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி யாழ்நீதிவான் ஆர்.ரி.விக்கினராஜா உத்தரவிட்டார்.

நேற்று நடந்த மரண விசாரணையை அடுத்து நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். (ஓ-3)

## இடம்மாற்றம்

கொழும்புத்துறை,பெப்.3

யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் 4ஆம் இலக்க ஓட்டுமடம் கிளை நேற்றுத் திங்கட்கிழமை முதல் புதிய கட்டடத்திற்கு இடம்மாற்றம் செய்யப்பட்டது.

ஓட்டுமடம் சந்திப் பகுதியில் அமைந்துள்ள இந்தக்கிளையை புதிய கட்டடத்தில் சங்கத் தலைவர் சூ.சிறில் திறந்துவைத்தார். சங்கத்தின் மேலதிகாரிகள், கிளைக்குழு உறுப்பினர்கள இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். (ஓ-30)

# கடலகப் பயிற்சி வகுப்பு இன்று ஆரம்பம்

குருநகர்,பெப்.3

யாழ்.பாங்சால் வீதியில் அமைந்துள்ள கடலோட்டு மற்றும் கடற்றொழில் எந்திரவியல் கல்லூரியினால் நடத்தப்பட உள்ள கடலக தொழில்நுட்பப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளதாக கல்லூரி அதிபர் இ.செபஸ்தியாம்பிள்ளை அறிவித்துள்ளார். இந்த வகுப்புக்கள் நேற்று ஆரம்பமாகுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், நேற்றைய தினம் அரச விடுமுறை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதால் இந்த வகுப்புக்கள் இன்று ஆரம்பமாகின்றன. பயிற்சியாளர்கள் இன்று, அழைப்புக் கடிதங்களில் குறிப்பிடப்பட்ட நேரத்தில் தவறாது கல்லூரிக்கு வந்து பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு அதிபர் கேட்டுள்ளார். (ஓ-51)

# சுகாதார ஊழியர்களின் எட்டு நாள் உண்ணாவிரதப் போராட்டம் முடிவு

## அமைச்சுச் சுற்றறிக்கை உத்தியோகபூர்வமாகக் கையளிப்பு

கொழும்பு,பெப்.3

சுகாதார சேவை ஊழியர்கள் கடந்த எட்டு நாள்களாக மேற்கொண்ட உண்ணாவிரதப் போராட்டம் நேற்று முற்பகல் கைவிடப்பட்டது. அரசுக்கும் - சுகாதார சேவை ஊழியர்கள் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் காணப்பட்ட இணக்கப்பாடு உத்தியோகபூர்வ சுற்றறிக்கையாக சங்கப்பிரதிநிதிகளிடம் நேற்று கையளிக்கப்பட்டதையடுத்தே இப்போராட்டம் முடிவுக்கு வந்தது.

கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமான சாகும் வரையிலான உண்ணாவிரதப்போராட்டப் பிரச்சினையில் நேற்றுமுன்தினம் பிரதமர் தலையிட்டதையடுத்து சாகும் வரையிலான உண்ணாவிரதத்தைக் கைவிட்டு சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தில் ஊழியர்கள் மீண்டும் இறங்கினர்.

ஏற்கனவே நடைபெற்ற பல்வேறு பேச்சுக்களின்போதும் நாம் ஏமாற்றப்பட்டே வந்துள்ளோம். எனவே, அமைச்சரவை உபகுழுவினருடன் நடத்திய பேச்சின்படி உத்தியோகபூர்வ சுற்றறிக்கை வெளியாகும்வரை சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தில் ஈடுபட்டோம்.

எங்களுடைய கோரிக்கையின்படி சுகாதார அமைச்சின் செயலாளா உத்தியோகபூர்வ சுற்றறிக்கையை எங்களிடம் கையளித்தார் என்று ஊழியர் சங்கங்களின் இணைப்புச்செயலாளர் .ரவி குமுதேஷ் கூறினார்.

நேற்று நண்பகல் உண்ணாவிரதிகளுக்குப் பழச்சாறு வழங்கப்பட்டதுடன் உண்ணாவிரதப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

சுகாதார அமைச்சுச் செயலாளர் டாக்டர் ரெஜி பெரேரா விடுத்துள்ள சுற்றறிக்கையில் சம்பள உயர்வு குறித்துப் பிரஸ்தாபித்துள்ளார்.

சம்பள உயர்வு உடனடியாக வழங்கப்படும் என்றும் - சம்பளப் பாக்கி வழங்கப்படமாட்டாது என்றும் -

அச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஓ-3-15)

# கோட்டை ரயில் நிலையம் எதிரே ரயில் ஊழியர்கள் இன்று ஆர்ப்பாட்டம்

## வேலைநிறுத்தம் நேற்றும் தொடர்ந்தது

கொழும்பு,பெப்.3

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள ரயில்வே ஊழியர்கள் இன்று நண்பகல் கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தவுள்ளனர். தமது கோரிக்கைகளை வலியுறுத்தவே அவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துகின்றனர்.

ரயில் ஊழியர்களின் வேலைநிறுத்தம் நேற்று ஏழாவது நாளாகத் தொடர்ந்தது.

இதேவேளை, நேற்று நண்பகல் அலரி மாளிகையில் திறைசேரி ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம், ரயில்வே அதிகாரசபைத் தலைவர் மனதுங்க, பிரதமரின் ஆலோசகர்கள் ஆகியோருடன் ரயில்வே ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் பேச்சு நடத்தினர். இப்பேச்சுகளையடுத்து, ரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தம் ஒரு முடிவுக்கு வரலாமென ரயில்வே தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

## உடுகம்பொலவுக்கு எதிரான நடவடிக்கைக்குச் சிபார்சு

கொழும்பு,பெப்.3

அத்துருகிரிய 'மிலேனியம் சிற்றி' இராணுவ இல்ல முற்றுகையில் சம்பந்தப்பட்ட உதவிப் பொலீஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொலவை கட்டாய விடுமுறையில் அனுப்புமாறு பொலீஸ்மா அதிபர் இந்திரா டி. சில்வா தேசிய பொலீஸ் ஆணைக் குழுவுக்கு சிபார்சு செய்திருக்கிறார் என அறியப்படுகிறது.

குலசிறி உடுகம்பொல மனித அடிப்படை உரிமைகளை மீறியிருக்கிறார் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பதை அடுத்தே பொலீஸ்மா அதிபர் இச்சிபார்சைச் செய்திருக்கிறார் என்று பொலீஸ் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# மாகாணசபைகள் திருத்தச்சட்டமூலம் இன்று ஒரே நாளில் நிறைவேறும்

நாடாளுமன்றத்தில் மாகாண சபைகள் திருத்தச் சட்ட மூலம் மீதான விவாதம் இன்று நடைபெறும். வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர ஏனைய ஏழு மாகாண சபைகளுக்கும் ஒரே தினத்தில் தேர்தலை நடத்த மாகாண சபைகள் சட்டத்தில் வழிசெய்யவே இத்திருத்தம் கொண்டுவரப்படுகிறது.

சகல அரசியல் கட்சிகளும் இத்திருத்தத்தை ஏற்றுக்கொண்டிருப்பதால் இந்தத் திருத்தச் சட்டம் மீதான விவாதம் சபையில் இரண்டு மணி நேரம் மட்டுமே நடைபெற்று அது அங்கீகரிக்கப்படும்.

நாடாளுமன்றத்தில் திருத்தச் சட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின் வடமேல் மாகாணசபையைத் தவிர ஏனைய ஆறு மாகாண சபைகளையும் கலைத்துவிடுவதற்கான சிபார்சுகளை மாகாண ஆளுநர்களிடம் தெரிவிக்கும்படி ஜனாதிபதி அம்மாகாண முதலமைச்சர்களுக்கு அறிவித்துள்ளார். வடமேல் மாகாணசபையின் ஆயுள் எதிர்வரும் எட்டாம் திகதியுடன் முடிவடைகிறது. ஏழு மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# மினா நெரிசலில் சிக்கி 4 இலங்கையர் மரணம்!

கொழும்பு,பெப்.3

புனித மக்காவிலுள்ள மினா நகரில் ஏற்பட்ட சனநெரிசலில் சிக்குண்டு இறந்தவர்களில் 4 இலங்கையரும் அடங்கியுள்ளனர். நால்வர் காணாமற்போனார்கள். அவர்களில் மூவர் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டனர். ஒருவரை மட்டும் காணவில்லை. பலர் காயமுற்றுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புனித ஹஜ் கடமையின் போது பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்களுக்கு அவசர உதவிகளை வழங்குமாறு முஸ்லிம் சமய விவகாரத்துக்குப் பொறுப்பான அமைச்சர் ரவூப் ஹக்கீம் இலங்கை ஹஜ் குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்றுள்ள மு.கா.எம்.பி.ரிசாத் பதியுதீனுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

சம்மாந்துறையைச் சேர்ந்த அலியார் அமீர் அலிலெப்பை, அப்துல் அஸீஸ் அபூதாலிப், மாத்தறை கலெ வெலயைச் சேர்ந்த ரியாஸ் முஹம்மது பாஹிமன், கொழும்பு புதுக்கடையைச் சேர்ந்த எம்.எச்.எம்.மதனி ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

சனநெரிசலில் காணாமற்போன மூன்று இலங்கையர்களையும் தேடிக கண்டுபிடிப்பதில் முஸ்லிம் விவகாரத் திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என்று மக்காவிலிருந்து ரிஷாத் பதியுதீன் எம்.பி. தொலைபேசியில் தொடர்புகொண்டு தெரிவித்தார் என அவரது இணைப்புச் செயலாளர் இர்ஷாத் நேற்றுத் தெரிவித்தார்.

மினா நகரில் கொல்லப்பட்ட நான்கு இலங்கையரது சடலங்கள் நேற்று மினா பள்ளத்தாக்கிலுள்ள முஆ என்ற இடத்தில் அடக்கம் செய்யப்பட்டன.


# அணுவாயுதத் தொழில்நுட்பத்தை விற்றார் பாகிஸ்தான் விஞ்ஞானி!

இஸ்லாமாபாத்,பெப்.3

பாகிஸ்தானில் அணு ஆயுதத் தொழில்நுட்பத்தின் தந்தை என்று அழைக்கப்படுபவரும் நாட்டின் அணு சக்தித் தொழில்நுட்பத்துறைத் தலைவருமான அப்துல் காதீர் கான் அணு ஆயுதங்கள் தயாரிப்பது தொடர்பான தொழில்நுட்பங்களை வேறு நாடுகளுக்கு விற்றதை ஒப்புக்கொண்டுள்ளார் என்று அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

அவர் லிபியா, ஈரான், வடகொரியா ஆகிய நாடுகளுக்கு அணு ஆயுதத் தொழில்நுட்பத்தை சட்டவிரோதமாக விற்பனை செய்து பெரும் தொகைப் பணத்தைப் பெற்றுள்ளார் என்று அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதனை அடுத்து அவர் அணு சகதித் தொழில்நுட்பத்துறைத் தலைவர் பதவியில் இருந்து கடந்த சனிக்கிழமை நீக்கப்பட்டார். தொடர்ந்து அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். அணுசக்தித் துறையைச் சேர்ந்த வேறு சில அதிகாரிகளும் இதில் தொடர்புபட்டுள்ளனர் என்று பாகிஸ்தான் அரச அதிகாரிகள் கூறுகின்றனர்.

காதீர் கானிடம் இராணுவ அதிகாரிகள் தொடர்ந்து விசாரணைகளை நடத்தினர். 11 பக்கங்கள் அடங்கிய தங்கள் அறிக்கையை அவர்கள் அதிபர் முஷாரப்பிடம் கையளித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.



அந்த விசாரணை அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

1986முதல் 1993 வரை அணு ஆயுதத் தொழில் ரகசியங்களை வெளிநாடுகளுக்கு விற்று காதீர் கான் கோடிக்கணக்கான ரூபாய் பணம் சம்பாதித்துள்ளார்.

ஆபிரிக்க நாடு ஒன்றில் அவர் தனது மனைவி பெயரில் ஆடம்பர ஹோட்டல் ஒன்றையும் கட்டியிருக்கின்றார். இந்த ஹோட்டலுக்குத் தேவையான விலையுயர்ந்த பொருள்களை அவர் பாகிஸ்தான் இராணுவ விமானம் மூலம் கொண்டு சென்றுள்ளார். தனது அதிகாரத்தை அவர் இதன் மூலம் தவறாகப் பயன்படுத்தி உள்ளார். அப்துல் கானுடன் வேறு 4 விஞ்ஞானிகளும் இந்த ஆயுதத் தொழில்நுட்ப விற்பனையில் தொடர்புபட்டுள்ளனர்.

- என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

தனது குற்றங்களை காதீர் கான் ஒப்புக்கொண்டார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை -

பாகிஸ்தான் எதிர்க்கட்சியினர் காதீர் கானை பதவியில் இருந்து விலக்கியதற்கும் அவரை வீட்டுக் காவலில் வைத்ததற்கும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவின் அழுத்தம் காரணமாகவே அதிபர் முஷாரப் இந்த மாதிரியான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். ஆனால், பாகிஸ்தான் வெளிவிவகாரத் துறைச் செயலர் இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளார். (ம)

## இராணுவத் தளபாடங்கள் தயாரிப்பதற்கு இந்தியா - ரஷ்யா திட்டம்

மொஸ்கோ,பெப்.3

இராணுவத்துக்குத் தேவையான புதிய வகை இராணுவத் தளபாடங்களைக் கூட்டாகத் தயாரிக்க இந்தியாவும் ரஷ்யாவும் திட்டமிட்டுள்ளன.

மொஸ்கோவில் உள்ள ரோசோபோரோன் ஏற்றுமதி நிறுவனத்தின் துணைப் பொதுச் செயலாளர் விக்டர் கோமார்டின் வெளியிட்டுள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இராணுவத்துக்குத் தேவையான தளபாடங்கள், எதிர்காலத்தில் தேவைப்படும் தளபாடங்கள் ஆகியவற்றைக் கூட்டாகத் தயாரிப்பது பற்றி இந்தியாவும், ரஷ்யாவும் பேசிவருகின்றன. போக்குவரத்து விமானங்கள் இந்திய விமானப் படைக்கும் ரஷ்ய வமானப் படைக்கும் அதிகம் தேவைப்படுகின்றன. இவற்றையும் கூட்டு முயற்சியில் தயாரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ம-8)

# மெக்காவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 260ஆக உயர்வு

புனித மெக்காவில் 'ஹஜ்' கடமைக்காகச் சென்று சனநெரிசலில் சிக்கி உயிரிழந்த யாத்திரிகர்களின் தொகை 260 ஆக உயர்ந்துள்ளது.

'ஹஜ்' சடங்கின் இறுதி நிகழ்ச்சியாக சாத்தான் மீது கல்லெறியும் நிகழ்வில் கலந்துகொள்வதற்கு 20 லட்சத்துக்கும் அதிகமான யாத்திரிகர்கள் மெக்கா அருகே உள்ள மினாவுக்குச் சென்றனர்.

'ஜமாரத்' என்ற குறுகிய பாலம் வழியாக அவர்கள் சென்றபோது கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் சிக்கி மூச்சுத் திணறியும் கீழே விழுந்து மிதிபட்டும் 244பேர் பலியானார்கள். 250இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிலர் அங்கு மரணமானார்கள். இதனையடுத்து உயிரிழந்தோர் தொகை 260 ஆக உயர்ந்துள்ளது.

உயிரிழந்தோரில் பெரும்பாலானோர் சவூதி அரேபியாவைச் சேர்ந்தவர்களெனத் தெரிவிக்கப்படுகின்றது.

மீட்புப்பணிகளில் சவூதி பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர். (ம-8)

# அதிக குழந்தைகள் பெறுவோருக்கு பல்வேறு சலுகைகள் வழங்கப்படும்

## சிங்கப்பூர் பிரதமர் அறிவிப்பு

சிங்கப்பூர்,பெப்.3

அதிக குழந்தைகளைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு பல்வேறு சலுகைகளை வழங்கவுள்ளதாக சிங்கப்பூர் பிரதமர் கோசொக் டாங் அறிவித்துள்ளார்.

மூன்று குழந்தைகளையோ அல்லது அதற்கு மேற்படி குழந்தைகளையோ பெற்றுக்கொள்பவர்களுக்கு மானியம், வரிச்சலுகை, ஊக்குவிப்புக் கொடுப்பனவு என்பன வழங்கப்படும் என அவர் தனது அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளில் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த முன்னர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதனால், இந்நாடுகளில் மக்கள் தொகை எதிர்பார்த்த அளவைவிட அதிகமாகவே குறைந்துவிட்டது.

முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இளவயதினரின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிட்டது. இதனால் நாட்டில் பொருளாதாரம், தொழில் வளர்ச்சி என்பன பாதிப்படையக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதனையடுத்தே, அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளவதற் கான புதிய பிரசார நடவடிக்கை ஒன்றை சிங்கப்பூர் அரசு மேற்கொண்டுள்ளது.

இதுவரை இரு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளாதீர்கள் என பிரசாரம் செய்துவந்த சிங்கப்பூர் அரசு, இப்போது மூன்று பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என பிரசாரம் செய்ய ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 2006ஆம் ஆண்டில் இருந்து மக்கள் தொகை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம-8)

# ஈராக் போர் குறித்து சுதந்திர விசாரணை!

## ஜனாதிபதி புஷ் அறிவிப்பு



வாஷிங்ரன்,பெப்.3

ஈராக் போரை ஆரம்பிக்க அமெரிக்கா ஆதாரமாகக் கருதிய புலனாய்வுத் தகவல்கள் குறித்து சுதந்திரமான விசாரணை நடைபெறும் என்று ஜனாதிபதி புஷ் அறிவித்திருக்கிறார்.

எப்போது விசாரணைகள் ஆரம்பமாகும் என்பதை அவர் தெரிவிக்கவில்லை. ஆனால், மிக விரைவில் மேற்படி விசாரணை நடைபெறும் என்று வெள்ளைமாளிகை தெரிவித்திருக்கிறது.

ஈராக்கில் ஆய்வு நடத்திய அமெரிக்க ஆயுதக் குழுவின் தலைவர் டேவிட் கே, தனது பதவியை திடீர் இராஜினாமாச் செய்ததையடுத்தே மேற்படி விவகாரம் சூடுபிடித்தது.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இல்லை என்று பதவி விலகிய டேவிட் கே கூறி வருகிறார். அத்துடன், ஈராக் போர் முடிந்து பல மாதங்களாகிவிட்ட நிலையிலும் இன்னமும் அங்கு பேரழிவு ஆயுதங்களை அமெரிக்கப் படை கண்டுபிடிக்கவில்லை.

இதனால், ஈராக் மீது போர் தொடுப்பதற்கு அமெரிக்காவுக்கு ஆதாரமாக இருந்த புலனாய்வுத் தகவல் குறித்து சர்ச்சை கிளம்பியிருக்கிறது.

புலனாய்வுத் தகவல் எந்தளவுக்கு உண்மையானது? என்பது குறித்து அறிய தானும் விருப்பம் கொண்டுள்ளேன் என்று ஜனாதிபதி புஷ் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இது குறித்து சுதந்திரமான விசாரணை நடைபெறவேண்டும் என்று ஜனநாயகக் கட்சியினர் கோரிக்கை விடுத்தனர். ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் வேளையில் மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருப்பது புஷ் அரசுக்கு சிக்கலைக் கொடுத்திருக்கிறது.

எனினும், இது குறித்து சுதந்திர விசாரணை நடத்த புஷ் ஒப்புக்கொண்டிருக்கிறார். இந்த விசாரணைகளுக்கு ஜனாதிபதி புஷ்ஷும் முகம் கொடுக்க நேரிடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஈராக்கில் ஆயுதக் கிடங்கு வெடித்தது: அதை சூறையாட முயன்ற 20 பேர் பலி!

பதவி கவிழ்க்கப்பட்டு பின்னர் கைதுசெய்யப்பட்ட சதாம் ஹுசைனின் படையிடம் இருந்து கைப்பற்றி குவிக்கப்பட்டிருந்த ஆயுதங்களை சூறையாட முயன்ற இருபது பேர் அவை வெடித்துப் பலியாகினர்.

போலந்து படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள கர்பலா நகரில் இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றது.

சம்பவம் நடந்தபோது அப்பகுதியில் போலந்து படையினர் காவல் காத்து நின்றனர். அவர்களின் தடைகளையும் தாண்டி ஆயுதக் கிடங்கிற்குள் இருபது ஈராக்கியர்கள் நுழைந்தனர்.

எனினும், திடீரென அந்த ஆயுதக் கிடங்கு வெடித்துச் சிதறி, அதற்குள் நுழைந்த அனைவரும் சிதறிப் பலியாகிவிட்டனர்.

ஆனால், மேற்படி ஆயுதக் கிடங்கிற்குள் நுழைந்த இருபது பேரும் ஆயுதக் கிடங்கை வெடிக்க வைத்து தற்கொலை செய்துகொண்டனர் என்று அங்குள்ள போலந்து படையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

கர்பலா நகரில் இருந்து 120 கிலோ மீற்றர் தென்மேற்காக உள்ள வர்சா என்ற பகுதியில் இருந்த ஆயுதக கிடங்கே வெடித்துச் சிதறியிருக்கிறது. இது பாலைவனப் பகுதியாகும். இங்கு 9 ஆயிரத்து ஐந்நூறு போலந்து படையினர் உள்ளனர். அவர்களின் பிரதான முகாமுக்கு அருகிலேயே மேற்படி ஆயுதக் கிடங்கு இருந்தது.

இச்சம்பவத்தில் போலந்து படையினர் எவரும் பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி ஆயுதக் கிடங்கில் இருந்தவை சதாம் ஹுசைனின் படையிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் தானா? என்பது சந்தேகமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. பறிமுதல் செய்யப்பட்ட பாரிய ரொக்கெட் குண்டுகள், ஷெல்கள் என்பனவே இந்தக் கிடங்கில் இருந்தன என்று போலந்து படை அதிகாரி லெப். கேணல் ஸ்ரெஸ்லெக்கி தெரிவித்திருக்கிறார்.

போலந்து படையினரின் தளத்தினுள், அதுவும் அங்கிருந்த ஆயுதக் கிடங்கினுள் இருபது ஈராக்கியர்கள் நுழைந்தது அமெரிக்க தலைமையிலான கூட்டுப் படைக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

### அமைச்சர்கள், ஆளுநர் உட்பட 56 பேர் பலி!

இதற்கிடையே குர்திஷ் கட்சிகளின், அலுவலகங்கள் இரண்டில் தற்கொலைப் படைத் தாக்குதல் நடந்ததில் ஆளுநர், அமைச்சர்கள் உட்பட 56 பேர் பலியானார்கள்; இருநூறுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பக்தாத்தில் இருந்து 350 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது அர்பில் நகரம். குர்திஷ் இனமக்கள் பெரும்பான்மையாக இங்கு வசிக்கின்றனர். இங்குள்ள குர்திஷ்தான் ஜனநாயகக் கட்சி அலுவலகம் மற்றும் தேசிய குர்திஷ்தான் கூட்டமைப்புக் கட்சி அலுவலகங்களில் நுழைந்த தற்கொலைப் படையினர் சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை வெடிக்கச்செய்தனர்.

பக்ரீத்தையொட்டி இந்தக் கட்சி அலுவலகங்களில் ஏராளமானவர்கள கூடியிருந்தனர். இரண்டு அலுவலகங்களில் வெடித்த குண்டுகளால் குர்திஷ் பகுதி துணை ஆளுநர், இரண்டு அமைச்சர்கள், பொலீஸ் தலைமை அதிகாரி உட்பட 56 பேர் வரை கொல்லப்பட்டனர்; ஏராளமானோர் படுகாயமடைந்தனர்.

அமெரிக்க பாதுகாப்பு துணை அமைச்சர் போல் உல்போவிட்ஸ் பாக்தாத் வந்திருந்த சமயமே மேற்படி தாக்குதல் நடந்திருக்கிறது.



காஸா பகுதியில் இஸ்ரேலியர் நேற்று நடத்திய தேடுதலில் 4 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். ஜிகாத் அமைப்பின் உள்ளூர் தலைவரும் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த பலஸ்தீனர் ஒருவர் வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்படுகிறார்.

## முதல்முறையாக ஒரே மேடையில் வாஜ்பாய், ஜெயலலிதா

இந்தியப் பிரதமர் வாஜ்பாயும், தமிழக முதல்வர் ஜெயலலிதாவும் முதன்முறையாக ஒரே மேடையில் கன்னியாகுமரியில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் சூழ்நிலையில் இவ்விரு தலைவர்களும் கலந்துகொள்ளும் இந்தக் கூட்டத்தைத் தேர்தல் பிரசாரத்துக்கான அச்சாணியாக்வே இரு கட்சியினரும் கருதுகின்றனர்.

பா.ஜ.கவுடன் தி.மு.க. கூட்டணி அமைத்து மத்திய அரசில் இடம்பெற்றிருந்த காலத்தில் பிரதமர் வாஜ்பாய் தமிழ்நாட்டுக்கு வந்த பல சந்தர்ப்பங்களில், அவருடன் எந்த விழாவிலும் முதல்வர் ஜெயலலிதா கலந்துகொண்டதில்லை.

இந்நிலையில், திடீரென கன்னியாகுமரிக்கு பிரதமர் வருவது அறிவிக்கப்பட்டது. அதே விழாவில், முதல்வர் ஜெயலலிதாவும் கலந்துகொள்வார் என அரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

எதிர்பாராத இந்த மாற்றங்கள் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.கவினிடையே மிகுந்த உற்சாகத்தை ஏற்படுத்தியது. மக்களை ஈர்க்கக்கூடிய இரு தலைவர்களும் ஒரே மேடையில் பங்கேற்றது தேர்தலில் நல்ல பலனை ஏற்படுத்தும் என்பது அவர்களது நம்பிக்கை. இது அரசு விழா என்றபோதிலும், தேர்தல் நெருங்கிவரும் சூழ்நிலையில் எதிர்பாராமல் ஏற்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை இரு கட்சியினரும் நன்கு பயன்படுத்திக் கொள்ளத் திட்டமிட்டுள்ளனர்.

துணைப் பிரதமர் அத்வானியும் முதல்வர் ஜெயலலிதாவும் ஒரே மேடையில் பேசியுள்ள நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. ஆனால், பிரதமர் வாஜ்பாயுடன் ஒரே மேடையில் முதல்வர் ஜெயலலிதா கலந்துகொண்டு பேசுவது இதுவே முதல்முறை என்பதால் கட்சித் தொண்டர்கள் மிகுந்த உற்சாகத்தில் இருந்தனர் என்றார் பா.ஜ.க. மாநிலச் செயலர் எஸ்.ஆர்.சரவணப்பெருமாள்.

# வேலை வாய்ப்பு

புதிய வேலைத்திட்டம்

**DRAVIDIAN TECHNICAL SCIENCE CONSULTING COMPANY**

**No. 201/1, Suvisudtharama Road, Off Havelock Road, Colombo - 06**

01. Architect - சிற்பி, நிர்மாணிப்பவர்.
02. Electrical - Electronic Engineer.

தேவையான ஆவணங்களுடன் நேரில் தொடர்புகொள்ளவும்.

06.02.2004 வெள்ளிக்கிழமை

காலை 9.00 - 10.00 மணி வரை

111/1, ஓட்டுமடம் வீதி,
யாழ்ப்பாணம்.

(27969) (30-21-14-18)



## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

### உடற்கல்விப் போதனாசிரியர் - (வருகை)

எமது இல்லத்துப் பிள்ளைகளுக்கு பகுதிநேர அடிப்படையில் உடற்பயிற்சி அளிக்க ஆசிரியர் (ஆண்/பெண்) தேவை. பல்கலைக்கழகத்தில் உடற்கல்வி டிப்ளோமா அல்லது ஆசிரிய கலாசாலை (உடற்கல்வி ~ விசேடம்) சான்றிதழ் பெற்றவர்கள் முன்னுரிமை பெறுவர்.

வயதெல்லை: 30 - 40
விண்ணப்பங்கள்: 15.02.2004 இன் முன்
ஊதியம்: மணித்தியாலம் 100/-

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

சோ.பத்மநாதன்
செயலாளர்.

(C/33071)(34-14-18-21)


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை



26.01.2004 தை 12ஆம் நாள் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

பிரம்மஸ்ரீ

**சபாபதி ஐயர் சிவகடாஷக் குருக்கள்**

(பிரதமகுரு, நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் தேவஸ்தானம்)

அவர்களுடைய ஆத்மசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

| | |
|---|---|
| 04.02.2004 புதன்கிழமை பகல் 10.00 மணி | - தசாகம் |
| 05.02.2004 வியாழக்கிழமை பகல் 10.00 மணி | - ஏகோதிட்டம், மாசியம் |
| 06.02.2004 வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணி | - சபிண்டீகரணம் |
| 07.02.2004 சனிக்கிழமை பகல் 10.00 மணி | - கிரகசாந்தி சமாராதனை |

உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திக் கிரியைகளில் கலந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

*நுணாவிற்குளம் கண்ணகை அம்மன் கோவில், சாவகச்சேரி.*

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்.

(27974)(32-14-18-21-)

## அடிக்கல் நடும் விழா

வடமராட்சி,பெப்.03

தென்புலோலி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் கோவில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள பிள்ளையார் மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நாளைமறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு நடைபெறும்.

அடிக்கல் இந்துகலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் நட்டுவைப்பார்.(ம-173)

## திருடர் தொல்லை அதிகரிப்பு

அரியாலை,பெப்.3

அரியாலை நாயன்மார்கட்டுப் பகுதியில் இரவு நேரங்களில் திருடர்களின் தொல்லை அதிகரித்திருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவுநேரங்களில் வீடுகளின் மின்சாரத்தை துண்டித்து விட்டு திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர். (ம-17)

## தட்டிக் கேட்ட தந்தைக்கு கோடரி வெட்டு

யாழ்ப்பாணம்,பெப்.3

இளம் பெண்ணுடன் பகிடி சேஷ்டை புரிந்த இளைஞர்களைத் தட்டிக் கேட்ட பெண்ணின் தந்தையும் சிறிய தந்தையும் கோடரி வெட்டுக்கு இலக்காகி தலையில் படுகாயமடைந்தனர்.

அரியாலையில் கடந்த சனியன்று மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த இருவரே காயமடைந்தனர்.

பக்கத்து வீட்டு இளைஞர் ஒருவர் குறித்த இளம் பெண்ணிடம் பகிடி, சேஷ்டை புரிந்துள்ளார். இது குறித்து இளைஞனின் வீட்டாருடன் பெண்ணின தந்தையும் சிறிய தந்தையும் முறையிட்டுள்ளனர். இதை அடுத்தே இளைஞனும் அவரைச் சார்ந்தவர்களும் வீடு தேடிச் சென்று ஒருவர் கட்டிப்பிடிக்க மற்றொருவர் கோடரியால் வெட்டினார் என்று -

காயமடைந்தவர்கள் தெரிவித்தனர். (ம-15)


### மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த பெற்றோர் தமது 30 வயது 5′ 10″ உயர முடைய **Computer Engineer, Canadian Citizen** உள்ள தமது மகனுகத தகுந்த மணமகளை எதிர்பார்ககின்றனர். நட்சத்திரம் சித்திரை 4ஆம் பாதம்.

பெண்கள் - ரேவதி, சுவாதி, பரணி, கார்த்திகை, மூலம், கேட்டை, அனுஷம், உத்திராடம், சதயம், பூரம், திருவோணம் ஆகிய நட்சத திரங்களில் இருப்பது விரும்பத் தக்கது.


தொடர்புகளுக்கு:
0777 721515

(27972)


## 31 ஆம் நாள் நினைவலை

யாழ்ப்பாண மண்ணில் : 15.05.1962

டென்மார்க் விண்ணில் : 04.01.2004



கண்ணுக்குள் தெரிகின்ற கனிவான முகம் எங்கே?
மண்ணுக்கு விடுதலைக்காய் உழைத்து மாண்புடன் திகழ்ந்தாயே!
விண்ணுக்குச் சென்றாலும் எம் நெஞ்சைவிட்டு அகலாத தெய்வமே!
எண்ணுக்குள் அடங்காதையா நாம்படும் வேதனைகள்!

அமரர்
நாட்டுப்பற்றாளர்

**கணேசையா விமலேஸ்வரன்** (விமல்-ராசு)

ஆதம சாநதககாக டெனமாரக அபராம அமபாளை இறைஞசுகனறோம்.
ஓம் சாந்தி!

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (03-02-2004) செவ்வாயக்கிழமை டென்மார்க், வயன் நகரில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும். இதனையொட்டி கொழும்புத்துறை இல்லத்தில் இன்று நடைபெறவுள்ள நினைவுப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி:
திருமதி ரஞ்சினிதேவி விமலேஸ்வரன்
பிள்ளைகள்:
திலீகா,ஜெனுசன்.
உறவினர்கள்

இல. 7. சென்மேரிஸ் 2ஆம் ஒழுங்கை.
கொழும்புத்துறை.
யாழ்ப்பாணம்.

(C/33070)

தகவல்:க.ஜெரைட்ணசிங்கம் (சகோதரன்)
(பட்டசாலை வைத்திய அதிகாரி பணிமனை)
க.பகீரதன் (மைத்துனர்)
(உதயன் பணிமனை கணனிப்பிரிவு)


நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

*கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட*

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்)

(28666)



## சைவ வித்தியா விருத்திச் சங்கம்

### இலவச கணனிப் பயிற்சி

எமது சங்கம் தன் கல்விப் பணியின் ஓர் அங்கமாக வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள, தகுதியான பெண்பிள்ளைகளுக்கு கணனிப் பயிற்சி வழங்கவுள்ளது. திருநெல்வேலியைச சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

கல்வித் தகைமை: க.பொ.த.(உ/த)
க.பொ.த.(சா/த) - ஆங்கிலத்தில் சித்தி
கற்கைநெறி: 03 மாதம்
வயதெல்லை: 20 - 30
பதிவுக் கட்டணம்: ரூபா 300/-
விண்ணப்பங்கள்: 15.02.2004 இற்கு முன்

சோ.பத்மநாதன்
செயலாளர்.

பொ.அரவிந்தன்
கல்வித் திட்டப் பணிப்பாளர்.

*கலாசாலை வீதி,*
*திருநெல்வேலி.*

(C/33072) (34-14-18-21)


## 31ஆம் நாள் நினைவலைகள்

மலர்வு 09 - 04 - 1923



உதிர்வு 04 - 01 - 2004

அமரர்

**வெள்ளையர் கந்தையா**

*ஐயா! ஐயா! எங்கு நீர் சென்றீர் ஐயா?*
*நீர் வாழ்ந்திருந்த இல்லம் இருண்டு விட்டதே!*
*தங்கள் தங்கமேனி எம் கண்களில் தெரிகிறது ஐயா!*
*முப்பத்தொரு நாள் என்ன எத்தனை ஆண்டு காலம்*
*கடந்தாலம் உங்களை மறக்கவே முடியாது ஐயா!*
*உங்கள் ஆத்மா சாந்திபெற*
*ஆண்டவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்*
*ஓம் சாந்தி!*

கோட்டைக்காடு,
மல்லாகம். (27941) (26-18-14-21)

- அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### கந்தையா சிவசுப்பிரமணியம் (J.P.)

*(ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார் – யாழ். அரச அதிபரின் பிரத்தியேகச் செயலர்)*

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு, 3ஆம் கட்டையைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்தவருமாகிய கந்தையா சிவசுப்பிரமணியம் அவர்கள் 24.01.2004 சனிக்கிழமை கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - நாகம்மா தம்பதிகளின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற செனகரத்தினம் - மல்லிகை புஷ்பம் தம்பதிகளின மூத்த மருமகனும் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் சாந்தி (உரும்பிராய்), சிவகரன் (தொழில் நுட்பவியலாளர், கொழும்பு மாநகரசபை), ரவி (கனடா), முரளி (லண்டன்), சுதன் (கனடா), சந்திரவதனி (ஆசிரியை, உரும்பிராய் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமுள்ள தந்தையாரும் சண்முகநாதன் (கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், நிர்வாகம், வடகிழக்கு மகாணசபை), பத்மினி (கொழும்பு), ரஞ்சி (கனடா), பிறேமா (லண்டன்), ரதி (கனடா), பகீரதன் (யாழ்.மாவட்ட தகவல் அலுவலர், மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம்) ஆகியோரின் மாமனாரும் பரந்தாமன் (ஆசிரியர், திருகுடும்பக் கன்னியர் மடம்), திருமதி துஷ்யந்தி பரந்தாமன் (யாழ்.போதனா வைத்தியசாலை), மயூரதன் (சுகாதாரத் திணைக்களம், யாழ்ப்பாணம்), இளங்கோதை, பவனந், கஜனந், ஜெரணி, மெலனி, மதுரா, பிரியங்கன், டிலக்ஷன், சுதர்சினி, சஞ்சயன், தனஞ்சயன், ஐஸ்வரியா ஆகியோரின் பாசமுள்ள பேரனும் நிருத்தனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 04.02.2004 புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு இறுதிக்கிரியைகளின் பின்னர் அவரது உரும்பிராய் இல்லத்திலிருந்து தகனக்கிரியைக்காக உரும்பிராய் இருளன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.கு.சண்முகநாதன்
*(கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வட–கிழக்கு மாகாண சபை)*
உரும்பிராய் வடக்கு

உரும்பிராய் வடக்கு.
உரும்பிராய்

உதயன்

## தமிழருக்குச் சுதந்திரம் எப்போது?

நாட்டின் 56 ஆவது சுதந்திர தினம் நாளையாகும். இத்தினத்தைக கட்சி வேறுபாட்டின்றி பெருத்த எடுப்பில் கொண்டாடுவதற்கு தெற்கில் ஆரவாரமான ஏற்பாடுகள் நடக்கின்றன.

ஆனால், தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கிலோ நிலைமை தலைகீழ்.

நாட்டின் சுதந்திர தினத்தை 'அடிமைத் தினமாக' அனுஷ்டிக்கும்படி தமிழர் தாயகத்தின் பல திசைகளில் இருந்தும் கோரிக்கைகள் கிளம்பியிருக்கின்றன.

"வேதனையில் துவண்டு, வாழ்க்கையே இருண்டு போயுள்ள தமிழ் மக்களின் வாழ்வில் இது சுதந்திர தினமல்ல; இதனைத் துக்க தினமாக அனுஷ்டிக்க வேண்டும்" - என்று வவுனியா வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் தெரிவித்திருக்கிறது.

தமிழ் மக்களுக்கு சுதந்திரம் கிட்டாதநிலையில் கொண்டாடப்படும் சுதந்திர தினத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அன்றையதினம் (நாளை) கண்டி வீதி 'ஏ-9' பாதையில் வழி மறித்து ஆட்சேபப் போராட்டம் நடத்தவும் அந்த அமைப்பு அழைப்பு விடுத்திருக்கின்றது.

இதேசமயம், நாளைய தினத்தை தமிழ் மக்கள் கரிநாளாக அனுஷ்டிப்பதுடன் அன்றைய தினம் நண்பகல் 12 மணிவரை கடைகளையும் வர்த்தக நிலையங்களையும் மூடி, அனைத்து இடங்களிலும் வாகனங்களிலும் கறுப்பு - வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிடுமாறு மட்டக்களப்பிலிருந்து கோரிக்கை முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இதுதொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் விடுத்துள்ள பகிரங்க அறிவிப்பில் 'பெப்ரவரி 4ஆம் திகதி சிங்கள தேசத்தின் சுதந்திரதினம். பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் கைகளிலிருந்து தமிழ் மக்களின் இறைமை சிங்களப் பேரினவாதிகளின் கைகளுக்குக் கொடுக்கப்பட்ட அன்றைய தினம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை கரிநாள்' - என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இதேபோன்று, சுதந்திரதினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிப்பது என யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியமும் முடிவு செய்திருக்கின்றது. யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொது நிறுவனங்கள், அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், கூட்டுறவு மையங்கள், பாடசாலைகள், தனியார் வர்த்தக ஸ்தாபனங்கள் அனைத்தும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்று அது கேட்டுள்ளது.

சுதந்திர தினத்தன்று வாகனங்கள் அனைத்தினதும் வழமையான போக்குவரத்துச் சேவைகளை நிறுத்தி பகிஷ்கரிப்புக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி அது கோரியிருக்கின்றது.

இதேசமயம், வலி. வடக்கு மற்றும் தென்மராட்சி தெற்குப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள், தங்களைத் தங்கள் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி நாளைய சுதந்திரதினத்தன்று தொடக்கம் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டங்களை ஆங்காங்கே ஆரம்பிப்பதற்கும் உத்தேசித்திருக்கின்றனர் என்று அறியவருகின்றது.

கடந்த வருடமும் யுத்தம் நிறுத்தப்பட்டு அமைதி நிலவிய போதிலும், நாட்டின் சுதந்திர தினம் தமிழப் பகுதிகளில் துக்க தினம் போன்றே அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றது. ஆனால், இரண்டாவது பெரிய தேசிய இனமான தமிழினம், பேரினவாதிகளின் அடிமைகளாக இருப்பதை உறுதி செய்யும் வகையிலான அரசமைப்பு ஒன்றின் கீழேயே இலங்கைக்கு பிரிட்டன் சுதந்திரத்தை வழங்கியது. ஆக, தமிழர்களைப் பொறுத்தவரை வெள்ளைக்கார எஜமானர்களின் அடிமைகள் என்ற நிலையிலிருந்து சிங்களப் பேரினவாதிகளின் அடிமைகள் என்ற நிலைமை மாற்றத்துக்கு மட்டுமே அவர்கள் உள்ளானார்களே தவிர, அவர்களுக்குச் சுதந்திரம் கிட்டவில்லை.

1956இல் கொண்டுவரப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் தொடக்கம் யுத்தத்தின் பெயரால் அண்மைக் காலத்தில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடூரக் கெடுபிடிகள் வரை, அனைத்துமே இந்த அடிமைத்தனையின் வெவ்வேறு வடிவங்களே தவிர வேறில்லை.

ஆகவே, நாளைய சுதந்திர தினம் தொடர்பாக ஈழத் தமிழர் கொண்டிருக்கும் வெறுப்புணர்வுடன் கூடிய எண்ணக் கருவின் உள்ளார்ந்த அர்த்தத்தை - தாற்பரியத்தை - அவர்களின் அடிமனதில் உள்ள ஆதங்கத்தை - தென்னிலங்கைச் சிங்கள மக்களும் சர்வதேச சமூகமும் புரிந்து கொள்வது - உணர்ந்து கொள்வது - அவசியமாகும்.

ஏனைய இனத்தவர்கள் போன்று சம அந்தஸ்துடன் - கௌரவத்துடன் - முழு அளவில் நிறைந்த உரிமைகளுடன் - வாழவேண்டும் என்ற ஈழத் தமிழரின் நியாயமான அபிலாஷைகள் என்று நிறைவுசெய்யப்படுகின்றனவோ அன்றுதான் தமிழர்களுக்குச் சுதந்திர தினமாகும்.

அதை அமைதி முறையில் ஈழத் தமிழர்களுக்கு வழங்க முன்வருவதுதான் பேரினவாத சமூகத்தின் சுதந்திர தின திடசங்கற்பமாக இருக்கவேண்டும்.

அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டால் மட்டுமே நாட்டுக்கு உண்மைச் சுதந்திரம் - விடுதலை - கிட்டும்.

# வடக்கு-கிழக்கில் மூன்று லட்சம் வீடுகள் உலக வங்கி நிதியில் புனரமைக்கப்படும்

யாழ்ப்பாணம்,பெப்.3

கடந்தகால யுத்தத்தினால் வடக்கு - கிழக்கில் அழிவுற்ற மற்றும் சேதமடைந்த வீடுகளைப் புனரமைக்கும் திட்டம் உலக வங்கியினால் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென 15 கோடியே 50 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அழிவடைந்த மற்றும் சேதமடைந்த வீடுகளின் விவரங்களை உலக வங்கியும் சர்வதேச அபிவிருத்தி நிதியமும் இணைந்து ஏற்கனவே திரட்டியுள்ளன.

இதன்படி, வடக்கு - கிழக்கில் 3 லட்சத்து 25 ஆயிரம் வீடுகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

இவற்றைப் புனரமைப்பதற்கான ஒப்புதலை அரசிடமிருந்து உலக வங்கி பெற்றுள்ளது.

வடக்கு - கிழக்கில் இப்பணியை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு, உலக வங்கி, சர்வதேச அபிவிருத்தி நிதியம் ஆகியவற்றின் அதிகாரிகள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களைக் கொண்ட குழுவொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.(ம-10-185)

# சுதந்திரதினம் சிங்கள மக்களுக்கானதே; அது தமிழ் பேசும் மக்களுக்கு உரியதல்ல

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.3

இலங்கையின் சுதந்திரதினம் சிங்கள மக்களுக்கானதே தவிர அது தமிழ் மக்களுக்கானதல்ல.

நாளைய சுதந்திர தினத்தைப் பகிஷ்கரிக்குமாறு கோரி ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையின் சுதந்திர தினமென்பது, சிங்கள மக்களின் சுதந்திர தினமாக இருந்து வந்ததேயன்றி தமிழ் மக்களின் அல்லது ஏனைய சிறுபான்மை மக்களின் சுதந்திரதினமாக என்றும் இருந்ததில்லை.

1972ஆம் ஆண்டு இலங்கையை ஒரு குடியரசாகப் பிரகடனப்படுத்தியபோது திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கொண்டுவந்த அரசியல் சாசனமும், அதன்பின்னர் 1978ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்த்தன கொண்டுவந்த அரசமைப்பும் தமிழ் தேசியத்துக்கு எதிரான வகையில், அவர்களை இந்த நாட்டின் இரண்டாம் தரப்பிரஜைகளாக்கும் விதத்திலேயே உருவாக்கப்பட்டது. இந்த அரசியல் சாசனங்களுக்கும் தமிழர் பிரதிநிதிகளுக்கும், இதை உருவாக்குவதில் எந்த சம்பந்தமும் இருக்கவில்லை என்பதும் வெளிப்படையான உண்மை. இந்த அடிப்படையில் சுதந்திரதினமென்பது தமிழர்களுக்கல்ல என்பதும் அதனை நாங்கள் பகிஷ்கரித்து வந்தோம் என்பதும் தான் வரலாறு.

இந்த ஒருதலைப்பட்சமான அரசமைப்புக்களை மாற்றி இந்த நாட்டில் உள்ள சகல இனமக்களும் கௌரவத்துடனும், சுயமரியாதையுடனும், தனித்துவத்துடனும் வாழக்கூடிய வகையில் ஒரு புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும். அதன் மூலம் தமிழ் பேசும் மக்கள் தமது சொந்தத் தாயகத்தில் சுயாட்சி கொண்டவர்களாக - தம்மைத்தாமே ஆழக்கூடியவர்களாக - இருக்கவேண்டும்.

ஒரு புதிய சமஷ்டி அரசியல் முறை அமைவிலேயே இது சாத்தியமாகும். இந்த அடிப்படையில், தமிழர் தரப்பின் சார்பாக விடுதலைப் புலிகள் பேச்சுக்களை ஆரம்பிக்க இருந்த சமயத்தில் சிங்களத் தலைமை மீண்டும் இப்பேச்சைக் குழப்பி, நாட்டை ஒரு யுத்த நெருக்கடிக்குள் தள்ளி வருகின்றது. சிங்களத் தலைமைகள் தமது அதிகாரப் போட்டியைத் தீர்த்து, புலிகளுடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டுமென்ற சர்வதேச அழுத்தங்களும் கூட எடுபட்டதாகத் தோன்றவில்லை.

இனப்பிரச்சினைத் தீர்வு என்பதும், பேச்சு என்பதும், அமைதி, சமாதானம் என்பதும், இன்னும் தூரத்துக்கனவுகளாகவே இருந்து வருகின்றன. இதற்கான எதிர்ப்பையும், கண்டனத்தையும் தெரிவிக்க வேண்டியதும் எமது கடமையாகும். (ம-8)

# அல்லிப்பளை அரசினர் பாடசாலை 8 வருடங்களின் பின் மீண்டும் திறப்பு

தென்மராட்சி,பெப்.3

கடந்த எட்டு வருடங்களாக மூடப்பட்டிருந்த பளை அல்லிப்பளை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அண்மையில் மீண்டும் சொந்த இடத்தில் கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகத்தினால் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கடந்த வருடம் அப்பகுதியில் மக்கள் மீளக்குடியேறியதையடுத்து கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம பாடசாலையை சொந்த இடத்தில் மீண்டும் இயக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார். அதற்கமைய அவசர உதவித் திட்டத்தின் கீழ் பாடசாலைப் புனரமைப்புக்கு 89 ஆயிரம் ரூபாவினை கிளிநொச்சி அரச அதிபர் ஒதுக்கியிருந்தார்.

பாடசாலை அபிவிருத்திச் சஙகங்கத்தினர் இப்பாடசாலையை புனரமைத்ததையடுதது கற்றல் செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. புதிய அதிபராக ஆதங்கவேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

1996ஆம் ஆண்டு முதல் படையினர் அப்பகுதியில் நிலைகொண்டிருந்ததால் பாடசாலை மூடப்பட்டிருந்தது. (ம-117)

# இந்த ஆண்டு 345 பேருக்கு குடாநாட்டில் வீடமைப்புக் கடன்

யாழ்ப்பாணம்,பெப்.3

குடாநாட்டில் புதிதாக வீடமைக்கவும், வீடுகளைத் திருத்தவும் இவ்வாண்டு 345 பேருக்கு கடன் வழங்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முடிவு செய்துள்ளது என்று அச்சபையின் யாழ். மாவட்டப் பொதுமுகாமையாளர் எஸ்.மாசிலாமணி தெரிவித்தார்.

வீடமைப்பு அதிகார சபையின் பணிகள் தொடர்பாகக் கேட்டபோதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் வீடமைப்புக் கடன் வழங்க 60 லட்சம் ரூபாவை தலைமையகம் வழங்கியிருந்தது. மேலும் வழங்கப்பட்ட கடனில் இருந்து மீளக்கிடைத்த நிதியைப் பயன்படுத்தி ஒரு கோடியே 70 லட்சம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளோம்.

ஒருவருக்கு 50 ஆயிரம் ரூபா வரை 11 சதவீத வட்டிக்குக் கடன் வழங்குகின்றோம்.

கடந்த வருடத்தைவிட இந்த ஆண்டு கூடுதலானவர்களுக்குக் கடன் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார் அவர். (ம-3)

# இறைவன் தந்த தானம் மரியாள்

ஒவ்வொரு வருடமும் உலகில் உள்ள கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மரியாளுக்கு முதலில் எடுக்கின்ற திருவிழா என்றால் அது காணிக்கை மாதா திருநாளே. மோயீசன் திருசசட்டத்தில் எழுதியிருந்தபடி தனது தலைப்பேறான ஒரேயொரு மகனுமாகிய இயேசுவைப் பிறந்த நாற்பதாம் நாள் ஜெருசலேமிலுள்ள தேவாலயத்துக்கு எடுத்துச்சென்று கடவுளுக்கு காணிக்கையாகக் கொடுக்கப்பட்டதையே இன்றைய விழா நினைவுபடுத்துகின்றது.

**இன்று உலகெங்கிலும் இயேசுவின் தாய் மரியாள் இயேசுவைக் கடவுளுக்குக் காணிக்கையாக்கிய திருவிழா கொண்டாடப்படுகிறது. அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

மரியாள் தனது உலக வாழ்வை "இயேசு மகனின் ஆன்மீக நலனுக்காக அர்ப்பணித்தாள்; இறைவனுக்குரிய கடமைகளை நிறைவேற்றினாள். எனினும், மனுக்குல மக்கள் யாவருக்காகவும் வாழ்ந்து தியாகியுமானாள். புனிதர்களையெல்லாம் ஒரு புனித வரிசையில் நிறுத்தும்போது மரியாள் அவர்களையெல்லாம் பார்க்க உயர்ந்தவளாகவே காணப்படுகின்றாள். ஏனெனில், புனிதர்கள் உலக வாழ்வில் ஈடுபட்டுத் தம் சுய எண்ணங்களைக் கட்டுப்படுத்தி இளமையிலோ, முதுமையிலோ புனிதத் தன்மையைப் பெற்றார்கள். ஆனால், மரியாளோ பிறபபிலேயே புனிதத்தன்மையைப் பெற்றுப் பிறந்தாள்; இறைமகனுக்கு தாயானாள். கன்னியும், தாயும், சீடத்தியுமாக வாழ்ந்தாள். மரணத்திலும் அவள் ஆன்ம சரீரத்துடன் விண்ணேற்றம் அடைநதாள். அதனால் புனிதர்கள் பெறாத சிறப்பிடத்தை மரியாள் பெற்றுக் கொண்டாள்.

இயேசுவின் பிறப்பு அறிவிப்பில் இறை செயலே முதலிடம் பெறுகின்றது. கடவுள் தம் தூதரை அனுப்பி மரியாளின் இசைவைக் கேட்கிறார். கணவனை அறியாத மரியாள் இறைவார்த்தைக்குச் செவி சாய்க்கின்றாள்; இசைத்து போகின்றாள். "இதோ ஆண்டவருடைய அடிமை" இது அவள் வாழ்வின் குறிக்கோள். தூய ஆவியானவரே நிழலிட்டு மரியாளின செயற்பட்டாலும் அவளுடைய "ஆகட்டும்" என்ற வார்த்தையாலும் கன்னிமையைத் தாயாக்குகின்றாள்.

'இதோ ஆண்டவருடைய அடிமை' என்ற வார்த்தையில் மரியாள் தன்னை முழுவதும் தானே விரும்பி இறைவனுக்கு கொடையாக அளிக்கின்றாள். அடிமை என்னும்போது தன்னிடம் தனகென்று எதுவுமே இல்லை. தன்னுடையதெல்லாம் இறைவனுடையதே என்றாள். இந்தநிலையில், கன்னி தாயாகின்றாள். இயேசுவுக்கு அவள் தாயாகின்றபோது கிறிஸ்தவர்கள் யாவருக்கும் அவள் தாயாகின்றாள். ஆகவே, கிறிஸ்தவர்கள் மரியாளைத் தம் தாயாக ஏற்றும், மரியாளை தலைமை சீடத்தியாகவும் வைத்து வழிபடுகின்றார்கள். இறைவனின் திட்டத்திலே மரியாள் பிறப்பதற்கு முன்பே இயேசுவிற்குத் தாயாக தேர்ந்து கொள்ளப்பட்டிருக்கிறாள். இறைவனின் திருவுளத்திற்கேற்ப தாயாகி துன்ப சூழலில் தம் மகனைப் பெற்றெடுத்து திருச்சட்ட முறைகளுக்கு கீழ்ப்பட்டு அவற்றை நிறைவேற்றி மகனுடைய துயர்களிலே பங்குகொள்ளுகின்றாள்.

மரியாளிடம் இறையன்பு எவ்வளவு தூரம் பூரணமாக இருநததோ, அதேயளவில் பிறர் அன்பும் இருந்ததை அவளுடன் சோநது வாழ்ந்தவர்கள் கண்டறிந்தனர். அதனால், விண்ணகம் சென்றாலும் மரியாள் தெய்வலோக வரங்களை இறைவனிடமிருந்து பெற்றுத்தர வல்லமையாக இருக்கின்றாள். அதனால், விண்ணில் எமக்காக பரிந்து பேசும் அன்புள்ள தாயாக மரியாளை இறைவன் எமக்குத் தானமாகத் தந்தருளியுள்ளார்.

**க.அருள்நேசன் - குருநகர்**

### நாளை

தை 21
புதன்கிழமை
(04.02.2004)
திதி : திரயோதசி
பகல் 1.19 வரை
நட்சத்திரம்: புநர்பூசம்
பின் இரவு 1.47 வரை
சித்தம்
சுபநேரம்: 5.05-6.35
ராகுகாலம்: 12.35 - 2.05
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மனிதவாழ்வு இறைவன் தந்த ஒரு கொடையாகும். அதனை செழுமையுடன் வாழ்வதே மேலாகும்.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள CL தொடரிலக்கமுடைய A 40 கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: 264, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P. 0777 - 152330 (27966)

நல்ல நிலையிலுள்ள பாவித்த Sony Flat screen 21' T.V., Pioneer DVD Hifi system (3500W) Bajaj Caliber மோட்டார் சைக்கிள் Bajaj Spirit பெண்களுக்கான ஸ்கூட்டர் என்பன உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: T.P.:222 3798. (27931)

ஜன்னல் (புதியது), 3X4 அடி கடைக்குரிய கண்ணாடி சோக்கேஸ் 3 (மூன்று) விற்பனைக்குண்டு. தொடர்பு 22, மருதடி வீதி, யாழ்ப்பாணம். T.P 2226482 (2797)

இருவர் தொடர்புகொள்ளக் கூடிய Sanyo 5K.m Cordless ரெலிபோன், வீதி ஓரத்தில் நாட்டக்கூடிய இருபக்கமும் எழுதக்கூடிய 8'x3' விளம்பரப்பலகைகள், Yamaha 900 Watts ஜெனரேற்றர் என்பன விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: இல.407, பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி. T.P.: 222 5840 (27963)

### இறைச்சிக் கோழி விற்பனைக்கு

Prima, Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதாரமுறைப்படி உடன் சுத்தஞ்செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை), (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச சந்தையடி, நல்லூர். (27839)

### கோழிக்குஞ்சு விநியோகம்

பகிரா இன புறொயிலர் கோழிக் குஞ்சுகள் 04.02.2004 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைகோட்டைச் சந்தி. T.P:35292867. (27927)

பகிரா இன புறொயிலர் குஞ்சுகள 04-02-2004 மாலை 5 மணிக்கு விநியோகிக்கப்படும். பதிவுகளை முன் கூட்டியே மேற்கொள்ளவும். விலை 50 ரூபா. தொடர்பு: முகுந்தன், பாதிரி வளவு, நெல்லியடி. (27819)

### தவறிவிட்டன

கந்தசாமி செல்வராணி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல. 718072964V), விசேட அடையாள அட்டை (0902022638), கிளினிக காட் என்பன 24-01-2004 அன்று யாழ்ப் பாணத்திற்கும் பரமேஸ்வராச் சந்திக குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மாயவன் கொமினிகேசன, இராமநாதன் வீதி (பல்கலைககழகம் முன்பாக) எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (27781)

## போதனா வைத்தியசாலை முறிவு-நெரிவு பிரிவுக்கு நிதியுதவி

வலி.தெற்கு,பெப்.3

யாழ்போதனா வைத்தியசாலையின் முறிவு நெரிவு பிரிவுக்குத் தேவையான அத்தியாவசிய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக 20 ஆயிரம் ரூபா நிதியினை லயன்ஸ் கழகப் பிராந்திய தலைவர் லயன். டாக்டர் செல்வி நவமலர் கனகரட்ணம் போதனா வைத்தியசாலைப் பணிப் பாளிடம் கையளித்துள்ளார்.(ம-8-152)

## முக்கொலை குறித்த விசாரணைகள் ஆரம்பம்

தென்மராட்சி,பெப்.3

கனகன்புளியடிச் சந்தியில் குழந்தை உட்பட ஒரே குடும்பத்தைச சேர்ந்த மூவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டது தொடர்பான விசாரணைகளை சாவகச்சேரி பொலீஸார் ஆரம பித்துள்ளனர்.

கொலை நடந்த வீட்டில் கொலையுண்ட குடும்பம் குடியமர முன்னர் இரு குடும்பங்கள் தங்கியிருந்தன என்றும் -

அந்தக் குடும்பங்கள் பற்றிய விவரங்கள் தேவைப்படுவதால் இந்த வீட்டில் தற்காலிகமாகக் குடியமர்ந்திருந்த குடும்பங்களை சாவகச்சேரி பொலீஸ் நிலையத்திற்கு வருகை தருமாறும் - பொலீஸ் நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி எஸ்.ஏ.எரிக் றோகித கேட்டுள்ளார். (ம-117-31)



## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை தைப்பூச அன்னதானம்

**அம்பிகை அடியார்களே!**

எதிர்வரும் 05-02-2004 வியாழக்கிழமை அம்பாள் ஆலயத்தில் நடைபெறும் தைப்பூச விழாவுக்காக வருகைதரும் அடியார்களுக்கு அவர்களது பிரயாண வசதிகருதி அன்று முற்பகல் 11 மணி தொடக்கம் வழமைபோல் எமது சபையால் அன்னதானம் வழங்குவதற்குச் சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

அத்துடன், விழாவை முன்னிட்டு முதல்நாள் மாலையில் வந்து தங்கும் அடியார்களுக்கும் அன்று (04-02-2004) புதன் இரவுக்குரிய உணவு வழங்குவதற்கான ஒழுங்குகளையும் எமது சபை செய்துள்ளதென்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையினர்**

(சி-33068) (21-14-16)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்**

2003 புலமைப் பரிசில் பரீட்சையில் 138 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவி

செல்வி

**சங்கரி மதனகுமார்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்.

(27947)(40-16-14-21)

## MODERN COLLEGE OF COMMERCE

Kanduvil Lane Chavakachchery

A/L வணிகப்பிரிவு மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

**04.02.2004**

2006 - முதலாவது பிரிவு 8.00 (a.m.)
2005 - இரண்டாவது பிரிவு 9.00 (a.m.)

O/L மாணவர்களுக்கான வர்த்தகமும் கணக்கியலும் 10.00 (a.m.)

கணக்கியல் - T. சுதர்சன்
பொருளியல் - S.S. சிறி
வணிகக்கல்வி - P. ஜனா

(27962) (18-21-14-16)

## தொடர்ந்து செல் தம்பி!

07.12.2003 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றி சித்திபெறத் தவறிய அனைத்து மாணவர்களையும்

"துணிந்து நில்
தொடர்ந்து செல்
தோல்வி கிடையாது தம்பி
உள்ளதைச் சொல்
நல்லதைச் செய்
தெய்வம் இருப்பதை நம்பி"

என்று ஊக்கம் தந்து துயரமடைந்திருக்கும் அவர்களின் பெற்றோர்களையும் சகோதரர்கள் மற்றும் உறவினர்களையும் முயற்சியைப் பெருக்கி துணிந்து நிற்கப் பாடுகின்றேன் - வேண்டுகிறேன்.


163. பலாலி வீதி.
கோண்டாவில்.

(27916) (40-16-14-21)

இ.இராசேஸ்வரன்.

## 3 ஆம் ஆண்டு நினைவாக

மண்ணில் 30 - 05 - 1930



விண்ணில் 03 - 02 - 2001

அமரர்

**சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை**

*எமது குல முதல்வனே! ஐயா!!*
*அல்லும் பகலும் ஓய்வின்றி உழைத்து*
*எம்மை ஆளாக்கி வளர்த்த தெய்வமே!*
*இப்போது நிரந்தரமாய் ஓய்வுவேண்டிச் சென்றதேனோ?*
*உங்கள் திருமுகங் காண ஏங்குகின்றோம் ஐயா!*
*எத்தனை பிறவி எடுத்தாலும் நீங்காது உங்கள் முகம்!*

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

என்றும் நீங்காத நினைவுகளுடன்:
மனைவி: ஆரோக்கியம், மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்.

(27967)(34-14-16-21)



## வடமராட்சிக் கம்பன் கழகம் நடத்தும் சேக்கிழார் விழா

### இரண்டாம் நாள் நிகழ்வு

இன்று (03.02.2004) செவ்வாய் காலை 9.00 மணி (பழைய நேரம்)

இடம்: நெல்லை முருகன் திருமண மண்டபம்
தலைமையுரை: திரு.சி.சிதம்பரப்பிள்ளை (தலைவர், கட்.நெ.ப.நோ.கூ. சங்கம்)
தொடக்கவுரை: திரு.ஆ.சிவநாதன் (ஆசிரியர், நெ.ம்.ம.வித்.)

**விவாத அரங்கு**

பேராசிரியர் அரங்க இராமலிங்கம்

பொருள்

"கற்றவர்க்குப் பெரிதும் களிப்புத் தரும் சொற்றொடர் எது?"

வாழ்த்திவணங்குவாம் - எஸ்.இராஜேஸ்கண்ணா
தத்தா நமர் - செ.சுதர்சன்
நம்மைப்பேணும் அம்மை - கு.பாலசண்முகன்
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார் - ச.லலீசன்
வீடும் வேண்டா விறல் - சி.கேசவன்

### இரண்டாம் நாள் நிகழ்வு

இன்று (03.02.2004) செவ்வாய் மாலை 4.30 மணி (பழைய நேரம்)

இடம்: நெல்லை முருகன் திருமண மண்டபம்
மங்கல இசை: முருகையா குழுவினர்
மங்கல விளக்கேற்றல்: திரு.தி.செல்வராசா (தலைவர், நெல்லியடி சனசமூக நிலையம்)
திரு.வை.சிவயோகநாதன்
இறைவணக்கம்: திரு.வேலாயுதம்
வரவேற்புரை:
தலைமையுரை: கலாநிதி என்.சிவலிங்கராசா
தொடக்கவுரை: பேராசிரியர் எஸ். ஞானகுமரன்
சிறப்புரை: பேராசிரியர் அரங்க இராமலிங்கம்

**சுழலும் சொற்போர்**

நடுவர் - கம்பவாரிதி இ.ஜெயராஜ்

பொருள்

சேக்கிழார் படைப்புக்கு பெரும் புகழ் சேர்ப்பது

வரலாற்றுணர்ச்சியே - சி.கேசவன்
பக்தியே - ச.லலீசன்
சமுதாய சிந்தனையே - செ.சுதர்ஸன்
தொண்டர் சிறப்பே - இ.குமரன்
அற உணர்ச்சியே - S.சந்திரசேகர்
கவித்துவமே - ஸ்ரீ.பிரசாந்தன்

(C/33042)
(24-14-16-21)

- வடமராட்சிக் கம்பன் கழகத்தினர்.

"கம்பன் புகழ்பாடி கன்னித்தமிழ் வளர்ப்போம்"

## நேர் அச்சுப் பொறி (ஓப்செற்) இயக்குநர் தேவை

யாழ்.சாலை கிளிநொச்சியில் அமைந்துள்ள

**அன்பு அச்சகத்திற்கு**

நேரச்சுப் பொறி இயக்குநர் தேவை.

தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு 15-02-2004இற்கு முன் வேண்டுகை செய்யுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.


**அன்பு அச்சகம்**

யாழ். - கண்டி நெடுஞ்சாலை,
கிளிநொச்சி.

(27950) (40-21-14-19)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 05 - 10 - 1908



மறைவு 05 - 02 - 2001

**அமரர் வேலாயுதம் ஆறுமுகம்**

(ஆறுமுகம் தேநீர்ச்சாலை - சாவகச்சேரி)

**திதி: 03-02-2004**

பாசத்தின் உறைவிடமே! பண்பின் இலக்கணமே!!
அறிவுரைகள் பல ஊட்டி வளர்த்த எம்குலவிளக்கே!
மூன்றாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவலைகள்
எங்கள் நெஞ்சங்களை விட்டு அகலவே அகலாது!
உங்கள் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*முதலாம் வட்டாரம்,*
*புங்குடுதீவு.*

- உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

(27965)(34-21-14-16)

யாழ்ப்பாணம்

# தமது நிம்மதிக்காகவே தமிழர்களுக்கு தீர்வை விரும்புகிறார்கள் சிங்களவர்

## சிதம்பரத்தில் அமைச்சர் மகேஸ்வரன் கருத்து

கொழும்பு,பெப்.3

இலங்கையில் தாங்கள் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காகவே தமிழர்களுக்குத் தீர்வுகிடைக்க வேண்டுமென்று சிங்களவர்கள் விரும்புகிறார்கள்.

- இப்படி இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் இந்தியாவில் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழகத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் மகேஸ்வரன் கடந்த 31ஆம் திகதி சிதம்பர நடராஜர் ஆலயத்தைச் சென்று தரிசித்தார். பின்னர் அங்கு அவர் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கையில் இந்துசமய வளர்ச்சி பின்னடைந்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட ஆலயங்கள் யுத்தத்தினால் சேதமடைந்துள்ளன.

மடாதிபதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள சமய ஆர்வலர்கள், மொழியாளர்கள் ஆகியோரை அழைத்து இலங்கையில் பிரசாரம் செய்து இந்து மதத்தைத் தழைக்கச்செய்வோம்.

இலங்கைத் தமிழர்கள் தமிழகத்தை தமது தாய்நாடாகப் பார்க்கின்றனர். தற்போது இலங்கை அரசியலில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில்தான் போட்டி நிலவுகிறது; சிங்களவர்களுக்கும், தமிழர்களுக்கும் அல்ல - இப்படி அவர் கூறியுள்ளார்.

### கிளிநொச்சி மாவட்டத்தில்

# பருவமழை தவறியதால் நெற்செய்கையில் பாதிப்பு

கிளிநொச்சி,பெப்.3

பருவமழை உரிய வேளையில் பெய்யாததால் கிளிநொச்சி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 110 ஏக்கரில் மேற்கொள்ளப்பட்டிருந்த காலபோக நெற்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

உரிய காலத்தில் பருவமழை பெய்யாததால் கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த வருட இறுதியில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை நாளுக்கு நாள் பாதிப்படைந்து வருகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளைப் பிரதேசத்தில் ஆயிரத்து 400 ஏக்கரிலும் பூநகரிப் பகுதியில் 2 ஆயிரம் ஏக்கரிலும் முழங்காவில் பகுதியில் 294 ஏக்கரிலும் அக்கராயனில் 186 ஏக்கரிலும் மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை போதிய நீரின்றி அழியும் நிலையில் உள்ளது.

இதேசமயம், பளைப்பிரதேசத்தில 230 ஏக்கரில் நிலக் கடலை பயிர்களும் நீரின்றிக் கருகும் நிலையை எதிர்நோக்கி உள்ளன. (ஒ-5)

### யாழ். குடாநாட்டிலிருந்து

# இடமாற்றங்கள் கிடைக்காமையால் பொலீஸாருக்குக் கடும் மன உளைச்சல்

எதிர்பார்த்த இடமாற்றங்கள் கிடைக்காமை தங்களைப் பலத்த மன உளைச்சலுக்கு உட்படுத்தியிருக்கின்றது என்று குடாநாட்டில் கடமையாற்றும் பொலீஸ் இடைநிலை அதிகாரிகள் மற்றும் பொலீஸ் அலுவலர்கள் பலர் தெரிவிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டில் ஒரு வருடகாலம் சேவையாற்றினால் நீங்கள் விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் செய்யப்படுவீர்கள் என்ற வாக்குறுதியின் அடிப்படையிலேயே பல பொலீஸார் குடாநாட்டில் கடமையாற்ற அனுப்பப்படுகின்றனர். ஆனால், ஒரு வருடமல்ல தம்மில் பலர் மூன்று, நான்கு வருடங்கள் இங்கு கடமையாற்றி வருகின்ற போதும் இதுவரை இடமாற்றம் தரப்படாதது தமக்கு உளரீதியான பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதாகக் குடாநாட்டில் கடமையாற்றும் பெயர் குறிப்பிட விரும்பாத சில இளநிலை பொலீஸ் அதிகாரிகளும், பொலீஸாரும் தெரிவித்தனர்.

"நீண்ட தூரத்திற்கு அப்பாலிருந்து எனது மனைவி, பிள்ளைகளை விட்டு வந்து இங்கு கடமையாற்றுகிறேன். அவர்களைப் பார்த்து இரண்டு வருடங்களாகிறது. இங்கு கடமையாற்ற எங்களுக்கு வழங்கப்பட்ட காலம் முடிந்துவிட்டது. இடம்மாற்றததிற்கு விண்ணப்பித்தும் இன்னும் அது கிடைக்கவில்லை"- என்றார் ஒரு பொலீஸ் உத்தியோகத்தர்.

"இங்கு சேவைக்காலம் முடிந்த பின் விரும்பிய இடத்திற்கு இடமாற்றம் தருவதாகக் கூறினார்கள். ஆனால், இடமாற்றம் கோரிய பலருக்கு அவர்கள் கோரிய இடம் வழங்கப்படாது வேறு இடங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வளவு காலமும் குடும்பத்தவரைப் பிரிந்திருந்த நாம் இனியும் பிரிந்திருக்க வேண்டுமா?" என ஆதங்கப்படுகிறார் இன்னொரு பொலீஸ் அதிகாரி.

கடந்த காலங்களில் பொலீஸ் மா அதிபரின் கீழான பொலீஸ் திணைக்களம் இடமாற்றங்களைக் கையாண்ட போது இடமாற்றங்கள் விரைவாகக் கிடைத்ததாகவும் தற்போது இடமாற்றங்களைக் கையாளும் பொலீஸ் சேவை ஆணைக்குழு இடமாற்றங்களை தாமதப்படுத்துவதாகவும் ஓர் இளநிலை பொலீஸ் அதிகாரி குறைப்பட்டார். (ம-150)

# பருத்தித்துறை வீதி கல்வியங்காட்டில் சேதம்

## திருத்த நடவடிக்கை இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.3

குடாநாட்டின் மிக முக்கிய வீதிகளில் ஒன்றான பருத்தித்துறை வீதி கல்வியங்காட்டுச் சந்தியில் மிகமிக மோசமாகச் சேதமடைந்துள்ளது. இதனைத் திருத்துவதற்குக் கடந்த இரண்டு மாதங்களுக்கு மேலாகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுக்காதது குறித்து பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சிறு குழிகளுடன் காணப்பட்ட இந்த வீதி கடந்த மழையை அடுத்து மோசமாகச் சேதமடைந்தது. இப்போது வீதியின் நடுப்பகுதியில் பாரிய பள்ளம் தோன்றியுள்ளது. எந்தவொரு வாகனமும் போக்குவரத்துச் செய்ய முடியாத சிரமமான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கும் வடமராட்சிக்கும் இடையிலான பிரதான போக்குவரத்துப் பாதை இந்த வீதி. நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான வாகனங்களும் இந்த வீதியைப் பயன்டுத்தி வருகின்றன.

வீதியின் நடுப்பகுதி சேதமடைந்துள்ளதால் அதனைத் தவிர்த்து போக்குவரத்து விதிமுறைகளுக்கு மாறாக வாகனங்கள் பயணிக்கும் நிலைமை ஏற்படுகிறது. இதனால் விபத்துக்களும சம்பவிக்கின்றன.

பயணிகள் நன்மை கருதி விரைவில் இந்த வீதியைத் திருத்த அதிகாரசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

# இளைஞர் சமுதாயம் சீரழிவதற்கு அவர்களது பெற்றோரே காரணமாவர்

## பேராசிரியர் குமாரவடிவேல் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

இன்றைய இளைஞர் சமுதாயம் சீரழிந்து செல்வதற்குக் காரணம் அவர்களின் பெற்றோர்களே.

- இப்படிக் குற்றஞ்சாட்டினார் யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் கே.குமாரவடிவேல்.

சுவாமி விவேகானந்தர் நற்பணி மன்றம் நடத்திய ஆன்மீக எழுச்சி விழா, நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை நல்லை ஆதீனத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக்கூறினார். நற்பணிமன்றத்தைச் சேர்ந்த செல்வி சிவவதனி கோபால தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பேராசிரியர் மேலும் கூறியதாவது:-

இன்றைய இளைய தலைமுறைக்கு ஆன்மீக வழிமுறைகள் தெரியாது. அவர்களின் பெற்றோரும் அவர்களுக்கு அதனைச் சொல்லிக் கொடுப்பதில்லை. ஆன்மீக வகுப்புக்களுக்குப் பிள்ளைகளை அனுப்புவதுமில்லை. ஏதோ படித்துப் பட்டம்பெற்றால் போதும் என எண்ணுகிறார்கள். ஓர் ஆசிரியருடன் எப்படி நடந்து கொள்ளவேண்டும், பொது இடங்களில் பெரியவர்களை எப்படிக் கனம் பண்ணவேண்டும் போன்ற ஒழுக்க நெறிகள் எதனையுமே அநேக பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்குச சொல்லிக்கொடுப்பதில்லை.

பிள்ளைகளை ஒழுக்கமுள்ளவர்களாக வளர்க்கும் சக்தி, பெற்றோருக்கு உண்டு. ஆனால், அந்த சக்தியை அவர்கள் எவ்வளவு தூரம் பிரயோகிக்கிறார்கள் என்பது கேள்விக்குரியதாகியுள்ளது. இதனால் இன்றைய இளைய சமுதாயம் சீரழிந்து போகிறது. இளைஞர்கள் ஞானமும் வீரமும் உள்ளவர்களாகத் திகழவேண்டும். அதற்கு எமது இந்துசமயமும் ஆலயங்களும் வழிகாட்டி நிற்கின்றன. ஆனால், மன்னர் ஆட்சி முறை நீங்கி பிற நாட்டு ஆட்சிமுறைகள் எமது நாட்டிலும் ஏற்படுத்தப்பட்ட காலம் முதல் ஆலயங்கள் பணம் படைத்தோர் கைகளில் சிக்கிக் கொண்டன.

எமது இந்துசமயம் வீழ்ச்சி அடைவதற்கு அது ஒரு காரணமாக அமைந்தது. அர்ச்சனைச் சீட்டு மற்றும் உபயகாரர் முறைகள் எமது ஆலயங்களை பணம் திரட்டும் மையங்களாக மாற்றின. இந்த நேரத்திலேதான் எமது சமயம் குறித்த விழிப்புணர்வை உலகம் எங்கும் ஏற்படுத்தும் பணியில் சுவாமி விவேகானந்தர் ஈடுபட்டார். இந்துசமயத்திலே புதைந்து கிடந்த ஆன்மீகச் செல்வத்தை வெளிக்கொண்டு வந்து உலகம் எல்லாம் அறியச் செய்தார்.

- இப்படி பேராசிரியர் கே.குமாரவடிவேல் கூறினார். நிகழ்வில் முன்னதாக சுவாமி விவேகானந்தர் நற்பணிமன்ற ஆலோசகர் டாக்டர் ஆர். சிவசங்கர், திருநெல்வேலி இராமகிருஷ்ணமிஷன் தலைவர் இ.ராஜாமகேந்திரசிங்கம் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர். நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். (ம-9)

# குடாநாட்டில் தயாரிக்கப்பட்ட நுளம்புத்திரி ஏப்ரலில் விற்பனைக்கு

யாழ். குடாநாட்டில் தயாரிக்கப்பட்ட நுளம்புத்திரி ஏப்ரல் மாதம் விற்பனைக்கு வருகின்றது.

- இவ்வாறு நுளம்புத்திரி உற்பத்தியாளரும் யாழ். பல்கலைக்கழகப் பட்டதாரியுமான ஆர்.மதிசேகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ் வணிகர் கழக அலுவலகத்தில் குடாநாட்டில் தயாரிக்கப்பட்ட 'பேர்வலைடஸ்' சலவைத்தூள் அறிமுகம் தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டில் கிடைக்கும் மூலிகைப் பொருள்களைக் கொண்டு இந்த நுளம்புத்திரி தயாரிக்கப்பட்டுள்ளது.

தயாரிக்கப்பட்டு வருகின்ற நுளம்புத்திரி ஏப்ரல் மாதம் புதுவருடப்பிறப்புக்கு முன்னர் அறிமுகம் செய்யப்படும்.

இதேவேளை -

இவரே யாழ். குடாநாட்டின் மூலிகைப் பொருள்களால் தயாரிக்கப்பட்ட சலவைத்தூள் உற்பத்தியினையும் மேற்கொண்டுள்ளார். (ம-7)



பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியில் நிர்மாணிக்கப்பட்ட பிரான்பற்று ஸ்ரீ முருகன் முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நாடாவை வெட்டிக் கட்டடத்தைத் திறந்து வைப்பதைப் படத்தில் காணலாம். இவ்விழாவில் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்ட கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபரும் முன்னாள் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளருமான நா.வேதநாயனும் உள்ளார். (ஒ-135)

### சொந்த இடங்களில் மீளக்குடியமர

# மனித உரிமைகள் ஆணைக்குழு அழுத்தம் தர மறவன்புலோ மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.3

மறவன்புலோ மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு மனித உரிமைகள் ஆணைக்குழு அழுத்தம் கொடுக்கவேண்டும்.

- இவ்வாறு மறவன்புலோ விவசாய சம்மேளனமும், தனங்களப்பு கிராம அபிவிருத்திச் சங்கமும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரியிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளன.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சாவகச்சேரிப் பிரதேசத்தின் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் உள்ள எமது சொந்த வீடுகளுக்குச் சென்று மீளக்குடியேறுவதற்கு இராணுவத்தை அனுமதிக்குமாறு கோரி சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்தப்பகுதி மக்களின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதால் இதுவிடயத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# இளம்பரிதி நெதர்லாந்து நாட்டில் அரசியல் கட்சிப் பிரமுகர்களுடன் சந்திப்பு

வெளிநாடு சென்றுள்ள யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நெதர்லாந்து வெளி. விவகார அமைச்சின் ஆசிய விவகாரங்களிற்கான பிரதிநிதி வில் பிறெட் மோர், தெற்காசிய விவகாரங்களிற்கான பிரதிநிதி டிக்கி மெதோஸ்ற் அம்மையார் ஆகியோரை டென்மார்க்கில் உள்ள நெதர்லாந்தின் வெளிவிவகார அமைச்சில் கடந்தவாரம் சந்தித்துப் பேசினார்.

இச்சந்திப்பில் யாழ். மாவட்டத்தின் இன்றைய நிலைவரங்கள் தொடாபாகவும் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்மக்களின் இயல்புநிலையில் ஏற்பட்டுள்ள அவலநிலைபற்றியும், அந்த மக்களிற்கு மேற்கொள்ளவேண்டிய வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கான உடனடி மனிதாபிமான உதவிகள் பற்றியும் மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாகவும் அவர் எடுத்துக்கூறினார்.

இன்று ஏற்பட்டுள்ள சமாதானத்திறகான அச்சுறுத்தல் நிலை பற்றியும் அதனால் ஏற்படப்போகும் தமிழ்மக்களின் பாதிப்புக்கள் பற்றியும் சுட்டிக் காட்டினார்.

மேற்படி சந்திப்பு ஒன்றரை மணித்தியாலங்கள் வரை நீடித்தது. இச்சந்திப்பில் மேலும் பல ஆக்கபூர்வமான விடயங்கள் இருதரப்பாலும் பகிர்ந்து கொள்ளப்பட்டன.

நெதர்லாந்தின் முக்கிய கட்சிகளான Pvda எனப்படும் தொழிற் கட்சியின் வெளிவிவகார பிரதிநிதி பேர்த் கூன்டேர்ஸ் உடனும் Sp எனப்படும் சோசலிசக் கட்சியின் வெளிவிவகார பிரதிநிதியின் காரியதரிசியான குய்டோ பன்லேம்புத் உடனும் இளமபரிதி கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் வடக்கு - கிழக்கு வாழ் தமிழ்மக்களின் வாழ்வு, இயல்பு நிலைக்கு திரும்பாததனாலும் பாதிப்பு நிலைகள் தொடர்வதனாலும் அகதி அந்தஸ்து மறுக்கப்பட்ட தமிழர்களை நெதர்லாந்திலிருந்து திருப்பி அனுப்புவதை மறுபரிசீலனை செய்யுமாறு அவர் கேட்டுக்கொண்டார். (ம)

# கோழிப்பண்ணை நடத்துவோரின் விவரம் திரட்டுகின்றது மாநகரசபை

கோழிப்பண்ணை வைத்திருப்பவர்களின் விவரங்களை யாழ். மாநகராட்சியின் சுகாதாரப் பணிமனையினர் திரட்டிவருகின்றனர்.

கோழிப்பண்ணை வைத்திருப்பவர்கள் பலர் கோழியின் எச்சங்கள், இறைச்சிக்காக வெட்டப்பட்ட கோழிகளின் கழிவுகள் என்பவற்றை வீதிகளில் வீசிவருகின்றனர்.

இதனால், நகரப்பகுதிகளில் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன. இதனைத் தடுப்பதற்கு மாநகர சுகாதார பணிமனை நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது.

முதற்கட்டமாக கோழிப்பண்ணை வைத்திருப்பவர்களின் விவரங்களைத் திரட்டும் நடவடிக்கைகள ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

விவரங்கள் திரட்டப்பட்டதும் கோழிப் பண்ணை உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்படவுள்ளது. அதில், கழிவுகளை சுகாதாரமான முறையில் அகற்றுவதற்குரிய ஏற்பாடுகள் கண்டறியப்படும் என்று யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன் தெரிவித்தார். (ம-7)

### எழுதுமட்டுவாழ், கரம்பகம் பகுதிகளில்

# மீளக்குடியமர்வு அனுமதிக்கு ஏ-9 பாதையில் மறியல்

தென்மராட்சி,பெப்.3

எழுதுமட்டுவாழ் தெற்கு, வடக்கு, கரமபகம், முகமாலை, கிளாலி ஆகிய பகுதிகளில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரி, ஏ-9 பாதையைத் தடைசெய்து மறியல் போராட்டத்தில் ஈடுபட அப்பகுதிமக்கள் முடிவு செய்துள்ளனர்.

இநதப் போராட்டத்தை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன என்றும் -

அப்பகுதி மக்கள் அடுத்த வாரம் கொடிகாமத்தில் ஒன்றுகூடி போராட்டத் திகதி குறித்து முடிவு செய்யவிருக்கின்றனர் என்றும் -

அப்பகுதி மக்கள் நலன்காக்கும் கழகத்தினர் அறிவித்துள்ளனர்.

இதுவிடயமாக, தென்மராட்சிப் பிரதேச செயலகம் முன்பாகவும் மறியல் போராட்டத்தை நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் மேற்படி நலன்காக்கும் கழகம் அறிவித்துள்ளது.

மறியல் போராட்டம் குறித்து இந்து கலாசார அமைச்சர், தமிழ்க் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு, செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகியவற்றின் யாழ். வதிவிடப் பிரதிநிதிகளுக்கும் தகவல் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

எழுதுமட்டுவாழ் தெற்கு, வடக்கு மற்றும் கரம்பகம், முகமாலை மக்கள் தமது சொந்த இருப்பிடங்களில் இருந்து வெளியேறி அடுத்தமாதம் 28ஆம் திகதியுடன் நான்கு வருடங்கள் பூர்த்தியடைவது குறிப்பிடத்தக்கது. (எ-3-117)

## நீர்வேலியில் நாய்களால் தொல்லை

அரியாலை,பெப்.3

நீர்வேலிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதால் பாதசாரிகள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

நீர்வேலி வடக்கு மற்றும் தெற்கு பகுதிகளில் பெரும் எண்ணிக்கையிலான நாய்கள் பராமரிப்பு இன்றி கட்டாக்காலியாக நடமாடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்தக் கட்டாக்காலி நாய்கள் வீதிகளில் நடமாடுவதால் வீதிகளில் பயணம் செய்யும் மக்கள் ஆபத்துக்களை எதிர்நோக்குவதோடு விபத்துக்களும் ஏற்படுகின்றன.

கட்டாக்காலியாகத் திரியும் இந்த நாய்களைப் பிடிப்பதற்கு வலி.கிழக்கு பிரதேச சபையினர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ-17)

# கூட்டுறவு விழிப்புணர்வு பிரசார நடவடிக்கைகள்

அரியாலை,பெப்.03

யாழ்.குடாநாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கூட்டுறவு மாதம் அனுசரிக்கப்பட்டுவருகின்றது.

சங்கங்களில் புதிதாக அங்கத்தவர்களைச் சேர்க்கும் முகமாக பணிப்பாளர், கிளைக்குழு உறுப்பினர்கள் அவ்வப்பகுதி பாடசாலை அதிபர்கள், கிராமசேவையாளர்களை உள்ளடக்கிய கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாகக் கூட்டுறவு விழிப்புணர்வுப் பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகின்றன. துண்டுப் பிரசுரங்களும் மக்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.(ஐ-17)


## நன்றியுடன் பாராட்டுகின்றோம்

2003ஆம் ஆண்டு 5ஆம் தரப்புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலய மாணவர்கள

செல்வி செ.சாருகா - 134

செல்வன் க.தனுசீலன் - 127

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களிற்குக் கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டுகின்றேம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம்.

(27865) (24-11-17)



## பாராட்டி வாழ்த்துகிறோம்



2003 ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகள் பெற்று, யாழ். மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்ற யாழ். புனித பொஸ்கோ மாணவனும் திரு.மு.விஜயரட்ணம் (கிராம அலுவலர், சுருவில் - புளியங் கூடல்) - *திருமதி வி.சாந்தினி* (ஆசிரியை, மத்திய கல்லூரி) தம்பதிகளின் செல்வப் புதல்வனுமாகிய **வி.விதுஷன்** அவர்களைப் பாராட்டி வாழ்த்தி மேலும் கல்வியிற் சிறப்புற வாழ்த்துகின்றோம்.

நல்லான் தேவன்
சின்னமடு கிராம மக்களும், ஊர்காவற்றுறை.

(27935) (24-11-17)



யா/சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாசாலை.
நிற்சாமம், சங்கானை.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



*2003 – ஐந்தாந்தரப் புலமைப்பரிசில் பரீட்சையில்*

செல்வன் **ஜெகதீசன் ஹரிகாஷன்**

141 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். ஆகவே. அவரைப் பாராட்டுவதுடன். கல்வி கற்பித்து நெறிப்படுத்திய அதிபர். ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

- பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

நிற்சாமம், சங்கானை. (27903)(26-17-18)


## வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன

அரியாலை,பெப்.3

யாழ்.ஈச்சமோட்டை பிரதான வீதிக்கு வீதி விளக்குகள் புதிதாகப் பொருத்தப்பட்டுள்ளன.

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தினரின் கோரிக்கையை அடுத்து இலங்கை மின்சாரசபை இந்த வீதி விளக்குகளை பொருத்தியுள்ளது.

முன்னர் இந்த வீதியில் இருந்த மின் விளக்குகள் விஷமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்டன (ஐ-17)

## எழுச்சிப்பேரவை சங்கம நிகழ்வு

கொழும்புத்துறை,பெப்.3

யாழ். மாவட்டத்தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாட்டு சங்கம நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் மாவட்ட, கோட்ட பிரதேச ஊரகக் குழுக்களின் உறுப்பினர்கள் தவறாது இதில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஒவ்வொரு கோட்ட அலுவலகங்களில் இருந்தும் போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முன்மொழிவுகள் சமர்ப்பித்தல், கருத்துப்பகிர்வு, சிறப்புரைகள் என்பன சங்கம நிகழ்வில் இடம்பெறவுள்ளன. (ஓ-30)

## பதில் பொது முகாமையாளர் நியமனம்

தென்மராட்சி,பெப்.3

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய பதில் பொது முகாமையாளராக சி. யோகேந்திரா நியமிக்கப்பட்டுள்ளார்.

சங்கத்தின் பொது முகாமையாளராகக் கடமையாற்றிய ச.யோகராசா யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி பால் உற்பத்திச் சங்கத்துக்கு பதவி உயர்வு பெற்றுச் சென்றதை அடுத்து பதில் பொது முகாமையாளராக சி. யோகராசா நியமிக்கப்பட்டுள்ளார். (எ-117)


யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை

## பதவி வெற்றிடம்

செயலாளர் - குறியீட்டு இல. 114/02

மேற்குறிப்பிட்ட பதவிக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை சபையில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுப் பூர்த்திசெய்து *"தலைவர், யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி, 2ஆம் மாடி, இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்"* என்னும் முகவரிக்கு 20.02.2004ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பத்தின் தபால் உறையில் இடதுபக்க மேல் மூலையில் *"செயலாளர் பதவிக்கான விண்ணப்பம்"* எனக் குறிப்பிடல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பதவி | - | செயலாளர் |
| சம்பள குறியீட்டு எண் | - | 114/02 |
| சம்பளத் திட்டம் | - | 9000 - 13800<br>230x10- 250x10 |

(கூ.அ. ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்)

வயது - 25 தொடக்கம் 50 வரை

*(கூட்டுறவுப் பணியாளருக்கு வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது)*

*அங்கீகரிக்கப்பட்ட தகைமை*

அ. கூடடுறவு ஊழியர் 3ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 3 ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 4 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக்குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டமொன்றுடன் அல்லது அதற்குச் சமமான தகைமை ஒன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை நிலையிலான பதவியில் ஆகக்குறைந்தது 10 ஆண்டுகால அனுபவம் இதில் சிரேஷ்ட முகாமை நிலைப்பதவியில் ஆகக்குறைந்தது 6 ஆண்டுகால கட்டாய அனுபவம்.

அல்லது

. கூட்டுறவு முகாமை தொடர்பான டிப்ளோமாப் பயிற்சிப்பத்திரம் / க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் ஆகக் குறைந்தது 12 ஆண்டுகால அனுபவம் இதில் சிரேஷ்ட முகாமை நிலைப் பதவியில் ஆகக்குறைந்தது 6 ஆண்டுகால அனுபவம்.

பிணை - ரொக்கம் ரூபா 25,000/- உடன் ஆதனம் ரூபா 50,000/- பெறுமதியானது செலுத்தப்படல் வேண்டும்.

பதவி நிரந்தரமானதும் இரண்டு ஆண்டுகால தகுதிகாண்காலத்தை கொண்டதும் ஆகும்.

1. தற்போது கடமையில் உள்ளவர்கள் தாம் பணியாற்றும் நிறுவனத்தினூடாகவே சிபார்சு செய்து விண்ணப்பிக்கவேண்டும்.
2. விண்ணப்பப்படிவத்துடன் கல்விச் சான்றிதழ், அனுபவச்சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ்களின் பிரதி என்பன இணைக்கப்படவேண்டும்.
3. பூரணமாக நிரப்பப்படாத விண்ணப்பப்படிவங்களும் சான்றிதழ் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்கவோ, நிராகரிக்கவோ நெறியாளர் குழுவுக்கு உரிமையுண்டு.

திரு.பெ.கனகசபாபதி
தலைவர்.

யாழ்ப்பாணம் மவாட்டக் கூட்டுறவுச் சபை. (சி-33024) (24-11-17)



## திருமண வாழ்வில் 40 ஆண்டுகள்



"தங்கமால்", அல்வாய் தெற்கு ஓய்வுபெற்ற ஆசிரியர்

**J.S.கிறிஸ்ததாஸ் - நேசமணி** தம்பதிகள்

*இன்று (03.02.2004) தமது திருமண வாழ்வின் 40 ஆவது வருடத்தைத் தமது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்கள். இவர்கள் சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் இனிதே வாழவேண்டுமென வாழ்த்துபவர்கள்:*

பிள்ளைகள்:

| | |
|---|---|
| சுபாஷினி செல்வராஜா | இத்தாலி |
| சுகந்தினி பரமதாஸ் | ஜேர்மனி |
| ராஜ்குமார் | ஜேர்மனி |
| ரஞ்சித்குமார் | பிரான்ஸ் |
| சுதர்மினி சாள்ஸ் | |
| லலிதா, ரமேஷ் | |

மருமக்கள்:

| | |
|---|---|
| I. செல்வராஜா | இத்தாலி |
| P.பரமதாஸ் | ஜேர்மனி |
| R.சுபாஷினி | ஜேர்மனி |
| S.சார்ள்ஸ் புனிதவளன் | |

பேரச்செல்வங்கள்:

| | |
|---|---|
| P.நர்மதன் | ஜேர்மனி |
| P.பரமசுதன் | ஜேர்மனி |
| P.பியூலா | ஜேர்மனி |
| P.திஷான் | ஜேர்மனி |
| S. றொஷான் | இத்தாலி |
| R.கிருஷானி | ஜேர்மனி |

இவர்களுடன் கனடாவில் வாழும் குமார் ஆனந்தி குடும்பமும் சுவிஸில் வாழும் மனோ உஷா குடும்பமும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் வாழ்த்துகின்றார்கள்.

*தொலைபேசி: 021-226 3921*

*"தங்கமால்", அல்வாய் தெற்கு, அல்வாய்.*

(27799) (24-11-17)



உ
சிவமயம்
ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## திருமாங்கல்யதாரண அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் மங்களகரமான சுபானு வருஷம் தைத் திங்கள் 21 ஆம் நாள் (04.02.2004) புதன்கிழமை காலை 7.54 மணிமுதல் 9.06 மணிவரையுள்ள கும்ப முகூர்த்த நல்வேளையில்.

யாழ்ப்பாணம், கன்னாதிட்டி தெய்வத்திரு துரையப்பா பத்தர் **வேணுகோபால் கனகவல்லி** தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் திருவளர் செல்வன் ***செல்வம்*** அவர்களுக்கும்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை **தம்பித்துரை அருணபாலன் ஜெயமணி** தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி திருவளர் செல்வி ***நிரஞ்சலாதேவி*** அவர்களுக்கும்

திருமாங்கல்யதாரணஞ் செய்துவைக்கப் பெரியோர்களால் நிச்சயிக்கப் பெற்று. யாழ்ப்பாணம் ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்துக்கும். அதைச் சார்ந்த நாகவல்லி பாங்குனி முகூர்த்தத்துக்கும் எமது உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும் :

திரு.திருமதி அருணபாலன்
76, கொல் ஒழுங்கை, சோனகதெரு,
யாழ்ப்பாணம். (27713) (11-17)

வேணுகோபால் பத்தர் குடும்பத்தினர்.
110, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

*(இருவீட்டார் அழைப்பு)*

☞ *ஏற்கனவே முன்னர் அழைப்புக்கிடைக்காதவர்கள் இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்.*

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# பண்பாடு வளர்ச்சி காணவேண்டிய பூநகரிப் பிரதேசம்

பூநகரிப்பிரதேசத்தில் பல கிராமங்கள் போரினால் சிதைக்கப்பட்டுவிட்டன. அவை மீண்டும் புத்துயிர்ப்புப் பெற்று மக்கள் குடியேறி அபிவிருத்தி அடைவதற்கு இன்னும் எத்தனை காலம் தான் எடுக்குமோ? கௌதாரிமுனையில் இருந்து பரமன்கிராய், வாடியடி, கறுக்காய்த்தீவு, செட்டியகுறிசசி, மட்டுவில்நாடு, நல்லூர், செல்லையாதீவு எனப் பல கிராமங்கள் போரினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றைவிட போர் நெருக்கடி காரணமாக அபிவிருத்தி சிறிதும் இல்லாது காணப்படும் கிராமங்கள் பலவுண்டு. பொன்னாவெளி, வேராவில், வலைப்பாடு,

## அபிவிருத்தி

கிராஞ்சி, பல்லவராயன்கட்டு, முழுங்காவில், ஜெயபுரம் போன்ற பல கிராமங்கள் எதுவித முன்னேற்றமும் இன்றி ஆதிகால சமூக மனிதனின் வாழ்வியல் தன்மைகளோடு காலத்தை ஓட்டுகின்றன.

பெரும்பாலும் காடுகளால் சூழப்பட்ட இக்கிராமங்கள் போக்குவரத்து வசதியோ, தொடர்புகொள்ளும் அடிப்படை வசதிகளோ இன்றிக் காணப்படுகின்றன. இருக்கின்ற பாதைகள் செப்பனிடப்படுவது மந்த கதியிலும் தரமற்ற முறையிலும் செப்பனிடப்படுகின்றன. சில பாதைகள் குணடும் குழியுமாகவே காணப்படுகின்றன. தபால் வசதி ஒன்றுதான் மக்கள் வெளியுலகத்துடன் தொடர்புகொள்ளும் ஒரே ஒரு சாதனம். இன்றைய தகவல் யுகத்தில் தொலைபேசிகளையும், தொலைநகல் வசதிகளையும் இன்ரநெற் உலகையும் இந்தக் கிராமங்கள் பெறுவது எப்போது?

எல்லாவற்றையும்விட முறையான போக்குவரத்து வசதி இன்றியே இந்தக்கிராமங்களின் மக்கள் தங்களின் வாழ்க்கையை ஓட்டுகின்றனர். குறைந்த பட்சம் பொதுபோக்குவரத்துச் சேவை, கிராமங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமானால் மக்களின் வாழ்வை மேம்படுத்த உதவும். அங்கு தற்போது இருக்கின்ற ஒரேயொரு சாதனம் துவிச்சக்கரவண்டிகள்தான். ஒருசில வசதிபடைத்தோர் மோட்டார் வண்டிகளையும் மாட்டு வண்டிகளையும், உழவு வண்டிகளையும் பயன்படுத்துகின்றனர்.


உழவுத்தொழிலும் மீன்பிடியும் காடுசார்ந்த தொழிலும் இம்மக்களின் வாழ்க்கைக்கான தொழில் முறைகளாகும். இவற்றை மேம்படுத்துகின்ற பெரிய திட்டங்கள் எதுவும் அரசசார்பாகவோ, அரசசார்பற்ற நிறுவனங்கள மூலமாகவோ, முன்னெடுக்கப்படுவதில்லை. இதனால் வளம் நிறைநத இப்பூமியைவிட்டு மக்கள் வேறு இடம் நாடிச் செல்கின்றனர். பூநகரி கூட்டுறவுச் சங்கம் ஒன்றுதான் இப்பிரதேச நலன்கருதி சில திட்டங்களை செயற்படுத்துகின்றது.

அடிப்படை வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் கல்வி வளர்ச்சி பற்றியும் பண்பாட்டு எழுச்சி பற்றியும் பேசத் தேவையில்லை. ஆம், கிராமங்கள் தோறும் பாடசாலைகள் இருக்கின்றன. கோயில்கள் இருக்கின்றன. ஆனால், அவற்றின் வளர்ச்சி பேசக் கூடியதாக இல்லை. ஆசிரியர் பற்றாக்குறை, கட்டட வசதியின்மை என்பவற்றோடு போக்குவரத்தும் தொடர்பாடல் இன்மையும் இப்பிரதேசத்தில் கல்வி முன்னேற்றத்தைப் பாதிக்கின்ற காரணிகளாகும். போரினால் இடிந்த பாடசாலைக் கட்டடங்கள், அபிவிருத்தி காணாது சிதைந்த பாடசாலைகள் என்பன மீளக்கட்டியமைப்பதில் கூடிய கவனம் செலுத்த சம்பந்தப்பட்டோர் முன்வரவேண்டும்.

கிராமத்து வணக்கமுறைகளும் சடங்கு வழிபாடுகளும் நிறைந்த இப்


ஆதரிப்பாரின்றி அழிகின்ற பொன்னாவெளி சிவன்கோயில்

பிரதேசத்தில் ஆகமமுறையில் அமைந்த கோயில்கள் பல உண்டு. 10ஆம், 12ஆம் நூற்றாண்டு சோழர் காலத்து மன்னித்தலை சிவாலயம்


தீர்த்தக்கரையில் வானம் பாத்திருக்கும் சிவலிங்கப்பெருமான்

இப்பிரதேசத்திலேயே உண்டு. இதன தொல்பொருள் சிறப்பைப் பற்றி யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளரும் ஆய்வாளருமாகிய கலாநிதி பரமு புஸ்பரட்ணம் எடுத்துக் கூறியுள்ளார். இதனைப் பாதுகாக்கின்ற ஏற்

## அழிந்த ஆலயங்கள், பள்ளிகள் மீளக் கட்டியெழுப்பப்படுமா?

பாடுகூட அரச அதிகாரிகளிடம் இல்லை. இதைவிட, கௌதாரி முனையில் உள்ள கோவில்கள், விநாசியோடை தேவாலயம் என்பன பாதிப்புற்ற நிலையிலே காணப்படுகின்றன. பூநகரி நகரில் காணப்படும் கோயில்கள் பல போரினால் அழிந்துள்ளன. அவற்றை திருத்தியமைக்க எவ்வித திட்டமும் நிதியுதவியும் வழங்க இந்து சமய


போரினால் சிதைந்த பூநகரி மகாவித்தியாலயமும் மாணவர்களும்.

கலாசார அலுவல்கள் அமைச்சு பெரும முயற்சிகள் எதுவும் எடுப்பதாக இல்லை.

பொன்னாவெளியில் அமைந்துள்ள பாரம்பரிய சிவன் கோவில் ஒன்று கொட்டில் சிதைவடைந்த நிலையில் காணப்படுகிறது. இது கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் அமைக்கப்பட்ட கோயிலாகும். திருவெண்ணாமலையிலிருந்து எடுத்துவரப்பட்ட சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அத்தோடு, அங்கே அமைந்துள்ள பிள்ளையார் கோவில, அம்மன்கோவில் என்பன எதுவித வளர்ச்சியும் காணாது சிதைந்து கொண்டிருக்கின்றன. யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் மற்றய இடங்களிலும் வளர்ச்சிகள் பல கண்ட - வருமானமிக்க - கோயில்களுக்கு கட்டட வசதியும், வாகன வசதியும் மற்றும் இன்னோரன்ன நிதியுதவிகள் வழங்கும் அமைச்சர் தி.மகேஸ்வரன் போரினாலும் மக்கள் வறுமையினாலும் பாதிகக்கப்பட்ட கோயில்களுக்கு உதவி வழங்கும் காலம் எப்போது?

கல்வியோடு பண்பாட்டு வளர்ச்சிக்கு முக்கிய இடங்கள் கொடுக்க வேண்டும். தம் வாழ்வுக்கான அடிப்படைகள் தட்டுப்பாடாக உள்ள நிலைமையில் கோயில்களை எப்படி மக்களால் கடடி வளர்க்க முடியும்? வசதிபடைத்த கோயில்களுக்கு யாழ்ப்பாணத்திலும் பல்வேறு நகரக் கோயில்களுக்கும் அள்ளிவழங்கும் இந்து சமய கலாசார அமைச்சர் பின்தங்கிய பிரதேச

**திசைராசா**

மாகிய பூநகரிப் பிரதேச கோயில்களுக்கு நிதி உதவிகளை வழங்க வேண்டும். அம்மக்களையும் ஆதரிக்கவேண்டும் - முன் வருவாரா? வசதி படைத்த கோயில்களும் பிறகோயில்களை பாடசாலைகளை கட்டுவிக்க முன்வர வேண்டும்.

அத்தோடு, பூநகரி பிரதேச கூட்டுறவுச்சங்க முயற்சியால் நூல் நிலையம் ஒன்று இயங்குகிறது. இதன் வளர்ச்சிக்கு நூல்களையும் இதர உதவிகளையும் வடக்கு - கிழக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் அமைச்சும் மத்திய அரச கலாசார அமைச்சும் வழங்க ஆவன செய்ய வேண்டும். ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை வாங்கி இப்பிரதேசம் மட்டுமல்லாது இலங்கை முழுவதும் உள்ள நூல் நிலையங்களுக்கு விநியோகம் செய்வதன் மூலம் எழுத்தாளரை ஊக்குவிப்பதோடு இளைய தலைமுறையினரையும் வாசிப்புப் பண்பாட்டு பகைப்புலத்துள் உள்ளிழுகக முடியும். அதன்மூலம் புதிய தலைமுறை அறிவுத்தாகம்மிக்க - பண்பாட்டுப் பிரக்ஞைமிக்க சமுதாயமாக மிளிர வாய்ப்பு ஏற்படும். அப்படி இல்லையேல் எல்லா மட்டங்களிலும், வியாபாரத் தன்மையோடு கூடிய சுரண்டல் சமூக களத்தையே நாம் வளர்ததவர்கள் ஆவோம். ★

# வாசகர் திருமுகம்

## பட்டாசு வீரர்கள்

பட்டாசு வீரர்களின் வீரசாகசங்களோடு பொங்கல் இனிதே நிறைவேறியது. தற்கால இளைஞர்கள் உண்மையான வீரர்களோ இல்லையோ என்ற கேள்வி ஒருபுறம் இருக்கட்டும். ஆனால், ஒன்று மட்டும் உண்மை. அதாவது, கோழைத்தனமான காரியங்களைச் செய்வதில் அவர்கள் வீரர்கள்தான். கோழைத்தனமான செயல்கள் மூலம் மற்றையோரை அதிர்ச்சியூட்டி அவர்களின் வேதனையைக் கண்டு நகைப்பது ஓர் உளவியல் வியாதி. இந்த உளவியல் வியாதியை தங்களது சாதனைகள் என எண்ணிப் பெருமைப்படும் ஒரு கட்டாக்காலி இளைஞர் சமூகம் வளர்ந்து வருகின்றது. இம்முறை பல இளைஞர்கள் 24 மணித்தியாலமும் பொங்கல் தினத்தன்று சீனப் பட்டாசுகளைக் கொளுத்திச் சாகசங்கள் நடத்தியதைக் காண முடிந்தது. இவர்களில் எத்தனை பேரின் வீடுகளில் அன்றைய தினம் ஒழுங்காகப் பானை பொங்கியது என்பது கேள்விக்குறி. இவர்களின் கைகளில் ஒரு சாதாரண எல்எம்ஜி. 24 இயந்திரத்துப்பாக்கியைக் கொடுத்து AIM AND FIRE என்று கட்டளையிட்டுப் பாருங்கள். அந்தக் கட்டளையைப் புரிந்துகொள்ளுமளவுக்கு அவர்களுக்கு புத்திக்கூர்மை இருக்குமோ என்பது சந்தேகமே. காசைக் கரியாக்கி பொன்னான இளமையை மண்ணாக்கும் இவர்களை கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவர யாராவது முன்வருவார்களா?

- வதிரிவாசன்.

## கரவில்–பழுதனை வீதி பொதுமக்கள் பாவனைக்கு திறந்துவிடப்படுமா?

தென்மராட்சி யுத்த நடவடிக்கைகளின்போது படையினரால் மூடப்பட்ட வரணி - வடக்கு வாழைத்தோட்டம் - கரவில் பழுதானைவீதி இன்று வரை பொதுமக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிடப்படவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, சமாதான சூழ்நிலை ஏற்பட்டும கூட இதுவரை இப்பாதையைத் திறக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்காதது பற்றி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். கடந்தகால யுத்த நடவடிக்கையின்போது வரணி - கொடிகாமம் பிரதான வீதியின் கிழக்குப் பக்கமாக உள்ள சகல பாதைகளும் படையினரால் மூடப்பட்டு இடைக்குறிசசி சேச் வீதி மட்டும் மக்கள் போக்குவரத்துக்கு திறந்துவிடப்பட்டமையும் காலவோட்டத்தில் மூடப்பட்ட சகல பாதைகளும் திறக்கப்பட்டு மக்கள் போக்குவரத்து நடைபெவறுவதும், மேற்படி பாதைமட்டும் இன்றுவரை திறக்க நடவடிக்கை எடுக்கப்படாமையும் குறிப்பிடத்தக்கது.

இப்பாதை வரணி வடக்கு - இடைக்குறிச்சி, மாசோரி கிராமங்களை இணைக்கும் முக்கியமான பாதையாகும். மக்கள் இப்பாதையைப் பயன்படுத்தாத நிலையில் பற்றைகள் வளர்ந்து பாதையை மூடிக்கிடக்கின்றன. எனவே, சம்பந்தப்பட்டவர்கள் இப்பாதையைத் திறக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என பொதுமக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கிறேன்.

வரணி - கா.ராஸ்மோகன்.

## பதில் சொல்வது யார்?

கடந்த வருடம் நடைபெற்ற தொண்டராசிரியர் நியமனத்திற்காக நான் இரண்டுமுறை நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டேன். என்னைப்போல் பலரும் அழைக்கப்பட்டனர். பலருக்கு நியமனமும் கிடைத்தது. சிலருக்கு தெரிவுசெய்யப்படவில்லை என்று கடிதம் வந்தது. எனக்கும், என்போன்ற சிலருக்கும் இன்னும் எப்பதிலும் வரவில்லை. மாகாணத் திணைக்களத்தோடு தொடர்புகொண்டு கேட்டபொழுது தமக்கு எதுவும் தெரியாது என்கின்றனர்.

இந்தநிலையில், தற்போது கோரப்பட்டுள்ள ஆசிரியப் போட்டிப் பரீட்சைக்கு நாம் விண்ணப்பிக்க முடியாத நிலையில் உள்ளோம். தயவுசெய்து வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இதற்கு பத்திரிகை மூலம் விளக்கமளிக்கவேண்டுமென்று கேட்கிறேன்.

*நொத்தாரிஸ் வீதி,*
*அரியாலை.*
செல்வி கௌ.துரைசிங்கம்

## ஆஸ்பத்திரி மலசலகூடத்திற்கும் கட்டணம் அறவிடலாமே!

மனிதனின் அடிப்படைத் தேவையான மலசலகூட வசதி மிகவும் சுத்தமாக இருக்கவேண்டும் என்பதில் யாருக்கும் இரண்டு கருத்து இருக்க முடியாது. அதிலும் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நோயாளர்களைப் பொறுத்தவரை நோயின் கொடுமை, வேதனை அத்துடன, மலசலகூடம் அசிங்கமாய் இருந்தால் அந்த அருவருப்பையும் சேர்த்து தாங்கிக்கொள்வது எவ்வளவு கஷ்டம் என்பது நேரில் அனுபவித்தவர்களுக்கு நன்கு புரியும்.

இந்நிலையில், யாழ். பஸ்நிலையத்தில் மலசலகூட சுத்திகரிப்பிற்கு சிறுகட்டணம் அறிவிட்டு முழுநேர தனியார் ஊழியரை நியமித்து செவ்வனே நடத்தி பிரயாணிகளுக்குச் சௌகரியம் ஏற்படுத்திக் கொடுத்தது போல், ஆஸ்பத்திரியிலும், இவ்வாறு நோயாளர்களுக்கு சௌகரியம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று மக்கள் திருமுகத்தில் வ.பி.போ.ச. பொதுமுகாமையாளர் தெரியப்படுத்தியதை மறுதலித்து இதே திருமுகத்தில் கருத்து வெளியிடப்பட்டது.

முன்னைய காலங்களில் யாழ். அரசினர் வைத்தியசாலையில் கட்டண வார்ட்டுக்கள் (Paying wards) இருந்தன. சற்று வசதியுடையவர்கள், கடும் நோயாளர்கள் அவற்றைப் பயன்படுத்திப் பயனடைந்தனர். அதே சமயம் ஒரு சில குறிப்பிட்ட வார்ட்டுகளுக்கு மட்டும்தான் கட்டணம் அறவிடப்பட்டது. ஏனையவை இலவசமாகவே சேவை வழங்கப்பட்டது. இதேபோல், ஒரு சில மலசலகூடங்களையாவது சிறுகட்டணம் செலுத்திப் பயன்படுத்த தனியாரிடம் ஒப்படைத்தால் அத்தனியார் ஒருவரும் நல்ல பலனைப் பெறுவார். அத்துடன், அதனைப் பாவிக்கும் நோயாளர்களும் நன்மையடைவர். இதுதவறு என்று யாரும் கூறமாட்டார்கள்.

அரசு எல்லாவற்றையும் இலவசமாகச் செய்து தரவேண்டும் என்றும் அது அரசின் கடமை என்றும், எழுத்திலும், பேச்சிலும் கூறிக்கொண்டிருக்கலாமே தவிர நடைமுறையில் பூரண பலனை எதிர்பார்க்கமுடியாது.

*இயக்குநர்,*
*யாழ். ப.நோ.கூ.சங்கம.*
- சபா.தியாகராஜா.

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 11 - 04 - 1937



விண்ணில் 03 - 02 - 2002

## அமரர் பத்திநாதர் அருளானந்தம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

அன்பை ஊட்டி, அறிவுக்கு வழிகாட்டி,
எம்மைக்காத்து வழிநடத்தி, அனைத்திற்கும்
ஈடு இணையாக விளங்கி, உறவினில்
கலந்த தந்தையே! எம்மையெல்லாம்
நீங்காத நினைவில் தவிக்கவிட்டு, ஈராண்டு
சென்றாலும் என்றுமே உம்மை மறவோம்!
விண்ணகத் தந்தை தன்னகத்தே உம்மை
அணைத்து, அருளின் ஒளியை ஒளிர்ந்திடுவாராக!

*புனித லூர்து மாதா கோயிலடி,*
*தும்பளை,*
*பருத்தித்துறை.*

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

(27693) (26-14-16-21)

# ஈரவிழிகளுடன் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 - 02 - 1949



மறைவு 29 - 01 - 1999

## திருமதி முத்துலிங்கம் கமலாலட்சுமி

திதி: திரயோதசி

ஆண்டுகள் ஐந்து கழிந்தாலும் மூண்டதுயர்
மாறுமோ ஆறுமோ அன்புத் தெய்வமே அன்பு அம்மாவே!
ஆண்டுகள் பல ஓடினாலும் அழியாது
அம்மா உங்கள் நினைவு
உங்களை இழந்த அன்றே அநாதைகள்
ஆனோம் அழுது தவிக்கிறோம்
அன்புத் தெய்வமே அன்பு அம்மாவே!
உங்கள் ஆன்மா சாந்தி அடைய
*எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போமாக.*
*ஓம் சாந்தி!*

*ஐயனார் கோயிலடி,*
*மல்லாகம்.*

(27816) (26-17-18)

**- அன்புக் கணவர்,**
**பிள்ளைகள் (கனடா).**

# 31ஆம் நாள் அந்தியேட்டிக்கிரியை
# நினைவு அஞ்சலி அழைப்பு

பிறப்பு 1930 - 02 - 16



இறப்பு 2004 - 01 - 07

## தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை

கோப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை (முன்னாள் கங்காணி, வயோதிபமடம் கைதடி) அவர்கள் 07.01.2004ஆம் ஆண்டு இறைவன் அருள் சேர்ந்துள்ளார். அவரின் ஆத்மசாந்தி (கிரியை) 06.02.2004ஆம் ஆண்டு எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

"தாயிற் சிறந்த கோயிலுமில்லை தந்தை சொல்மிக்க
மந்திரமில்லை அன்னையும் பிதாவும்
முன்னெறி தெய்வம், அன்பே தெய்வம்
பெற்ற தாய் தாய்க்குப் பின் தாரம்"

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்,
கணவர் - சரவணை தம்பிப்பிள்ளை,
மகன - சுப்பிரமணியம் லீலாவதி,
மகள் - சின்னத்தம்பி செல்வராணி,
பேர்த்தி - பவா.

**தம்பிப்பிள்ளை அன்னப்பிள்ளை,**
*இல, 12, கோணேசபுரம்,*
*உவர்மலை.*

(சி-32964) (24-17-18)

## வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.3

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் அவசர கூட்டமொன்று நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கொட்டடியில் உள்ள சங்கப் பணிமனையில் நடைபெறும்.

சங்க உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-8)

## அ.பு.நிறுவனத்தின் கிளைகளை ஒப்படைக்க கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.3

வன்னிப் பிரதேசத்திலுள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனக் கிளைகளைத் தம்மிடம் மீள ஒப்படைக்க வேண்டும் என்று அந்த நிறுவனத்தின தலைவர் அ.நல்லதம்பி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்திடம் கோரியுள்ளார். இது தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு அவர் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

குடாநாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் இயங்கிவந்த அகதிகள் புனர்வாழ்வு நிறுவனக் கிளைகள் விடுதலைப் புலிகளால் பொறுப்பேற்கப்பட்டு அங்கு தொடர்ந்து இயங்கி வருகின்றன.

தற்போது சமாதான சூழல் ஏற்பட்டுள்ளதால் அந்த நிறுவனத்தை மீள அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கும்படி கடிதத்தில் அவர் கேட்டுள்ளார். (ம-7)

## பல்பாடநூல் செயலமர்வுகள்

தென்மராட்சி,பெப்.3

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்களுக்கான பல்பாடநூல் செயலமர்வுகள் நாளை புதன்கிழமையும் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் நடைபெறும்.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தலா மூன்று ஆசிரியர்களை நாளைய கருத்தரங்கிலும் நாளை மறுதினம் நடைபெறும் கருத்தரங்கில் அதிபரையும் இரண்டு ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கோட்டக் கல்வி அலுவலர் அ.கயிலாயபிள்ளை கேட்டுள்ளார்.

இந்த செயலமர்வுகள் நேற்றும் இன்றும் நடைபெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

## மாற்றுக் கட்சியினர் மு.காவில் இணைந்தனர்

சாய்ந்தமருது,பெப்.3

சம்மாந்துறைப் பிரதேச இரண்டாம் கட்ட குடிதண்ணீர் விநியோகம் தொடர்பான ஆரம்ப வைபவம் கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோது ஐக்கிய.தேசியக் கட்சி, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி, சுயேச்சைக் குழு ஆகியவற்றின் பல ஆதரவாளாகள் முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டனர்.

சம்மாந்துறை சென்னெல் கிராமத்தில் திகாமடுல்ல மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினா எம்.ஐ.அன்வர் இஸ்மாயில் இவ் வைபவத்திற்குத் தலைமைவகித்தார்.

முஸ்லிம் காங்கிரஸில் இணைந்து கொண்டவர்களில் பிரதேசசபை வேட்பாளர்களும் கட்சிகளின் முன்னணி அமைப்பாளர்களும் அடங்கியிருந்தனர்.

## மாணவரை வரவேற்கும் வைபவம்

கட்டுடை சைவ வித்தியாலயத்தில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் விழா கடந்த வாரம் அதிபர் கடவுள் சுப்பிரமணியம் தலைமையில நடைபெற்றது.

விழாவில் மானிப்பாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் கி.பொ.ம.க.முதலியார் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.(ஜ-135)

## மாணவர் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

குடாநாட்டில் நலன்புரி நிலையங்களிலுள்ள மாணவர்களின் விவரங்களை தமிழ்மாணவர் ஒன்றியம் திரட்டிவருகின்றது.

நலன்புரி நிலையங்களில் வசித்து வருகின்ற தரம் ஒன்று தொடக்கம் ஜி.சீ.ஈ.உயர்தரம் வரை கல்விகற்கின்ற மாணவர்களின் பெயர், விவரங்களைத் திரட்டும்பணியில் யாழ். மாவட்ட தமிழ்மாணவர் ஒன்றியம் ஈடுபட்டுள்ளது.

இந்த மாணவர்களுக்கு உதவிகள் வழங்கப்படவிருப்பதாகத்தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)

## கூட்டுறவு ஊழியருக்கு சம்பள உயர்வு

அரசினால் அறிவிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான ஆயிரத்து 250 ரூபா சம்பள அதிகரிப்பு தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியர்களுக்கும் கிடைக்கவுள்ளது.

அண்மையில் நடைபெற்ற சங்க இயக்குநர் சபைக் கூட்டத்தில், ஊழியர்களுக்கு ஜனவரி மாதம் தொடக்கம் சம்பள அதிகரிப்பு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (எ-117)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## சூசைப்பிள்ளை றொபின்சன்

பிறப்பு : 23-06-1980 இறப்பு : 04-01-2004

*அன்பும் பண்பும் நிறைந்த – எங்கள்*
*உயிர்த் தம்பியே!*
*மாதம் ஒன்று ஆனாலும் – உம்*
*நினைவு எம்மை விட்டுப்போகாது*
*உம் உடல் எங்களை விட்டுப் பிரிந்தாலும்*
*உம் உயிர் எம்மை விட்டுப் பிரியாது!*

*முகவரி:*
392/16,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா, அண்ணா, அக்காமார்,
அத்தான்மார், பிள்ளைகள், மருமக்கள்,
உறவினர்கள், நண்பர்கள். (27961)

(16-14-21-30)

# நீங்காத நினைவில் இரண்டாண்டுகள்

மலர்வு 11 - 08 - 1932



உதிர்வு 26 - 01 - 2002

## திருமதி மாணிக்கம் கணபதிப்பிள்ளை

பாசமாய் எமை அரவணைத்து இவ்வுலகில்
நேசமாய் எமை வளர்த்தாளாக்கிய
பாசமிகு தாயே~ இரண்டாண்டு சென்றாலும்
உம்நினைவு எமைவிட்டு ,அகலா!

*மீசாலை மேற்கு,*
*மீசாலை.*

**கணவர்** (கணபதிப்பிள்ளை),
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(27877)(40-14-16-21)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் பூமணி திருநாவுக்கரசு

தோற்றம் 02-12-1936 மறைவு 04-01-2004

*காற்றுடன் காற்றாய்க் கலந்தனையோ – எம்*
*கைத்தலத்தில் கண்ணீரை நிறைத்தனையோ*
*கண்ணின் மணியாய் இருந்ததையும் கனகமணியாய் திகழ்ந்ததையும்*
*கணப்பொழுதில் மறந்தனையோ கண்மூடித் துயின்றனையோ?*

எமது குடும்பத் தலைவியின் துயரச் செய்திகேட்டு எமது துக்கத்தில் பங்குபற்றியதோடு, அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

இன்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும், அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் வீட்டுக்கிருத்தியம், மதியபோசனம் ஆகிய நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இறுதிக்கிரியைகளில் கலந்துகொள்ளத் தவறியவர்களையும் வரவேற்கின்றோம்)

தற்போது
*70, நாயன்மார் வீதி,*
*நல்லூர்.*

நிரந்தரம்
*நாவற்குழி கிழக்கு,*
*தச்சன்தோப்பு.*

**- குடும்பத்தினர்.**

(27946) (24-17-18)

யாழ்ப்பாணம்

# குறைந்த செலவுடன் அதிக பலனைப் பெறுவதற்கு உதவிடும் தூவல் நீர்ப்பாசனம்

விவசாயத்துறையில் 'தூவல் நீர்ப்பாசனம்' என்ற புதிய நீர்ப்பாசன முறை ஒன்று யாழ்ப்பாணக் குடாநாட்டில் இப்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

யாழ் மாவட்ட விவசாயத் திணைக்களத்தினரால் ஏற்கனவே இம்முறை அறிமுகம் செய்யப்பட்டிருந்த போதிலும் தற்போதுதான் இம்முறை விவசாயிகள் மத்தியில் அதிக செல்வாக்குப்பெற்று வருகின்றது.

'இரிடெக்' நிறுவனம் விவசாயத் திணைக்கள அனுசரணையுடன் இறுவில் கிழக்கு விவசாய சம்மேளனத்தின் கோரிக்கைக்கு ஏற்ப யாழ். மாவட்டத்தில் உள்ள 16 விவசாயிகளுக்கு 'தூவல் நீர்பாசன' பொறிகளைப் பொருத்திக் கொடுத்துள்ளது.

ஏற்கனவே ஒருசில விவசாயிகள் இப்பொறிகளைக் கையாண்டு நல்ல பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். அவர்களுள் ஒருவரான அளவெட்டி மேற்கு, நுங்கியப்புலம் பகுதியைச் சேர்ந்த முத்தையா சேனாதிராசா என்ற விவசாயியின் செவ்வி இன்று இங்கே தரப்படுகிறது.

★ கேள்வி:- பாடசாலையில் உயர்வகுப்பு வரை கல்வி கற்ற நீங்கள் உத்தியோகம் ஒன்றை நாடாமல் விவசாயத்தை ஏன் விரும்பி மேற்கொண்டீர்கள்?

● பதில்:- 1962ஆம் ஆண்டு எஸ்.எஸ்ஸி. வகுப்பு வரைக்கற்றபின் எனது தகப்பனார் மேற்கொண்ட விவசாயத் தொழிலைத் தொடரக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. தகப்பனாருடன்கூட வேலை செய்த அனுபவம் விவசாயத்தில் எனக்கு ஏற்பட்ட விருப்பம் என்பன இதில் என்னை ஈடுபடத் தூண்டின. அத்துடன், ஒருங்கிணைந்த பண்ணை விவசாயம், ஆடு, மாடு வளர்ப்பு, கோழிப்பண்ணை என்பவற்றிலும் அதிக ஈடுபாடு உண்டு. மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி, சேவல் சண்டை என்பனவற்றில் ஆர்வம் கொண்டு பங்குபற்றி பலவெற்றிகளையும் பரிசுகளையும் பெற்றுள்ளேன்.

★ கேள்வி:- விவசாயத்தை மேற்கொண்டதால் வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தைப் பெறமுடிகிறதா?

● பதில்:- ஆரம்பத்தில் குறைந்த அளவு நிலத்தில் பயிர் செய்தேன். குறைந்தளவு நிலத்தில் பயிர் செய்து கூடியளவு விளைவைப் பெற வேண்டுமென ஆர்வப்பட்டேன். விஞ்ஞான ரீதியிலான விவசாயத் தொழில் நுட்பங்களைக் கையாள விரும்பினேன். ஏனைய விவசாயிகளால் பயிரிடப்படாத பயிர்களாகப் பார்த்துப் பயிர் செய்தேன். ஒருமுறை 15சதுர அடி நிலத்தில் லீக்ஸ் பயிரிட்டு எட்டாயிரம் ரூபா வருமானம் பெற்றேன். இது எனது முயற்சிக்கு மேலும் ஊக்கம் தந்தது.

அரச சேவையில் சேர்ந்து பெறும் ஊதியத்தைவிட எனக்குக் கூடிய ஊதியம் கிடைக்கின்றது.

பயிருக்கு நீர்ப்பாசனம் செய்ய வருடம் ஒன்றுக்கு ஆயிரத்து 500 லீற்றர் மண்எண்ணெய் தேவைப்படுகிறது. நல்ல முறையில் திட்டமிட்டு பயிர் செய்வதால் எனக்குப் போதிய வருமானம் கிடைக்கிறது. தேவைகள் குறைவு, செலவுகளும் குறைவு. எனது விவசாயச் செய்கையில் சகல செலவுகளையும் நீக்கி ஒரு வருடத்தில் இரண்டு லட்சம் ரூபா மீதியாகப் பெறுகின்றேன்.

★ கேள்வி:- என்னென்ன பயிர்கள் பயிரிடுகிறீர்கள்? அவற்றின் செய்முறை, பராமரிப்புப் பற்றிக் கூறுங்கள்?

● பதில்:- எனது தோட்டத்தில் தென்னை, எலுமிச்சை, வாழை, முந்திரிகை, வெங்காயம், மரவள்ளி, பீற்றூட், கோவா, புகையிலை, மிளகாய், லீக்ஸ் போன்ற பயிர்களைச் சுமார் 5ஏக்கர் நிலத்தில் பங்கிட்டுப் பயிரிட்டுள்ளேன். பயிர்களுக்குப் பெரும்பாலும் இயற்கைப் பசளைகளான மாட்டெரு, கூட்டெரு, இலைகுழைகள் என்பவற்றையே பாவிப்பேன்.


## கமமும் புலமும்

தயாரிப்பு : ஜெயஸ்ரீ

எமது பிரதேச மண் உவர்த்தன்மையற்றது. வளமான மண் இதனால் தொடர்ச்சியாக விவசாயம் மேற்கொள்ள முடிகிறது.

★ கேள்வி:- தூவல் நீர்ப்பாசன முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது அதில் உங்கள் ஈடுபாடு எப்படி?

● பதில்: இதில் பலவித நன்மைகள உள்ளன. பரீட்சார்த்தமாக நான்கு பரப்பு வெங்காயப்பயிருக்கு இந்த நீர்பாசன பொறிகளைப் பூட்டியுள்ளேன். 'இரிடெக்' நிறுவனம் மானிய அடிப்படையில் பொறிகளை வழங்கியுள்ளது. பொறிக் கொள்வனவுக்கான



நிதியினை ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை கடனாகத் தந்து உதவியுள்ளது. நான்கு பரப்பிலும் 27பொறிகருவிகளை 37ஆயிரம் ரூபா செலவில் பூட்டியுள்ளேன்.

★ கேள்வி: இவ்வளவு பெரும் தொகையில் கருவிகளைப் பூட்டியுள்ளீர்களே. இவற்றால் நீங்கள் எதிர்பார்க்கும் பலன் கிடைக்குமா?

● பதில்: நிச்சயமாகக்கிடைக்கும. பொதுவாக இன்று வயல் வேலைகளுக்குக் கூலி ஆள்களைப்பெறுவது மிகக் கஷ்டமாக உள்ளது. நாளாந்த கூலித்தொகையும் அதிகரித்துள்ளது. பத்து வருடங்களுக்கு இக்கருவிகளைப் பயன்படுத்திச் செயற்பட்டால் நஷ்டம் ஏற்படாது.

★ கேள்வி: தூவல் நீர்ப்பாசனத்தால் கிடைக்கும் நன்மைகள் எவை?

● பதில்: மண்வெட்டி கொண்டு, பாத்திகட்டி, நீர் பாய்ச்சுவதால் பயிர்களுக்குப் பாதுகாப்புக் குறைவு. நீர் விரயம் ஏற்படும். தூவல் நீர்ப்பாசனம் காலை வேளையில்தான் மேற்கொள்ளப்படவேண்டும். இதன்மூலம் நிலத்துக்கும், பயிருக்கும் தேவையான அளவுநீரும், ஈரலிப்பும் கிடைக்கிறது. வெள்ளம் நிலத்தில் தேங்கி நிற்காது.

பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஈரலிப்புத்தன்மை நிலத்தில் இருந்தால் போதுமானது. ஒருநாளுக்கு இரண்டு மணி நேரத்துக்குச் செலவிடும் நீர்ப்பாசன நீரை இம்முறையின் மூலம் 20 நிமிடங்களில் பூர்த்தி செய்யலாம். பனிக்காலத்தில் பயிரின் நுனியில் பனிநீர் தங்கிவிடும். இதனால், பயிர் நுனி சுருளல், பூச்சித் தாக்கம் என்பன ஏற்படும். அதிகாலையில் தூவல் பாசனம் செய்வதால், மேலிருந்து கீழ்நோக்கி நீர்விசிறப்படும் போது பயிர்களின் மேல்பரப்பில் படிந்துள்ள பனிநீர் வழிந்து நிலத்துக்குச்சென்று விடும். நோய்கள், பூச்சிதாக்கம் ஏற்படமாட்டாது. களைகளும் வளரமாட்டா.

எனது தோட்டத்தில் பயிர்செய்த வாழைகளை அழித்துவிட்டு நிலத்தில் பனை ஓலைகள் தாட்டு இயற்கைப் பசளைகளையும் இட்டு வெங்காயம் பயிரிட்டேன். நிலத்தில் களைகள் வளரவில்லை. பூச்சித் தொல்லை இல்லை. பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன.

★ கேள்வி: இரசாயனக்கலவை, கிருமிநாசினி என்பன பாவிப்பீர்களா?

● பதில்:- யாழ்ப்பாண மாவட்டத்தில் அநேக விவசாயிகள் இவற்றைத் தேவைக்கு அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். அதிக உரம் போட்டு நிறைய நீர் விட்டால் கூடிய விளைவைப் பெறலாம் என இவர்கள் கருதுவது தவறு.

உரமும் நீரும் அதிகளவில் இடுவதால் பயிர்கள் என்றும் பச்சையாக, அழகாக, குளிர்ச்சியாகக் காணப்படும். ஆனால் அவை எவ்வளவு பசளையை, நீரைக்கிரகிக்க முடியமோ அவ்வளவைத்தான் கிரகிக்கும். மேலதிகநீர் வீணாகி உரத்தையும் கரைத்துக் கொண்டு நிலத்தின் அடிப்பகுதிக்குச் செல்லும். அங்கு நிலத்தடி நீருடன் இவை கலந்து நல்ல நீரை உவர்நீராக்கி மாசடைய வைப்பதுடன் நச்சு நீராகவும் மாறச்செய்கிறது.

**சந்திப்பு: வி.பி.சர்மா**
**வலி.தெற்கு செய்தியாளர்**

தூவல் நீர்ப்பாசனம் அளவான நீரைப்பயிருக்குக் கொடுப்பதால் நீர் மேலதிகமாகிக் கீழ் இறங்கமாட்டாது. நிலத்தின் மேல் மட்டத்தில் மட்டும் நீரும், உரமும் தேங்கிப் பயிருக்கு நல்ல வளர்ச்சியையும் விளைவையும் ஏற்படுத்தும்.

★ கேள்வி:- உங்கள் அனுபவத்தை ஏனைய விவசாயிகளுடன் எப்படிப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறீர்கள்.

● பதில்:- விவசாயத்தில் நவீன தொழில்நுட்ப அறிவைப்பெற்று, எமது நாளாந்த செயல்முறைகள் மூலம் பெறும் அனுபவங்களைக் கொண்டு விவசாயத்தில் ஈடுபட வேண்டும். எமது பாரம்பரிய விவசாய முறைகளைக் கையாள்வதோடு நவீன தொழில்நுட்ப யுத்திகளையும் விவசாயத்தில் ஏற்படுத்தி வளர்ச்சி காணவேண்டும். ★



**தூவல் நீர்ப்பாசனம் தொடர்பான அறிமுக விழா அளவெட்டி வடக்கு மு.சேனாதிராசாவின் தோட்டத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம். 'இரிடெக்' நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப் பட்ட தூவல் நீர்ப்பாசனம் தொடர்பாக நிறுவனத்தின் யாழ்ப்பாணப் பொறுப்பதிகாரி எஸ்.தயாபரன் விளக்கமளிப்பதைப் படத்தில் காணலாம். ஹற்றன் நஷனல் வங்கியின் சுன்னாகம் கிளை முகாமையாளர் எஸ்.சுந்தரேசன், கீரிமலைப் பகுதி விவசாயப் போதனாசிரியர் திருமதி எஸ்.மணிவண்ணன், 'இரிடெக்' நிறுவனத் தலைமை அதிகாரி திருமதி மாலினி ஆகியோரும் படத்தில் காணப் படுகின்றனர்.** *(படம் : வலிகாமம் தெற்குச் செய்தியாளர்)*

# சிங்கள மக்களின்— ஏகநாயகன் ரணிலே!

**'லக்பிம' வார இதழில் அதன் ஆசிரியர் வாராவாரம் கற்பனைச் சித்திரம் எழுதிவருகிறார். இவ்வாரம் அவர் எழுதிய கற்பனைச் சித்திரத்தின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**


அழைக்கப்பட்ட எமது நண்பர்கள், ஸ்ரீல.சு.க.- ஜே.வி.பியின் உடன்பாடு கைச்சாத்திடப்படும் நிகழ்வைக் காணச்சென்றனர். வேறும் சில நண்பர்கள் பலகாரங்களையும், பாற்சோற்றையும் ருசித்தவாறு பட்டாசுகளை வெடித்து அதைக்கொண்டாடினர். இன்பத்தில் போன்றே, துன்பத்திலும், நண்பர்களுக்கு உதவவேண்டும் என்பது நினைவுக்கு வர நான் உடனே ரணிலைக் காணச்சென்றேன்.

நான் சென்றபோது ரணில் தலைமயிரைச் சிக்காக்கிக்கொண்டு, சோபாவல் அலட்சியமாகச் சாய்ந்து கொண்டிருந்தார். அவரது கைகளில் வாய்முட்ட நிரப்பிய கண்ணாடிக்குவளை (கிளாஸ்) இருந்தது.

குடிக்கவேண்டிய நிலைமைதான். நான் அழையா விருந்தாளியாக கதிரையில் அமர்ந்துகொண்டே சொன்னேன். ஆனாலும் இதென்ன தனியாக....?

ரணில் மௌனமாக மடமடவெனக் "கிளாஸைக்" காலிசெய்தார்.

"ஒரு பயலையும் காணவில்லை". அவர் வாயைத் துடைத்தவாறே கூறினார். "பார்த்தீரல்லவா? கடைக்கு அனுப்ப ஓர் அமைச்சரைக் கூடக் காணவில்லையே..?" எனக்கு, ரணிலைப் பார்க்கப் பாவமாக இருந்தது.



"அவர்கள் சீக்கிரமாக வீடுசெல்ல ஆயத்தமாகின்றனர் போல", நான் அவருக்குச் சொன்னேன். "சந்திரிகா அரசு அமைப்பதற்கு முன்னரே, வெளிநாட்டிற்கு ரிக்கற் புக் செய்யப் போயிருப்பார்கள்" என்றும் கூறினேன்.

ரணில் என்னை முறைத்துப் பார்த்துவிட்டு 'கிளாஸை' மீண்டும் நிரப்ப ஆரம்பித்தார். நான் 'டக்'கென அவரது கையைப் பிடித்து அதைத் தடுத்தேன்.

"மனதுக்கு வருத்தமாகத் தான் இருக்கும். இருந்தாலும் மனிதர்கள் இப்படிக் குடிக்கக் கூடாது" என நான் அறிவுரை கூறினேன்.

ரணில் என்னைப் பார்த்து வாயைச் சுளித்தார்,

"உமக்கு மூளை பிசகிவிட்டதா?" அவர் என்னைக் கேட்டார். "நான் இப்போது குடிப்பது எனது சந்தோசத்துக்கு" - என்றார்.

நான் உடனே அவரது மனோநிலையைப் புரிந்துகொண்டேன்.

"தேர்தல் வந்தால் மீண்டும் வெல்லமுடியுமென்ற நினைப்பாக்கும்?" நான் அவரைப் பார்த்துக்கேட்டேன். "வென்றபிறகு சந்திரிகாவிடமிருந்து மூன்று அமைச்சுக்களையும் திரும்ப எடுத்துக்கொள்ளலாமென்ற சந்தோசமா?" - இதுவும் எனது கேள்வி.

ரணில், உதட்டோரத்தால் சிரித்துவிட்டு "கிளாஸை" நிரப்பி நிரப்பிக் குடித்தார்.

"அதற்கு மட்டுமல்ல சந்தோஷம்" அவர் பக்கத்திலிருந்த 'டீப்போவில்' அருமையாகத் தாளம் தட்டிக் கொண்டே சொன்னார்.

எனக்குள்ள வரவேற்பை எண்ணியே சந்தோஷம்".

"என்ன? திடீரென்று யாரது வரவேற்றார்" என்று அதிர்ச்சியுடன் நான் அவரிடம் கேட்டேன்.

**- சரா -**

"வன்னியில் இருக்கும் எமது நண்பர்களிடமிருந்து (புலிகளிடமிருந்து) தான்" அவர் தன் பற்கள் முப்பத்திரண்டையும் காட்டிச் சிரித்தவாறே கூறினார்.

"அவர்கள் முடிவே செய்துவிட்டார்கள், என்னை மட்டுமே சிங்களவர்களின் ஏகப்பிரதிநிதி என்று ஏற்க; அதனால் ஜே.வி.பி. - சு.கட்சி உடன்பாட்டைத் தூக்கிக் குப்பையில் போடு!" - என்றாரே பார்க்கலாம்.

# விவசாயத்துறையை விருத்தி செய்வதற்கு இலங்கை இந்தோனேஷியாவுடன் ஒப்பந்தம்

## இருநாடுகளின் விவசாய அமைச்சர்கள் கைச்சாத்து

கொழும்பு,பெப்.3

இலங்கையின் உள்ளூர் விவசாயத்துறையை விருத்திசெய்வதற்கான உடன்படிக்கை ஒன்றில் இலங்கை அரசு இந்தோனேஷியா அரசுடன் கைச்சாத்திட்டுள்ளது.

இரண்டு நாடுகளினதும் விவசாய அமைச்சர்கள் ஜகார்த்தாவில் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

தென் கிழக்காசியாவில் விவசாய அபிவிருத்திக்கென வெளிநாடு ஒன்றுடன் இலங்கை கைச்சாத்திட்ட முதலாவது உடன்படிக்கை இதுவாகும்.

விவசாய விஞ்ஞானிகளுக்குப் பயிற்சியளித்தல், கிராமியத் திட்டங்களை அறிமுகஞ்செய்தல், தகவல்களைப் பரிமாறிக்கொள்ளுதல் மற்றும் விவசாய உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து தனியார் துறையின் ஆதரவைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகியன இவ்வுடன்படிக்கையின் நோக்கங்களாகும்.

விவசாய அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க இந்தக் கைச்சாத்து வைபவத்தில் கலந்துகொண்டார்.(ம-8-6)

# வேம்பொடுகேணி சீ.சீ.த.க.பாடசாலை மீண்டும் சொந்த இடத்தில் ஆரம்பம்

தென்மராட்சி,பெப்.3

பளை வேம்பொடுகேணி சீ.சீ.த.க. பாடசாலை மீண்டும் இத்தாவிலில் உள்ள சொந்த இடத்தில் இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள் மீளக்குடியமர்ந்த வேளையில் பளை அந்திராயன் தேவாலய வளவில் இயங்கி வந்த இப்பாடசாலையின் ஆரம்பப்பிரிவு கடந்த வருடம் (2003) பாடசாலை விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதே இடத்தில் புதிய வகுப்பறைததொகுதிகள் தற்காலிகமாக அமைக்கப்பட்டதையடுத்து அனைத்து வகுப்புகளும் மீண்டும் ஆரம்பிக்கபடடுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இத்தாவில், வேம்பொடுகேணி, இந்திராபுரம் ஆகிய பகுதிக்ளில் மக்கள மீளக்குடியமர்ந்ததும் பாடசாலையில் அதிகளவு மாணவர்கள் இணைவர் என நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது.

(ம-117)

# புலிகள் தொடர்பாகச் சிங்கள அரசு பரப்பிய அவதூறுகள் சர்வதேச அரங்கில் பிசுபிசுப்பு

## 'விடுதலைப் புலிகள்' ஏடு தெரிவிப்பு

கிளிநொச்சி,பெப்.3

புலிகள் இயக்கம் தொடர்பாக சிங்கள அரசுகள் முன்னர் புனைந்து பரப்பிய அவதூறுக் கருத்துக்கள் சர்வதேச அளவில் படிப்படியாகப் பிசுபிசுததுப் போகின்ற நிலை தோன்றியுள்ளதென தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' தெரிவித்துள்ளது.

அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

போர்வெறியர்கள், சமாதான விரோதிகள், பயங்கரவாதிகள் என விடுதலைப் புலிகளின் இயக்கம் மீது சிங்கள அரசுகள் அள்ளி இறைத்த அரசியல் அவதூறுகளை உண்மையென மேற்குநாடுகள் முன்னர் நம்பியிருந்தன.

ஆனால், கடந்த இரண்டு வருடகாலமாக விடுதலைப் புலிகள் சமாதான நடவடிக்கைகளில் காட்டிவரும சமாதான விருபபு, நெகிழ்ச்சிப் போக்குகள், நேர்மையான அணுகுமுறைகள், அரசியல் இராஜதந்திர செயற்பாடுகள் என்பன மேற்கு நாடுகள் கொண்டிருந்த புலிகள் பற்றிய தப்பபிப்பிராயங்களைக் களைய உதவியுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பிரபாகரன் செய்துகொண்ட போர் நிறுத்த உடன்படிக்கையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை ஸ்ரீலங்கா அரசு முழுமையாக நடைமுறைப்படுத்தாத போதும் புலிகள் இயக்கம் சமாதானப்பேச்சை முறித்துக் கொள்ளவில்லை. மாறாக சிங்கள அரசுக்குக் காலஅவகாசங்களைக் கொடுத்து, விட்டுக்கொடுப்புக்களைச் செய்து சமாதான முயற்சியை உயிர்த் துடிப்புடன் வைத்திருக்கப் புலிகள் இயக்கம் உதவியது.

போர்நிறுத்தக் காலத்தில் புலிகளின் வணிகக் கப்பலை சிங்களக் கடற்படை தாக்கியழித்த நிலையிலும் புலிகள் பொறுமைகாத்தனர். தமிழீழக் கடற்பரப்பில் போராளிகள் பலரது சாவுக்குச் சிங்களக் கடற்படை காரணமாக இருந்தபோதும் சமாதான முயற்சிகளைக் குழப்பியடிக்க புலிகள் முனையவில்லை.

அண்மையில் ரணில் அரசின் சில அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் பறித்தெடுத்த கையோடு நாடு முழுவதிலும் அவசர கால நிலையினைப் பிரகடனப்படுத்தி ஒரு பதற்றநிலையைத் தோற்றுவித திருந்தார்.

இதற்குப் பதிலடியாக ஏ-9 பாதையை மூடிப் புலிகள் சமாதானப பேச்சுக்களை முறித்துக்கொள்ளப் போகிறாகள் என்று உலகநாடுகள் நினைததிருந்தன. ஆனால், புலிகள் இயக்கம் பொறுமை இழக்கவில்லை.

சமாதானத்தை ஏற்படுத்தப் பாடுபடும் சர்வதேச சமூகத்துடன் இணைந்து புலிகள் இயக்கம் சமாதானச் சுடரை அணையவிடாது பாதுகாத்தது.

சமாதானத்தைக் குழப்பியடிக்கும் வகையில் சிங்களத் தரப்புப் பல தடவைகள் நடந்துகொண்ட போதிலும் அவற்றிற்குப் பதிலடியாக புலிகள் இயக்கம் காட்டிய அரசியல் முதிர்ச்சியும், விவேகமான செயற்பாடுகளும் சர்வதேச சமூகத்தை வெகுவாகக் கவர்ந்துள்ளன.

இதன்காரணமாக உலகநாடுகள் பலவற்றின் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள், கிளிநொச்சிக்கு வந்து புலிகளின் தலைமைப்பீடத்தைச் சந்தித்துக் கருத்தைப் பரிமாறிக்கொள்ளுமளவிற்குப் புலிகள் மீதான மதிப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். (ம-8-ரி)

## வீதி திருத்த நிதி ஒதுக்கீடு

குருநகர்,பெப்.3

குண்டும் குழியுமாகக் காணப்படும் நல்லூர், நாயன்மார் வீதிப் புனரமைப்புக்காக தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி 4 லட்சத்து 35ஆயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளார். இவ் வீதி பல வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எ-51)

## நூல் வெளியீடு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

நாளை புதன்கிழமை வெளியிடபபடவிருந்த கரவை, சிலேடைக் கவிமணி க.கணபதிப்பிள்ளையின் 'கந்த புராணம் யுத்தகாண்டம்" உரைநூல் வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது.

நாளை பிற்பகல் 2 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவிருந்த இந்த நூல் வெளியீட்டு விழா நடைபெற மாட்டாது என சைவத் தமிழ் நூல் வெளியீட்டுக் கழகத்தினர் தெரிவித்துள்ளனர்.

நூல் வெளியீட்டு நிகழ்வு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் - அக்கழகம் தெரிவித்துள்ளது. (ம-6)

## சமாச அலுவலக திறப்புவிழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் அலுவலகம் யாழ்ப்பாணம், பிரதான வீதியில் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சம்மேளனத்தின் தலைவர் அ.அன்ரனி வென்சஸ்லோஸ் தலைமையில் திறந்துவைக்கப்படும்.

நேற்று திங்கட்கிழமை திறந்துவைகக்கப்படவிருந்த அலுவலகத் திறப்பு விழா வைபவம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஒத்திவைக்கப்பட்டதாக சம்மேளனம் தெரிவித்துள்ளது. (ம-173)

JAFFNA COLLEGE
Cordially invites you to its
Annual Inter - House Athletic Meet
To be held on
Tuesday the 3rd February 2004 at 02.00 p.m.
on the Bicknell grounds
under the distinguished patronage of
Mr.V.Veluppillai
(Provincial Development Engineer, C.E.B.North)
&
Mrs.A.Veluppillai
(Principal, Victoria College)
(C/33069)(35-18-19-34) Principal & Staff.

யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
கந்தரோடை, சுன்னாகம்
இல்ல மெய்வல்லுநர் போட்டி -2004
காலம் : இன்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை பி.ப.1.30 மணி
இடம் : கல்லூரி மைதானம்
தலைவர் : திரு.க.சிவாஜி அவர்கள (அதிபர்)
பிரதம விருந்தினர்: திருமிகு சி.திருவாகரன் அவர்கள் (பிரதேச செயலர், வலிகாமம் தெற்கு)
கௌரவ விருந்தினர்: திருமிகு சி.சுந்தரேஸ்வரன அவர்கள் (முகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி, சுன்னாகம்)
சிறப்பு விருந்தினர்கள்:
திருமிகு செ.குபேரநாதன் அவர்கள் (கோட்டக்கல்விப் பணிப்பாளர், உடுவில்)
திருமிகு மாதுளன் அவர்கள் (யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர்)
பரிசில் வழங்குபவர்:
திருமதி சசிகலா திருவாகரன் அவர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
-அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
(27979)(35-34-18-19)

வலி.வடக்கு, தென்மராட்சி மக்களின்

# உண்ணாவிரதப் போராட்டத்துக்கு பொது அமைப்புகளின் ஒன்றியம் ஆதரவு

யாழ்ப்பாணம்,பெப்.3

வலி.வடக்கு, தென்மராட்சி ஆகிய இடங்களில் சுதந்திரதினத்தை முன்னிட்டு நாளை முதல் மேற்கொள்ளப்படவுள்ள சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்திற்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வலி.வடக்கு, மறவன்புலோ, தச்சந்தோப்பு, தனங்களப்பு, நாவற்குழி தெற்கு ஆகிய இடங்களில் தம்மை மீளக்குடியமர அனுமதிக்க வேண்டுமெனக்கோரி அப்பகுதி மக்கள் நாளை முதல் தொடர்ச்சியாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதிக்கவுள்ளனர்.

இதற்கு ஆதரவு தெரிவித்து வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த பல வருடங்களாக இடம்பெயர்ந்து அவலவாழ்வு வாழ்ந்துவரும வலி.வடக்கு, தென்மராட்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் மீளக் குடியமர்வதற்கு இராணுவம் தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றது.

இதனால், ஏமாற்றமும் - விரக்தியும் அடைந்த மக்கள் தமது எதிர்ப்புணர்வைக் காட்டி கோரிக்கைகள் நிறைவேறும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட முடிவுசெய்துள்ளனர்.

இப்போராட்டத்திற்கு சகல வழிகளிலும் பொதுஜன அமைப்புகளின் ஒன்றியம் உதவிகளை வழங்கும். (ம-8)

# நல்லூர் இளைஞர் கொலை விசாரணை குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸாரிடம்!

யாழ்ப்பாணம்,பெப்.3

தென்மராட்சி, மட்டுவிலில் கடந்த 10 ஆம் திகதி நல்லூரைச் சேர்ந்த ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பொலஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட சில நபர்கள் வான் சாரதியை மட்டுவிலில் வைத்துச் சுட்டுக்கொலை செய்துவிட்டு அவரது வானையும் எடுத்துக்கொண்டு தப்பியிருந்தனர்.

சம்பவம் நடந்து 12 தினங்களுக்குப் பின்னர் சடலம் அவரது உறவினர்களால் அடையாளம் காணப்பட்டிருந்தது.

நல்லூர் முத்திரைச்சந்தை, செம்மணி வீதியில் வசித்து வந்த சுந்தரலிங்கம் விநோதன் என்ற இளைஞனே கொல்லப்பட்டவர் என்று தெரியவந்தது.

கொழும்பில் இருந்து ஒருவர் அந்த வானை வாடகைக்கு அமர்த்தியிருந்தார். பின்னர் இந்த இளைஞன் மட்டுவிலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இந்த இளைஞரின் மரணத்தில் மர்மங்கள் இருப்பதை அடுத்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளும பொறுப்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இளைஞனின் சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்படுவதாகப் பிரேத பரிசோதனை மூலம் தெரியவந்துள்ளதால், எவ்வாறு அந்த இடத்துக்குத் துப்பாக்கி வந்தது என்பது குறித்தும் -

சம்பவத்தில் சம்பந்தப்பட்ட வான் எவ்வாறு கொழும்புக்குச் சென்றது என்பது குறித்தும் -

விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அறியவந்தது.(ம-3)

# நிரந்தர சமாதானம் வரும்வரை படைகளை முக்கிய இடங்களில் வைத்திருப்போம்

## தென்மராட்சி பிரிகேடியர் சொல்கிறார்

சாவகச்சேரி,பெப்.3

"நிரந்தர சமாதானம் வந்ததும் படைகள் தமது நிலைகளுக்கு சென்றுவிடும். அதன் பின்னர் இராணுவம் உங்கள் இடங்கள் எதனையும் வைத்திருக்காது. அத்தகைய சமாதான நிலை வரும்வரை சில முக்கிய இடஙகளல் படைகளை வைத்திருப்போம்."

- இவ்வாறு தெரிவித்தார் இராணுவ பிரிகேடியர் ஜி.ஏ.சந்திரசிறி.

தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில மக்களை மீளக்குடியமர அனுமதி கோரி, நாளைமுதல் தென்மராட்சி பிரதேச செயலகம் முன்பாக நடத்தப்படவுள்ள உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த 31 ஆம் திகதி கோயிலாக் கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்தில் மறுவன்புலோ விவசாயிகள் சம்மேளத் தலைவர் ம.லீலாவினோதன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டபோதே இராணுவ பிரிகேடியர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

பலாலி, தனங்களப்பு ஆகிய பிரதேசங்கள் உயர்பாதுகாப்பு வலயங்களாகும்.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களையும் ஆளணிகளையும் இப்பொழுது திரட்டிக்கொண்டுதான் இருக்கிறார்கள். அரச படைகள் என்ற காரணத்தால் அத்தகைய படைகளைப் பராமரிக்க வேண்டிய பொறுப்பு எமக்கும் உண்டு.

நிரந்தர சமாதானம் வரும்வரை நாம் இராணுவ அதிகாரிகள் என்ற வகையில் முக்கிய இடங்களில் படைகளை வைத்திருக்க வேண்டிய பொறுப்பு உண்டு.

தனங்களப்பு பாதுகாப்பு வலயமாக வந்தது ஏன் என நீங்கள் கருதலாம். பலாலி விமான நிலையம என்பதால் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அதேபோல தனங்களப்பு ஏன் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அதன் வரலாற்றை எடுத்துப பார்த்தால் புலப்படும்.

பூநகரிப்பாதையை விடுதலைப் புலிகள் ஏன் வைத்துள்ளார்கள் என உங்களுக்குத் தெரியும். அங்கே பாதுகாப்பு அமைப்பு இருப்பதையும் நீங்கள் அறிவீர்கள். ஆகையினாலே நாமும் தனங்களப்பில் படைகளை வைத்திருக்க வேண்டி உள்ளது. இதனால்தான் இராணுவ உயர்பாதுகாப்புவலயம் அங்கு அமைக்கப்பட்டுள்ளது.

கோயிலாகண்டிப் பிரதேசத்தில் பல கடற்றொழிலாளர் குடும்பங்கள் உள்ளன. இதனால் நாம் ஒரு திட்டத்தை வைத்துள்ளோம். இக் கடற்றொழிலாளர்கள் - பூநகரி வரை செல்வதற்குரிய அனுமதியைப் படை உயரதிகாரிகள் வழங்குவார்கள்.

5,000 ஏக்கர் விளைநிலத்தை விடுவிப்பதற்கும் நாம் சம்மதம். ஆனால், அங்கே கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன.

மக்களுடன் எமக்குப் பிரச்சினை இல்லை. வரும்காலத்தில் மக்களுக்கு உதவிகள்வழங்க, வீடுகள் அமைக்க நாம் உதவுவோம். ஏற்கனவே வீதிகள், வீடுகள் அமைக்கத்திட்டமிட்டுள்ளோம் - என்றார்.

இக்கலந்துரையாடலில் பொது மக்கள் பிரதிநிதிகள், மனித உரிமைகள் ஆணைக்குழுவின்யாழ் அலுவலக அதிகாரி ஆர்.பி.சந்திரசேகரா, டாக்டர் சு.சி. அருளானந்தம், யு.என்.எச்.சி.ஆர். யாழ். வதிவிடப்பிரதிநிதி சே.கேசு கிறாட்டா, தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கலந்துரையாடலிலும் தீர்வு ஏதும் எட்டப்படாத நிலையில் நாளை முதல் சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுவதில் அப்பகுதி மக்கள் உறுதியாக உள்ளனர். (ம-8-31)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.மாவட்டத்திலுள்ள வலைப் பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று பிற்பகல் 4 மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச சங்கத் தலைவி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் மத்தியஸ்தர் பரீட்சையை நடத்துதல், யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டியில் மத்தியஸ்தம் வகித்தல் என்பவைபற்றி ஆராயப்படவுள்ளது. (ம-5)

A/L-2004, 2005
M.C.Q. வினா - விடை
புவியியல்: K. கிரிதரன்
அரசியல்: பொன். சத்துரு
பொதுவினா: T. திருமுருகன்
ஆசிரியர் போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்
ஆரம்பம்: 04.02.2004 புதன்
9.a.m. (S.L.T.)
நியூட்டன்
ஆரியகுளம்சந்தி, யாழ்.நகர்.
(27981)

15ஆம் நாள் நினைவில்....



வாழ்வுக்காக
1951 - 08 - 17

ஓய்வுக்காக
2004 - 01 - 20

அமரர் சின்னத்தம்பி செல்லத்துரை
(சின்னத்துரை மாமாவின் சகோதரன்)

இன்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை அவரது தந்தையார் இல்லத்தில் (கரவை) ஆத்மசாந்தி நிகழ்வுகள் நடைபெறும்.

மத்தொனி, கரவெட்டி. (27980)(26-34-18-19) - குடும்பத்தினர்.

# அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீண்டும் இயக்குவதற்கு நடவடிக்கை

## அபிவிருத்திச் சபை மேற்கொள்கிறது

யாழ்ப்பாணம்,பெப்.3

அச்சுவேலியில் உள்ள கைத்தொழில் பேட்டையை மீள இயக்க கைத்தொழில் அபிவிருத்திச்சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்தகால யுத்தம் காரணமாக அச்சுவேலி கைத்தொழில் பேட்டை முற்றாகச் செயலிழந்ததுடன் புல், பூண்டுகள் வளர்ந்து பற்றைக்காடாகக் காட்சியளிக்கின்றது.

அறுபத்தைந்து ஏக்கரில் அமைந்துள்ள இந்தக் கைத்தொழில் பேட்டைப் பிரதேசத்தில் 25 ஏக்கர் நிலப் பரப்பைப் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் புனரமைப்புக்கான நிதியை வழங்குமாறு யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரச அதிபரின் உதவி கிடைத்ததும் பணிகளை ஆரம்பிக்க நடவடிச்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

திருத்தவேலைகள் முடிவடைந்த பின்னர் முன்பு அந்தப் பகுதியில் கைத்தொழில்களை மேற்கொண்டவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் இடம் வழங்கப்படும். (ம-3)

### கசிப்பு உற்பத்தி செய்த நபருக்கு ரூ.90ஆயிரம் அபராதம்

வலி.வடக்கு, பெப்.3

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டமை, கசிப்புக் காய்ச்சும் உபகரணங்கள் வைத்திருந்தமை ஆகிய குற்றங்களுக்காக பண்டத்தரிப்பைச் சேர்ந்த நபருக்கு 90ஆயிரம் ரூபா அபராதம் மல்லாகம மாவட்ட பதில் நீதிபதி இ.வசந்தசேனனால் விதிக்கப்பட்டது.

பண்டத்தரிப்பு அம்மன் கோயில் வதியைச் சேர்ந்த மனுவேல் அல்பிரட் என்பவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிமன்றின முன் ஆஜர்செய்யப்பட்டார்.

சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதுடன் குற்றப்பணம் செலுத்த அவகாசம் தரும்படியும் கேட்டுக் கொண்டார். பணம் செலுத்தும் வரையும இரு ஆள்பிணையில் உரியவர் விடப்பட்டுள்ளார். (ம-86)



மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனத்தின் 8ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது அதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் விவசாயிகளிடையே நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். சம்மேளனத் தலைவர் சி.பொ.மா.க. முதலியார், கீரிமலை கமநல கேந்திர நிலைய விவசாய போதனாசிரியர் திருமதி பரமேஸ்வரி மணிவண்ணன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம் : சண்டிலிப்பாய் செய்தியாளர்)*

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்தி வங்கிக் கட்டடம் அமைக்க காணி இல்லாமையால் சிரமம்

வலி.வடக்கு,பெப்.3

நல்லூர் பிரதேச செயலர் பிரிவல் சமுர்த்தி வங்கி அமைப்பதற்கான பணம் கிடைக்கப்பெற்ற போதிலும் காணி இன்மையால் வங்கிக்கான நிரந்தரக் கட்டடம் அமைக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபையினால் வங்கிக்குச் சொந்தமான கட்டடம் அமைக்க 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அரச காணிகள் இன்மையாலும் மற்றும் சொந்தமாகக் காணி கொள்வனவு செய்வதற்குப் போதிய நிதி இன்மையாலும் வங்கிக் கட்டடத்தை அமைக்க முடியவில்லை.

ஒரு வருடத்துக்கு மேல் சமுர்த்தி அபிவிருத்தி வங்கிகள் தனியார் கட்டடங்களில் இயங்குவதற்கு உரிய வாடகைப் பணத்தை சமுர்த்தி அபிவிருத்தி அதிகார சபை வழங்கமாட்டாது என அறுவுறுத்தப்பட்டுள்ளது. (ம-86)

## மணல் அகழ்வால் வீதி சேதமடையும் நிலையில்

### தடுக்கக் கோருகின்றனர் மக்கள்

தெல்லிப்பழை,பெப்.3

ஏழாலை அன்னமார் அம்மன் ஆலயப் பகுதியிலிருந்து மயானம் நோக்கிச் செல்லும் தார் வீதியில் ஒருபுறம் இருந்து மணல் அகழப்படுவதனால் அந்த வீதி மோசமாகச் சேதமடையும் நிலை உருவாகியுள்ளது.

ஒருபுறம் குடியிருப்புகளையும் ஒருபுறம் பற்றைக்காடுகளையும் கொண்டுள்ள இவ்வீதியின் பற்றைக் காட்டுப் பகுதியிலுள்ள மணல் பலராலும் அகழப்பட்டுவருகிறது.

வீதியின் ஓரம் வரையில் இவ்வாறு மணல் அகழப்பட்டுள்ளது. இதனால், வீதியை அண்டி பாரிய குழிகள் ஏற்பட்டுள்ளன. மழை காலத்தில் இக்குழிகளுக்குள் நீர் நிரம்பி அதனால் வீதியின் கீழ்ப்பகுதி அரிக்கப்படுகிறது. இன்னும் சிறிது காலத்தில் வீதி இடிந்து வீழ்ந்து சேதமடையும் நிலையில் உள்ளது.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். குழிகளை மூட ஏதேனும் மாற்று நடவடிக்கை ஒன்றை எடுக்கவும் வேண்டுமென இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-150)




### அரியாலையில் மணல் கடத்தல் மீண்டும் தீவிரம்

அரியாலை,பெப்.3

அரியாலைப் பகுதியில் சட்ட விரோதமான மணல் அகழ்வு மீண்டும் மும்முரமாக இடம்பெற்றுவருகினறது.

உழவு இயந்திரங்கள், கன்டர் வாகனங்கள், லான்ட் மாஸ்ரர் போன்றவற்றில் தினமும் மணல் ஏற்றிச் செல்லப்படுகின்றது.

மணல் ஏற்றிய வாகனங்கள் கண்டி வீதி, ஏவி.றோட் இலந்தைக்குளம் வீதி, கொழும்புத்துறை வீதி, சுவாமியார் வீதி, ஈச்சமோட்டை வீதிகளூடாக டட்டப்பகலில் செல்வதைக் காணமுடிகிறது.

இங்கு அகழப்படும் மணல் (உழவு இயந்திரம்) 4ஆயிரம், ரூபா முதல் 5ஆயிரம் ரூபா வரை விற்கப்படுகின்றது. கடந்த சில மாதங்களாகத் தணிந்திருந்த இந்த மண்கடத்தல் மீண்டும் வேகம் பெற்றுள்ளது. (ம-17)

## மோ.சைக்கிளில் வந்து பெண்களிடம் நகைகள் அபகரிப்பது அதிகரிப்பு

சண்டிலிப்பாய்,பெப்.3

மோட்டார் சைக்கிளில் வந்து பெண்களிடம் எதையாவது விசாரிப்பதாகப் பாவனைசெய்து நகைகளைக் கொள்ளையிட்டுச் செல்லும் சம்பவங்கள் குடாநாட்டில் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

கடந்த வாரம் மானிப்பாயில் இத்தகைய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் வீதி ஓரத்தில் நின்ற பெண் ஒருவரை அழைத்து ஒரு கடதாசியைக் காட்டி இதிலுள்ளவரின் வீடு எங்கேயுள்ளது? என்று விசாரித்துள்ளனர்.

அப்பெண் அருகே வந்து அக்கடதாசியைப் பார்த்த சமயம் அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோடிவிட்டனர்.

மாணிப்பாய் கிறீன் தனியார் வைத்தியசாலக்கு பின்பக்கமாகவுள்ள குறுக்கு வீதியில் இச்சம்பவம் கடந்த வியாழக்கிழமை நண்பகல் நடைபெற்றது.

சங்கிலியை அபகரித்தவர்களின் மோட்டார் சைக்கிள் உடுவில் வீதிப் பக்கமாக விரைந்து சென்று மறைநது விட்டது என்று அப்பெண் தெரிவித்தார். ஒன்றரைப் பவுண் நிறையுள்ள தங்கச் சங்கிலியைப் பறிகொடுத்த இப்பெண்மணி மானிப்பாய் பொலீஸ் நிலையத்தில் இச்சம்பவம் பற்றி முறைப்பாடு செய்துள்ளார்.

நகை அணிந்துகொள்ளும் பெண்கள் இப்படி வருபவர்களிடம் விழிப்பாக நடந்துகொள்ள வேண்டும் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.(ம-135)

### கற்றல் உபகரணம் அன்பளிப்பு

வடமராட்சி,பெப்.3

தொண்டமனாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயம், சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகியவற்றில் கல்விகற்கும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் சமூக மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் சந்நிதியான் ஆச்சிரமத்தினால் இவை வழங்கப்பட்டன. (ம-173)

## அல்வாய் பாரதிதாசன் நூலகத்துக்கு நூல்கள்

### ஊர் மக்கள் அன்பளிப்பு

வடமராட்சி,பெப்.03

அல்வாய் பாரதிதாசன் நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்கள், தொலைக்காட்சிப் பெட்டி, மணிக்கூடு ஆகியன அவ்வூர் மக்களால் வழங்கப்பட்டன.

அமரர் பொன். அரியரத்தினம் ஞாபகார்த்தமாக லண்டனில் வாழும் அவரது மகன் அ.குகனேஸ்வரன் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றையும் கொழும்பில் வாழும் ந.தங்கராசா மணிக்கூடு ஒன்றையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளார்கள்.

கனடாவில் வசிக்கும் பி.பாலசிங்கம் தனது மனைவியின் ஞாபகார்த்தமாக 8ஆயிரம் ரூபா பெறுமதியான 47 நூல்களையும், அமரர் மு.சின்னத்தம்பி ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் 13ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான 88நூல்களையும் கொழும்பைச் சேர்ந்த ந.தங்கராசா 65ஆயிரம் ரூபா பெறுமதியான ஒரு தொகுதி தமிழ், ஆங்கில மொழியிலான கணனி நூல்களையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். (ம-173)

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் குடும்ப அட்டைகள் மீளாய்வு

நல்லூர் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் மீளக்குடியமர்ந்துவரும் மக்களுக்கு நிவாரணம் வளங்குவதற்கென குடும்ப அட்டைகள் மீளாய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவுகளிலும் மீளாய்வு நடைபெற்று வருவதனால் மக்கள் தமது குடும்ப அட்டைகளை மீளாய்வுசெய்து கொளளுமாறு நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் அறிவித்துள்ளார்.

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான கொடுப்பனவு அட்டையையும் மீளாய்வு செய்து கொள்ளுமாறு அவர் கேட்டுளளார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி முதல் மீளாய்வுகள் நடைபெற்று வருகின்றன.

எனவே, மக்கள் தவறாது குடும்ப அட்டைகளை மீளாய்வு செய்து கொள்ளுமாறும் தவறுபவர்களுக்கு இந்த ஆண்டுக்கான நிவாரணம் மற்றும் ஏனைய உதவிகள் நிறுத்தப்படலாம் எனவும் அவர் தெரிவித்தார். (ம-8-6)

## பிரான்பற்றில் அமைக்கப்பட்ட வீடுகள் கையளிப்பு 6ஆம் திகதி

யாழ்ப்பாணம்,பெப்.3

பண்டத்தரிப்பு பிரான்பற்றில் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட வீடுகளில் ஒரு தொகுதி உரியவர்களிடம் கையளிக்கப்படவுள்ளது.

பிரான்பற்று நாவலர் சனசமூக நிலையத்தினரின் ஏற்பாட்டில் எதிர் வரும் 6ஆம் திகதி காலை 9மணிக்கு இடம்பெறவுள்ள நிகழ்வில் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் வீடுகளைக் கையளிப்பார்.

அமைச்சின் நிதியுதவியுடன் பிரான்பற்றில் உள்ள 325 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் பணிகள் முடிவடைந்த ஒருதொகுதி வீடுகளே முதற்கட்டமாக வழங்கப்படவுள்ளன.

மலசலகூட வசதியின்றி இருந்த 450 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு ஏற்கனவே அமைச்சின் உதவியுடன் மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. (ம-185)

## வீதி ஒழுங்குகளை மீறுவோர் மீது இனி சட்ட நடவடிக்கை

### சுன்னாகம் போக்குவரத்துப் பொலீஸார் அறிவுறுத்தல்

தெல்லிப்பழை,பெப்.3

வீதி ஒழுங்குகளை பேணாதவர்களுக்கு ஜனவரி மாத இறுதிவரை எச்சரிக்கைகளையும், அறிவுறுத்தல்களையும் வழங்கி வந்தோம். பெப்ரவரி மாதம் முதல் அத்தகையவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள். வாகனங்களில் பயணிப்போர் உரிய வீதி ஒழுங்குகளை பேணுவது அவசியம்.

- இவ்வாறு சுன்னாகம் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு பொலீஸ் பிரிவு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

கடந்த வருடம் மட்டும் உரிய முறையில் வீதி ஒழுங்குகள் பேணப்படாததால் தமது பிரிவில் 120 இற்கும் மேற்பட்ட மிகமோசமான வீதி விபத்துக்கள் நடைபெற்றுள்ளன என்று போக்குவரத்துப் பிரிவுப் பொலஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வருடம் முதல் வீதி ஒழுங்குகளை மீறுவோர் மீது உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்றும் அவர் மேலும் கூறினார்.(ம-150)

### தையல், மனையியல் இலவச பயிற்சி

சண்டிலிப்பாய்,பெப்.3

பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏ 2004 ஆம் ஆண்டுக்கான இலவச தையல் மற்றும் மனையியல் பயிற்சி நெறியொன்றை அண்மையில் ஆரம்பித்துள்ளது.

இதுவரை எட்டு இளம் பெண்கள் இப்பயிற்சி நெறியில் சேர்ந்துள்ளனர். படித்துவிட்டு வேலை வாய்ப்பு எதுவுமின்றி இருக்கும் யுவதிகள் இப்பயிற்சியில் சேர்ந்து பயன்பெற முடியும் என்று வை.எம்.சி.ஏயின் தலைவர் க.அ.சின்னத்தம்பி தெரிவித்துள்ளார்.

பயிற்சி முடிவில் இவர்களுக்குச் சான்றிதழ் வழங்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-135)

**கடந்த ஆண்டில்**

## மானிப்பாய் இலங்கை வங்கி 7கோடி ரூபா கடன் வழங்கியது

சண்டிலிப்பாய்,பெப்.3

மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை தனது திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு தனது வாடிக்கையாளர்களுக்கு 7 கோடி 30 லட்சம் ரூபாவைக் கடனாக வழங்கியுள்ளது.

இதேவேளை -

புதிய கிராமியக் கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டில் பெரும்போக நெற்செய்கையில் ஈடுபட்ட 30 விவசாயிகளுக்கு 10 ஆயிரம் ரூபா முதல் 25 ஆயிரம் ரூபா வரை கடனுதவி வழங்கப்பட்டுள்ளதாக வங்கி முகாமையாளர் என். ஜெயரட்ணம் தெரிவித்தார். (ம-135)

## பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு, கலைமகள் வீதியைச்சேர்ந்த
செல்லத்துரை துரைசாமி
ஆகிய நான் 01.02.2004 ஞாயிறு முதல் என்னுடைய பெயரை
**செல்லத்துரை சிவராஜன்**
என்று மாற்றியமைத்துள்ளேன். ஆகவே இனிமேல் என் சகல தேவைகளுக்கும் என்னுடைய பெயரை செல்லத்துரை சிவராஜன் என்றே பயன்படுத்துவேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு,
கல்வியங்காடு,யாழ்ப்பாணம்.
செல்லத்துரை சிவராஜன்.
(27920)(32-18-16)



உ
சிவமயம்
தோப்பு அச்சுவேலி அருள்மிகு சங்கரநாராயண தேவஸ்தானம்

## மஹா கும்பாபிஷேக விழா

இன்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிமுதல் மாலை 3.00 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல்.

நாளை (04.02.2004) புதன்கிழமை காலை 7.00 மணிமுதல் 8.00 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில் மஹாகும்பாபிஷேகம்.

பிரதமகுரு: சிவஸ்ரீ தியாக.கெங்காதரக்குருக்கள்
(புன்னாலைக்கட்டுவன்)

அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!

தோப்பு,
அச்சுவேலி. (27987)(37-18-16-32)
ஞா.கமலாதேவி
ஆலய தர்மகர்த்தா.





உ
அம்பிகை துணை
ஏழாலை தெற்கு களபாவோடை (வசந்தபுரம்)
அருள்மிகு ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம்

### சப்பர, தேர், தீர்த்தோற்சவ விஞ்ஞாபனம்

சப்பரம் :-04.02.2004 புதன்கிழமை
தேர் : 05.02.2004 வியாழக்கிழமை
காலை 7.00 மணி அபிஷேகம்
காலை 10.00 மணி மூலஸ்தான பூஜை
காலை 11.00 மணி வசந்த மண்டபப் பூஜை
காலை 11.30 மணி எழுந்தருளல்
பி.ப 3.00 மணி பச்சை சாத்தி திருநடனம்
தீர்த்தம் : 06.02.2004 வெள்ளிக்கிழமை
முற்பகல் 10.00 மணி

அம்பிகை அடியார்கள் அனைவரும் உற்சவங்களில் கலந்து அன்னையின் இஷ்டசித்திகளைப் பெற்று இன்புறுவார்களாக. உற்சவ காலங்களில் மாஹேசுவர பூஜை இடம்பெறும்.

(27983)(32-14)
- மேற்படி தேவஸ்தானம்.



## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

*பிரபலமான நிறுவனமொன்றுக்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. விண்ணப்பதாரர்கள் கீழ்க்கண்ட தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

(அ) (1) க.பொ.த.(சா/த) பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.
(2) திடகாத்திரமான உடலமைப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.
(3) வயது 20-50இற்கு உட்பட்டவராக இருத்தல்வேண்டும்.
(ஆ)(1) தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழியாற்றல் உள்ளவர்களுக்கும் பாதுகாப்புச் சேவை தொடர்பான முன் அனுபவமுடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
(2) தெரிவு செய்யப்படுவோர் பகலிலும்/ இரவிலும் பணியாற்றக் கோரப்படுவர்.
(3) சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்
(4) விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-

**விளம்பர இல.: 2155**
C/o உதயன்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/33083)(35-32-14)


## 'கலாபூஷணம்' விருது வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.3

கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமய கலாசார அலுவலகள் திணைக்களம், முஸ்லிம் சமய கலாசார அலுவல்கள் திணைக்களம ஆகிய மூன்று திணைக்களங்களும் இணைந்து நடத்தும் 2003ஆம் ஆணடுக்கான 'கலாபூஷணம்' விருது வழங்கும் வைபவம் சுதந்திர தினமான நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு ஆனந்தகுமார சுவாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோன் டீ சில்வா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து 13 பேரும், ஏனைய மாவட்டங்களில் இருந்து 16 பேருமாக மொத்தம் 29 தமிழ்க் கலைஞர்கள் இவ்விருதினைப் பெறுவதற்குத் தெரிவாகியுள்ளனர்.

'கலாசூரி' கலாநிதி எஸ்.பணி பாரத மற்றும் பல கலைஞர்கள் மத்தியில் நடைபெறும் இவ்வைபவத்தில், மனிதவள அபிவிருத்தி, கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி கருணாசேனகொடித்துவக்கு, துறைமுக அபிவிருத்தி, கப்பல்துறை அபிவிருத்தி, கிழக்கு முஸ்லிம் சமய விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம், இந்து சமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பிப்பர். (எ-15)

## அரச அலுவலருக்கு மொழித்திறன் பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம்,பெப்.3

யாழ்.மாவட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களின் மும்மொழித் திறனை விரிவுபடுத்தும் நோக்குடன் வடக்கு-கிழக்கு மாகாண முகாமைத்துவப் பயிற்சித் திணைக்களத்தால் நடத்தப்பட்டுவரும் ஆங்கிலம் மற்றும் சிங்கள பயிற்சி வகுப்புகள் தற்போது யாழ்ப்பாணத்திலும் இடம்பெற்றுவருவதாக வடக்கு-கிழக்கு மாகாண சபையின் யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் தெரிவித்தார்.

இப்பயிற்சிநெறி யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியிலும், சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலும் வாரத்தில் இரு நாள்கள் நடைபெற்று வருகின்றன என அவர் தெரிவித்தார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெற்று வந்த ஆங்கில மொழிக்கான பயிற்சி நெறி பயிற்சியாளர்களின் எண்ணிக்கை போதாமையால தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுளது. சிங்கள மொழி பயிற்சி நெறி முடிவுற்றதும் அதனை மீளத் தொடங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப் பயிற்சிநெறிக்கான மொழி சார்ந்த புத்தகங்களும் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் பிராந்திய ஆணையாளர் மேலும தெரிவித்தார். (ம-8)


### விற்பனைக்கு

மோட்டோறோலா தொலைபேசி விற்பனைக்குண்டு.
தொடர்பு:-
நாதன்ஸ் கொமினிக்கேசன்,
பிரதான வீதி,
பருத்தித்துறை.
T.P-021-2263278
(சி-33079)(38)



### வேலையாள்கள் தேவை

தொலைத்தொடர்பு நிலையத்தில் வேலை செய்வதற்கு ஆண், பெண் வேலையாள்கள் தேவை
தொடர்பு:-
நாதன்ஸ் தொலைத்தொடர்பு நிலையம்,
பிரதான வீதி, பருத்தித்துறை.
(சி-33078)(32)



**BEACON**
VATHIRY KARAVEDDY

LOGIC கருத்தரங்கு 6 மணித்தியாலங்கள்
முன்னாள் வடமராட்சி, யாழ். தற்போது கொழும்பு முன்னணி ஆசிரியர்
திரு.A.விக்கி
05.02.2004 காலை 8மணி
பாடக்குறிப்புகள் வழங்கப்படும்.
கட்டணம் ரூபா.50/=
(33081)(32)


## மெய்வன்மை போட்டிகள்

வலிதெற்கு,பெப்.3

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் க.சிவாஜி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

★ ★ ★

இணுவில் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் வி.சச்சிதானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

கிழக்குப்பல்கலைக்கழக கணிதத்துறை விரிவுரையாளர் கலாநிதி இ.விக்கினேஸ்வரன் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (ஏ-10-152)


### அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திக்காக 01-02-2004இல் நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் பின்வரும் இலக்கங்கள் பரிசில்கள் பெற்றுள்ளன.

முதலாம் பரிசு:- 1286
இரண்டாம் பரிசு:- 3659
மூன்றாம் பரிசு:- 2804

*ஆறுதல் பரிசில்கள்:*
2524, 2391, 2704, 0968, 0420

மு.கு:- பரிசில்களை இவ் விளம்பரத் திகதியில் இருந்து 15 நாள்களுக்குள் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுகிறது.

தலைவர்
கிராமிய வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கம்,
வட்டுக்கோட்டை. (சி-33080)(38-14-32)



### வெற்றிடங்கள் - பாதுகாவலர்கள்
### கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

தகைமைகள்:- க.பொ.த.(சா/த) சித்தி.
உயரம்:- 5'4" - மார்பு:- 32"
நல்ல தேகாரோக்கியமும், கண்பார்வையும் இருத்தல் வேண்டும். ஓய்வுபெற்ற பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
வேதனம்:- ரூபா 4500/= மாதமொன்றிற்கு *(30நாள்கள்)*
ரூபா 300/= ஒழுங்கான வருகை
குறிப்பு:- அனுபவம் உள்ளவர்களுக்கு விசேட வேதனம் கொடுக்கப்படும்.

**நேர்முகப் பரீட்சை:- 08-02-2004 காலை 10.00மணி தொடக்கம் பி.ப.1.00மணி வரை**

*1. கிராம அதிகாரியின் நற்சான்றிதழ்*
*2. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்*
*3. தேசிய அடையாள அட்டை*
*4 விசேட அடையாள அட்டை*
*5. பாடசாலை சான்றிதழ் என்பவற்றுடன்*

43, கல்லூரி வீதி (யாழ்.இந்து மைதானம் முன்பாக),
யாழ்ப்பாணம்
*என்ற முகவரியில் எங்கள் காரியாலயத்தில் சமுகம் கொடுக்கவும்.*
(C/33084) (26-14-32)
- பணிப்பாளர்.



## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
19 07 1959

ஆண்டவன் அடியில்
25 01 2002

**அமரர் நாகேந்திரம் ஜெகதீஸ்வரன்**
திதி:- 03.02.2004

எமக்கு ஒளிவிளக்காகத் திகழ்ந்த
எம் அன்பு அண்ணாவே!
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டது.
ஒவ்வொரு கணமும் உங்களை நினைத்து
துன்பப்படுவதை யாரொடு நோவோம்
யார்க்கெடுத்துரைப்போம்.
நீங்கள் இல்லாமல் எப்படி
ஆறுதல் அடைவோம் - ஒரேவழி
எம்மையும் அழைத்துவிடுவதே

*சுன்னாகம் மத்தி.* (27986)(32-16-18)
- குடும்பத்தினர்.



## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
23 05 1914

விண்ணில்
06 02 2001

**அமரர் விசாலாட்சி இராமலிங்கம்**
திதி:திரயோதசி

அம்மா நீங்கள் மறைந்து ஆண்டுகள் மூன்றானாலும்
உங்கள் நினைவலைகள் எம்மைவிட்டு நீங்காது!

*செட்டித்தெரு வீதி,*
*நல்லூர்.* (27982) (32-14)
- மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

ௐ

# "லயம்" நுண்கலை பயிலகம்

(வண்ணை நாச்சிமார்கோயிலுக்கு முன்பாக)

## மிருதங்க வகுப்புகள்

எதிர்வரும் 05.02.2004 வியாழன் தைப்பூசத்தினத்தன்று புதிய மிருதங்க வகுப்புகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. சேர விரும்புவோர் தொடர்புகொள்ளவும்.

"லயம்" நுண்கலை பயிலகம்
620, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(27995)(37-11-13-31)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 18 - 03 - 1929



மறைவு 05 - 01 - 2004

## அமரர் மாணிக்கம் கிருஷ்ணன் (கிட்டுணு)

எமது அன்புத் தந்தையார் சுகவீனமுற்று யாழ். போதனா வைத்திய சாலை அறை இல.8 இல் அனுமதிக்கப்பட்டிருந்தபோது உள்ளன்போடு கவனித்த மருத்துவர்கள், மருத்துவ தாதிகள், உபஊழியர்கள் அனைவருக்கும்,

அன்னார் சிவபதமடைந்த செய்திகேட்டு நேரில்வந்து ஆறுதல்படுத்தியும் உதவியும் ஒத்தாசையும் புரிந்த அனைவருக்கும், தபால் மூலமும், பத்திரிகை மூலம் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டும், மலர்வளையங்கள் சாத்தியும் தக்க நேரமதில் தாகம் தீர்த்த அன்புள்ளங்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன் நாளை (04.02.2004) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

*19, கொண்டலடி லேன்,*
*நல்லூர்.*

\- குடும்பத்தினர்.

(27993)(40-13-31)

# மரண அறிவித்தல்கள்

## இரட்ணம் இராமச்சந்திரன்

(மெக்கானிக் பக்தர் - மாதனை, பருத்தித்துறை)

ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் மாதனையை வசிப்பிடமாகவும் கொண்ட இரட்ணம் இராமச்சந்திரன் அவர்கள் 31.01.2004 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரட்ணம் -தையலாம்பாள் ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், நீதிராசா, சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் அரியமலரின் அன்புக் கணவரும் சந்திரகுமாரி, கலா(வைத்தியசாலை, வல்வெட்டித்துறை), சந்திரலீலா(சுவிஸ்), (செல்வி) சந்திரவதனா (சுவிஸ்), சந்திரகௌரி (லண்டன்), மயில்வாகனம் (சுவிஸ்), சந்திரகுமார் (சுவிஸ்), சந்திரசிறி (லண்டன்), சந்திரபாலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காயத்திரி, காஞ்சனா, கல்பனா, சௌமீகா, அருண்குமார், அஜித்குமார், சத்துருசன், சகானா, சந்தோஸ், அனுசாந், [illegible]னோ, லக்ஸ்சனா ஆகியோரின் அன்புப் பேரனும் மனோகரராசா, சௌந்தர[illegible] ராஜ்குமார், ராஜி, சரஸ்வதி, ஆஷா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3.2.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோரையடி - முனை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பாடசாலை வீதி,*
*மாதனை, பருத்தித்துறை.*

தகவல்:
குடும்பத்தினர்.

(27996)(13-11-31)

## சுப்பையா சதாசிவம்

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும், சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சதாசிவம் அவர்கள் நேற்று (02.02.2004) திங்கட்கிழமை ஹற்றனில் காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக்கணவரும் உருத்திரசிங்கம் (கொலண்ட்) வன்னியசிங்கன் (பிரதம எழுதுநர், யாழ். மாவட்ட நீதிமன்றம்), அமிர்தலிங்கம் (விரிவுரையாளர், ஸ்ரீபாதக் கல்லூரி, பத்தனை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோண்டாவிலில் நடைபெறும். திகதி பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*செருக்கம்புலம் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.*

தகவல்
ச.வன்னியசிங்கன்
(மகன்).

(27994)(37-13-31-11)

## திருமதி கதிரவேலு பூமணி

அரசடி வீதி, இருபாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கதிரவேலு பூமணி அவர்கள் நேற்று (2.2.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் கதிரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பு - தெய்வானையின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - மாரிமுத்துவின் அன்பு மருமகளும் கனகமணியின் அன்புச் சகோதரியும் தர்மகுலசிங்கம் (கிளி), சரோஜினிதேவி, ஜெயபாலசிங்கம் (பாலா), கருணாநிதி (ஜேர்மனி), காலஞ்சென்ற வசந்தகுமாரி மற்றும் சாந்தகுமாரி (பிரான்ஸ்), உருத்திரகுமார் (உதயன்) (கால்நடை சினைப்படுத்தும் நிலையம், முல்லைதீவு), சுரேந்திரன் (இந்திரன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சாந்தவதனி, பாலச்சந்திரன், செல்வமலர், யசோ, றஸ்மின்றாஜ், றஞ்சிதமலர், டொய்சி ஆகியோரின் அன்பு மாமியாரும் அஜிபாரத் ரமணா (மக்கள் வங்கி, சங்கானை), மரா, முகுந்தன், மதுரா, கஜமுகி, குகன்ஜா, பௌசிகா, அன்புஜா, நிருந்தா, நருபன், ஜனா, சஞ்சுதா, சபிதா, சஜிதா, சஞ்சீபன், சாரா, சானுஜன், தனுஷன், பைரவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (4.2.2004) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, காலை 10 மணிக்கு பூதவுடல் இருபாலை பொது மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'பூமகள் வாசா', அரசடி வீதி,*
*இருபாலை.*

தகவல்:
\- குடும்பத்தினர்.

(27999)(31-11-36-13)

## இளைஞர் படுகாயம்!

நேற்றுமதியம் மட்டுவில் கல்வயலைச் சேர்ந்த எஸ்சுபாஸ்கரன் (வயது29) என்ற இளைஞர் மரம் அரியும் இயந்திரத்துக்குள் கை சிக்கியதில் படுகாயமடைந்து யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஒ-6-15)


# VACANCY

COMPUTER TYPE SETTER (GIRL)
HARDWARE TECHNICIAN (BOY)

SKY COMPUTER SYSTEMS
109, KANDY ROAD,
CHUNDIKKULI,
JAFFNA.
(NEAR KACHCHERI)
T.P.:0777 305533

(27997)(37)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரசாந், கிரண் நடித்த
வின்னர் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
How To Lose A Guy In 10 Days
(C-32981) (12)

லிபேட்டி அச்சுவேலி
அர்ஜுன், சிம்ரன், மும்தாஜ் நடித்த
ஏழுமலை (ரீல்ஸ்)
காட்சிகள்.: 3.00, 7.00. (பு.நே)
(C/33049)

நாகம்ஸ் சுன்னாகம்
கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P. இன் பொங்கல் வெளியீடு
விருமாண்டி (ரீல்ஸ்)
(சண்டியர்)
அடுத்த வெளியீடு
ஒற்றன்
காட்சி நேரம் : 11.00 3.00 7.00 (பு.நே.)
(C/33048)(12)

ராஜா யாழ்ப்பாணம்
பிரசாந்த் நடித்த
ஜேஜே (ரீல்ஸ்)
காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)
(சி 33050)(32)


# தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு

## சிறப்பு மலர் வெளியீடு

மேற்படி மலர்வெளியீடு தொடர்பாக அமைக்கப்பட்ட குழு இப்பிரிவு குறித்த சமூக, பொருளாதார, பண்பாடு, வரலாறு பற்றிய கட்டுரைகளை வரவேற்கின்றது. ஆர்வமுள்ள துறைசார் அறிஞர்கள், எழுத்தாளர்கள் தங்கள் பங்களிப்பை செய்யுமாறு வேண்டுகின்றோம். எம்முடன் தொடர்பு கொண்டால் நாம் மேலும் விவரங்களை அனுப்புவோம்.

**தொடர்பு முகவரிகள்:-**

I. உதவி அரச அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை.

II. திரு.ஆ. சபாரட்ணம் (முன்னாள் அதிபர்)
குமரவாசம்,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

உதவி அரச அதிபர் பணிமனை
தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை.

இ.நித்தியானந்தன்
பண்பாட்டு அலுவலர்
செயலாளர்-சிறப்புமலர் வெளியீட்டுக்குழு

(சி-33086)(37-13-31)

# இளவாலை போயிட்டி புனித லூர்து அன்னை ஆலய வருடாந்தத் திருவிழா

02.02.2004 திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு செபமாலையுடன் நவநாள் திருப்பலி ஆரம்பமாகி 10.02.2004 அன்று மாதாவின் திருச்சொருபம் ஊர்மனை ஊடாக எடுத்துச்செல்லப்பட்டு அதைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும், 11.02.2004 புதன்கிழமை காலை 7.00 மணிக்கு திருநாள் திருப்பலியும் மாதாவின் ஆசீர்வாதமும் நடைபெறும்.

பங்குத்தந்தை,
பங்குமக்கள்.

(27992)(18-13-31)

# பூப்புப்புனித நீராட்டு விழா அழைப்பு

*அன்புடையீர்,*

திரு.திருமதி துரைராசா றஞ்சினி
தம்பதிகளின் செல்வப் புதல்வி

## செல்வி மதுரா துரைராசா

அவர்களின் பூப்புப்புனித நீராட்டு விழா எதிர்வரும் (05.02.2004) வியாழக்கிழமை காலை 10.30 முதல் 11.45 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து செல்வியை ஆசீர் வதித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


*'ஐயப்பா இல்லம்',*
*ஊறணி,*
*வல்வெட்டித்துறை.*

திரு. திருமதி
துரைராசா றஞ்சினி.

(சி-33087)(31-11-13)

# 6ஆம் மாத நினைவஞ்சலி

தோற்றம் 09 . 12 . 1968



மறைவு 09 . 08 . 2003

## அமரர் ஜெயரட்ணம் சந்துரு

### (கேமச்சந்திரன்)

மாதங்கள் ஆறு ஆகினும் ஆறவில்லை
எம் துயரம்; என்றென்றும் உம்
நினைவுடன் வாழும்.

*தகவல்:*
திரு. திருமதி ஜெயரட்ணம்
கனடா.
T.P.: 416 - 2677861
222 3303
222 3731

அப்பா, அம்மா, பேர்த்திமார், சகோதர சகோதரிகள், மைத்துனர்கள், மருமக்கள் மாமன்மார், மாமிமார், சித்தப்பா, சித்தி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள்.

(27991)(31-13)

# வடமராட்சி மீனவர்களுக்கு சுழற்சி முறைக்கடன் திட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.3

வடமராட்சி கிழக்கு மற்றும் வடமராட்சி வடக்குப் பிரதேச மீனவர்கள் மீன்பிடி உபகரணங்களைக் கொள்வனவுசெய்ய மூன்று கோடி ரூபாவை 'நிகொட்' நிறுவனம் வழங்கவிருக்கின்றது.

அந்தப்பிரதேசத்தில் உள்ள 18 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, சுழற்சிமுறையில் மீனவர்களுக்கு கடன்கொடுக்க இந்தத் தொகையை 'நிக்கொட்' வழங்க முன்வந்துள்ளது.

இந்தக் கடன் வழங்கும் வைபவம் எதிர்வரும் 7ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு மருதங்கேணி இந்து தமிழ்கலவன் பாடசாலையில் இடம்பெறும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைப் பிரதிநிதி ஜோன் கூனி உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொள்வர். (ஒ-3)

## தமிழர் தாயகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்கும்படி வடக்கு - கிழக்கில் வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டுள்ளன. மக்கள் பிரச்சினைகளை முன்வைத்து அன்றைய தினம் போராட்டங்கள் நடத்தவும் அழைப்புகள் விடப்பட்டுள்ளன.

**வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம்**

குடாநாட்டில் சுதந்திர தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்கும்படி யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் கேட்டுள்ளது.

ஸ்ரீலங்காவுக்கு சுதந்திரம் கிடைத்து 56 ஆண்டுகள் ஆகியும் தமிழருக்கு இன்னமும் சுதந்திரம் கிடைக்கவில்லை. தமிழர்களுக்குப் பூரண சுதந்திரம் கிட்டும் வரை சுதந்திர தினத்தை அவர்கள் பகிஷ்கரிப்பார்கள். யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பொது நிறுவனங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகள், கூட்டுறவு மையங்கள், வர்த்தக ஸ்தாபனங்கள், கல்வி நிறுவனங்கள் அனைத்தும் சுதந்திர தினக் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிக்க வேண்டும். இவ்வாறு வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கோரியுள்ளது.

யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுக் சங்கங்களின் சமாசம், சனசமூக நிலையங்களின் சமாசம் உட்பட்ட பொது அமைப்புகள் கரிநாள் அனுஷ்டிப்புக்கு ஆதரவு தரும்படி வேண்டுகோள் விடுத்துள்ளன.

இதேவேளை, வலி.வடக்கு மற்றும் தென்மராட்சி தெற்குப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்களைத் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமரக் கோரி நாளை முதல்சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டங்களை தத்தமது பகுதிகளில் ஆரம்பிக்க உள்ளனர்.

**மட்டக்களப்பு பெருமன்றம்**

இதேவேளை, இலங்கையின் சுதந்திர தினத்தை தமிழ்மக்கள் கரிநாளாக அனுட்டிக்கவேண்டுமெனவும் - அன்று கடைகளையும் வர்த்தக நிலையங்களையும் மூடி அனைத்து இடங்களிலும் வாகனங்களிலும் கறுப்பு, வெள்ளைக் கொடிகளைப் பறக்க விடவேண்டுமெனவும் மட்டகளப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில், எமது தலைவிதியை நாமே தீர்மானிக்கும் நாள் என்று ஏற்படுகின்றதோ அன்றுதான் தமிழினம் தனது சுதந்திரத்தைக் கொண்டாடமுடியும். எனவே, தமிழ் மக்களின் வாழ்வில் கரிபூசப்பட்ட நாளான பெப்ரவரி 4ஆம் திகதியை தமிழ்மக்கள் யாவரும் கரிநாளாக அனுட்டிப்பதுடன், எமது சுதந்திரத்தைப் பெற்றெடுப்பதற்கான நாளாகவும திடசங்கற்பம் கொள்வோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் சுதந்திர தினத்தை துக்கதினமாக அனுட்டிக்குமாறு வவுனியா மாவட்ட வெகுஜன அமைபபுகளின் ஒன்றியம் அழைப்பு விடுத்துள்ளது.

வேதனையில் துவண்டு, வாழ்க்கையே இருண்டு போயுள்ள தமிழ் மக்களின் வாழ்வில் இது சுதந்திர தினமல்ல; இதனைத் துக்க தினமாக அனுட்டிக்க வேண்டும் என்று அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (உ-ஒ)

## மெய்வன்மை போட்டிகள்

வலி.வடக்கு,பெப்.3

உடுவில் மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் கலாநிதி செல்வி சி.வி. செல்லையா தலைமையில் இடம்பெறவுள்ளது. (ஒ-86)

★ ★ ★

கோப்பாய்,பெப்.03

அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மை போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் க.இராசசேகரம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்துகொள்வார். (ஒ-72)

## மாவிட்டபுரம் செல்ல போக்குவரத்து ஏற்பாடு

வலி.வடக்கு,பெப்.3

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் தைப்பூசத் திருவிழாவுக்கு செல்லும் அடியார்களுக்கான போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

நாளைமறுதினம் காலை 8.00 மணிக்கு தெல்லிப்பழை சோதனை நிலையத்திற்குச் செல்லும் அடியார்கள் ஆலயத்திற்கு பஸ்மூலம் அழைத்துச் செல்லப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஒ-86)

## மினிபஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாறு அறிவித்துள்ளது.

ஈழத்தமிழர்களுக்கு உண்மையான சுதந்திரம் கிடைக்கவில்லை என்பதை உலகுக்கு உணர்த்த விடுக்கபட்ட கரிநாள் அனுட்டிப்பு அழைப்புக்கு ஆதரவளிப்பதற்காக மேற்படி தலைமைச்செயலகம் தெரிவித்துள்ளது.

# கால்நடை களவுபோவதைத் தடுக்க கரம்பொன்னில் விழிப்புக்குழு அமைப்பு

ஊர்காவற்றுறை,பெப்.3

ஊர்காவற்றுறைப் பகுதியில் கால்நடைகள் களவாடப்படுவதை தடுக்கும பொருட்டும் அவை அனுமதியின்றி இறைச்சிக்காக வெட்டப்படுவதைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் கரம்பொன விவசாய சம்மேளனத்தினால் விழிப்புக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழு ஊர்காவற்றுறை பகுதியில் மறைவிடங்கள் மற்றும் மீளக்குடியமராத மக்களின் வீடுகள் ஆகியவற்றில் மாடுகள் களவாகப் பிடிக்கப்பட்டு இறைச்சிக்காக வெட்டப்படுவதை கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவதுடன், இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை இனம் கண்டு இதுதொடர்பான தகவல்களை அப்பகுதி கிராமசேவை அலுவலருக்கு வழங்குவதுடன் அவரூடாக மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என மேற்படி விவசாய சம்மேளனத் தலைவர் வ.அஞ்சலோ தெரிவித்தார்.

கடந்த முதலாம் திகதி கரம்பொன், பாலாவி வீதியிலுள்ள பாழடைந்த வீடு ஒன்றில் பசுமாடு ஒன்று கட்டப்பட்டிருப்பதை விறகு பொறுக்கச் சென்ற ஒருவர் அவதானித்து ஜே/5 கிராம அலுவலர் எஸ். பாலச்சந்திரனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. எனினும், அதனை உரியவரிடம் ஒப்படைக்கும் வரை வைத்துப் பராமரிக்கும் வசதி இன்மையால் அது பின்னர் அவிழ்த்துவிடப்பட்டது.

எனவே, இதுபோன்ற சம்பவங்கள் பரவலாக அதிகரித்து வருவதால் இதர பகுதிகளிலும் விழிப்புக்குழுக்கள் அமைக்கப்படுவதினூடாக இவற்றை ஓரளவு கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-16)

## மாட்டுவண்டியிலிருந்து தவறி வீழ்ந்து காயம்

தென்மராட்சி,பெப்3

மாட்டு வண்டியிலிருந்து தவறி வீழ்ந்தவரின் கால்பாதத்தில் வண்டிச் சக்கரம் ஏறியதால் பாதம் சிதைந்த சம்பவம் சமீபத்தில் சாவகச்சேரி வடக்கு மருதடியில் இடம்பெற்றது.

இதேஇடத்தைச் சேர்ந்த க.கனகசபை (வயது55) என்பவரே இந்த சம்பவத்தில் காயமடைந்தார். அவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

## தென்மராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளப்பு, மறவன்புலோ கைதடி - நாவற்குழி வடக்குப்பகுதி ஆகியவற்றில் மீளக்குடியமர அனுமதிகோரி இலங்கையின் சுதந்திரதினம் முதல் சாகும வரை உண்ணாவிரதம் இருப்பதாகத் தீர்மானித்தோம். இந்த நிலையில் நேற்று திங்கட்கிழமை இராணுவத்தினர் கைதடி - நாவற்குழி வடக்குப்பகுதியையும் மறவன்புலோ மேற்கில் ஒரு சிறுபகுதியையும் விடுவித்துள்ளனர் என்று அறிவித்து மக்களை அங்கு அழைத்துச்சென்றனர். ஆனால் தனங்களப்பு வரையிலான முழுப்பகுதியையும் அவர்கள் விடுவிக்காமையால் நாளை திட்டமிட்டபடி உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும். இப்பகுதி மக்கள் அனைவரும் இதில் தவறாது பங்குபற்றி ஒத்துழைப்பு நல்கவும் என்று தெரிவிக்கப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## சா.சச்சிதானந்தக் குருக்கள்

புத்தூரைச் சேர்ந்த சா.சச்சிதானந்தக் குருக்கள் நேற்று (02.02.2004) திங்கட்கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் பாலசுப்பிரமணியக் குருக்கள், வரலட்சுமி, சசிகலா, சர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவிலில் நடைபெற்று, பிற்பகல் 2 மணியளவில் பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஐயனார் கோயிலடி,*
*சிவகுரு லேன்,*
*கொக்குவில்.*

(27998)(36-11-12)

தகவல்:
மனோன்மணி
(மனைவி).

## அருணாசலம் இராஜரத்தினம் ஆச்சாரியார்

உடுப்பிட்டி, இமையாணன் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் இராஜரத்தினம் அவர்கள் 02-02-2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - அழகம்மா ஆகியோரின் பாசமிகு மகனும் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் ஏகநாயகி, சிறீஸ்கந்தராஜா, புவனேஸ்வரராஜா (சுவிஸ்), மேகலாதேவி (யாழ்.கெருடாவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை), அருணகிரிநாதன் (லண்டன்), லோகராஜா (அமரர்), அருந்தவராணி, பாலராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சொர்ணலிங்கம், கமலேஸ்வரி, செல்வமதி (சுவிஸ்), இரத்தினராசா, கோடீஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் வேலாயுதம், செந்திவேலாயுதம், தங்கராணி, கருணைவேல், அன்னராணி அகியோரின் பாசமிகு சகோதரனும் கந்தசாமி (கொழும்பு), தனலட்சுமி (கனடா), பரமேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இமையாணன்,*
*உடுப்பிட்டி மேற்கு,உடுப்பிட்டி.*

(C-33088) (40-11-12)

தகவல்:
ஸ்ரீஸ்கந்தராஜா
(மகன்)

## திருமதி சுப்பிரமணியம் பராசக்தி

வசாவிளான் முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் பராசக்தி அவர்கள் நேற்று (02.02.2004) திங்கட்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மயிலு - வள்ளியம்மை ஆகியோரின் அன்பு மகளும் அருந்தவம் (சீலைன்ஸ் கொம்பிளைக்ஸ் உரிமையாளர், உடுப்பிட்டி), ஸ்ரீதவம் (சீலைன்ஸ் கொம்பிளைக்ஸ்), பகீதரன் (மோட்டார் சைக்கிள் மெக்கானிக், உடுப்பிட்டி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவதாவின் அன்பு மாமியும், தனுஷன், கிருஷிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.02.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்வை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*யாழ்.வீதி,*
*உடுப்பிட்டி.*
T.P.NO.021-2263588 (c-33089)(37-11-12)

தகவல:
அருந்தவம் (மகன்)
சீலைன்ஸ் கொம்பிளைக்ஸ்
உரிமையாளர் (உடுப்பிட்டி).


சாகித்யா
இசை பயிலகம்
ஓகன், ஹார்மோனியம்,
மலோடிக்கா
பெப். 5, வியாழன் 9.00 a.m.
கீன் சென்ரர்,
பலாலி வீதி, திருநெல்வேலி.
ஆசிரியர்:N.செல்வச்சந்திரன்.
(26894)(37)

Lingam master - swiss
சுவிஸ் வாழ் தமிழர்களின்
முன்னணி ஆசிரியர்
Deutsch - பெரியவர்களுக்கு
Deutsch - பாடசாலை மாணவர்களுக்கு
தொடர்பு:
062 7974164 - 079 3344733,
4665 Oftringen - swiss. (26642)(36-12)

Subra (14)
சித்தன்கேணி
தரம் 6, தரம் 7 (Gove- Reg)
ஆங்கில மொழி மூலமான
புதிய வகுப்புகள்
ஆரம்பம் : 05-02-2004 மாலை 4 மணி
★ தேர்ச்சிபெற்ற விரிவுரையாளர்களால் வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன.
★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை.
★ உங்கள் பிள்ளைச் செல்வங்களின் செழிப்பான எதிர்காலத்திற்கு SUBRA என்றும் ஏணிப்படியாயிருக்கும்.
(C-33030)(37-11-12)





இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.02.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.